பக்கங்கள்: இருபது + IV = 24

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 08 ஞாயிற்றுக்கிழமை (25.10.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 333

# இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு இன்றேல் வெளிநாட்டு முதலீடுகள் மந்தமடையும்

## உலக வங்கி அறிக்கையில் தெரிவிப்பு

நியூயோர்க், ஒக்ரோபர் 25

தமிழர் பிரச்சினைக்கு - இனப்பிரச்சினைக்கு - உகந்த தீர்வு ஒன்றை இலங்கை அரசு காணத் தவறின், அந்த நாட்டிற்கான வெளிநாட்டு முதலீடுகள் மந்தமடையும். அதன் பலனாக பொருளாதார நிலை எதிர்பாராத விளைவுகளை சந்திக்க நேரிடும்.

இவ்வாறு உலக வங்கி தனது பிந்திய அறிக்கை ஒன்றில் எச்சரிக்கை செய்யும் தொனியில் கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்து வந்த போர் முடிவுற்றது பொருளாதார வளர்ச்சிக்கு உரிய பின்னணியைத் தோற்றுவித்துள்ளது.

ஆனால் தமிழர் பிரச்சினைக்கு உகந்த தீர்வு காணப்படாவிட்டால் போர் முடிவுற்றதால் கிடைக்கக்கூடிய நன்மைகள் கைக்கு எட்டமாட்டா.

குறைந்த வருவாய் உள்ள நாடாக விளங்கும் இலங்கை நடுத்தர வருவாய் பெறும் நாடாக மாறும் சந்தர்ப்பம் - சூழ்நிலை - உருவாகியுள்ளது உண்மையே. ஆனால் தமிழர்களுக்கு எதிரான பாதுகாப்பு அச்சுறுத்தல் அதாவது பாதுகாப்பு இன்மை அகற்றப்பட்டு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கும் அரசியல் தீர்வு ஒன்று நடைமுறைப்படுத்தப்படாவிடின், வெளிநாட்டு முதலீட்டிற்கான சாத்தியங்கள் நிச்சயம் குறைவடையும்.

தமிழர்களும் பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரிக்கவும், அதனை பரவலாக பெற்றுக் கொள்ளவும், சிறுபான்மை மக்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## சரத்பொன்சேகா அமெரிக்கா பயணம்

கொழும்பு, ஒக்.25

முன்னாள் இராணுவத் தளபதியும் படைகளின் பிரதம அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று அமெரிக்காவுக்குப் பயணமானார்.

அமெரிக்காவில் இரு வாரங்கள் தங்கயிருக்கும் போது தாம் புலம்பெயர்ந்த இலங்கையர்களை சந்திக்க (20ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர் நாளை

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கணிதம் -I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மெதுவாகப் பணி செய்யும் போராட்டத்தில்

### சமரசம் ஏற்படாவிடில் முழு வேலைநிறுத்தமாக மாறும்

கொழும்பு, ஒக்.25

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த மெதுவாகப் பணி செய்யும் போராட்டம் காரணமாக எரிபொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் நடத்தும் அரசின் முடிவை எதிர்த்து ஜே.வி.பி. செவ்வாயன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.25

ஜனாதிபதி தேர்தலை நடத்தும் அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தப் போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக தமது கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அரசு மீறுவதாகவும், அதைக் கண்டித்தே போராட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் பேரணி கம்பல் பார்க்கில் இருந்து(20ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை வெற்றியாளர்களுக்கான இன்றைய கௌரவிப்பு விழா வேம்படி மகளிர் கல்லூரிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.25

இவ்வருட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்திபெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூறு மாணவர்களை 'உதயன்' ஊடக அனுசரணையுடன் கௌரவிக்கும் மாபெரும் விழா இன்று காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் அரசியலில் கருணாநிதிக்குத் திட்டவட்டமான நிலைப்பாடு இல்லை

## தமிழக அரசின் தமிழ் செம்மொழி மாநாட்டில் கலந்துகொள்ளப்போவதில்லை என்கிறார் பேராசிரியர் சிவத்தம்பி



கொழும்பு, ஒக்.25

தமிழக அரசினால் நடத்தப்படவுள்ள உலகத் தமிழ் செம்மொழி ஆய்வு மாநாட்டில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என்று தமிழ்ப் பேறறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் அரசியல் குறித்து தமிழக முதல்வர் கருணாநிதி திட்டவட்டமான நிலைப்பாடு எதனையும் எடுக்காததால் பலத்த விமர்சனம் உண்டு. இந்த நிலையில் தாம் உலகத் தமிழ் செம்மொழி ஆய்வு மாநாட்டில் கலந்துகொள்வது சிரமமான விடயமாக(20ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் தங்கியுள்ள குடாநாட்டு மக்களும் நாளை முதல் யாழ்ப்பாணத்துக்கு கூட்டிவரப்படுவர்

யாழ்ப்பாணம், ஒக்.25

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து திருகோணமலை, புல்மோட்டை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

புல்மோட்டையில் இருந்து அழைத்து வரப்படுபவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அகதி முகாம்களில் இருந்து அழைத்துச் செல்லப்படுவோர்

## கிளிநொச்சி; முல்லைத்தீவில் பாடசாலைகளில் தங்கி தமது இருப்பிடங்களை துப்புரவு செய்கின்றனர்

வவுனியா, ஒக்.25

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் தங்கியுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தொகுதி தொகுதியாக அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள பாடசாலைகளில் தங்கவைக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


கடந்த சில தினங்களாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## வேம்படி மகளிர், இந்து மகளிர் கல்லூரிகளுக்கு முன்பாகவுள்ள காவலரண்கள் அகற்றப்படும்

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்.நகரப்பகுதியில் வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு முன்பாகவுள்ள பாதுகாப்பு அரண்களை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக நகரப் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ்.நகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா(20ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS - MORE CHOICE
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





கந்தஷஷ்டி விரதத்தின் இறுதித்தினமான நேற்று நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெற்ற சூரன்போர் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்:லக்ஸ்மன், உமா)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பனும் தீவகக்கல்வி வலய நிகழ்ச்சித் திட்ட உதவியாளருமாகிய க.பாலமுருகன் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சாந்தாதேவி கனகசபாபதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

*நல்லூர்.* (90269) **நண்பர்கள்.**

## 31ஆம் நாள் நினைவலைகள்



**திருமதி புலேந்திரன் நேசமலர்**

தோற்றம் 20★01★1949

மறைவு 25★09★2009

கடந்த 25.09.2009 அன்று சிவபதமடைந்த திருமதி புலேந்திரன் நேசமலர் அவர்களின் 31ஆம் நாள் நினைவில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*வீரபத்திரர் வீதி,*
*கோண்டாவில்.* (சி/561839) வை.சந்திரசேகரம் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி இராசலட்சுமி (பேபி) கஜேந்திரன்**



கில்னர் லேன், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், இல.17, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி (பேபி) கஜேந்திரன் நேற்று (24.10.2009) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் கஜேந்திரனின் மனைவியும் காலஞ்சென்றவர்களான நாதஸ்வரவித்துவான் திருநாவுக்கரசு - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - இராசம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற இராமசாமியின் பெறாமகளும் தனுஜா, முருகன், கஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயகரன் (ஜெப வீடு போதகர்), சுபாஜினி ஆகியோரின் மாமியாரும் ஜெபராணி, ஜெபநேசன், ஜெபசர்மி, அபிஷேக் ஆகியோரின் பேர்த்தியும் நாதஸ்வரவித்துவான் பாலகிருஸ்ணன், சிவா, திருவுரசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலா, தர்மா (நோர்வே), சின்னவன், அர்ச்சுன், தீபா, ராணி, நித்தியா, சித்திரா, வதனி ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (90270) தகவல்: குடும்பத்தினர்.

## நலன்புரி நிலையத்தில் மஞ்சள்காமாலை பரவுகிறது

யாழ்ப்பாணம். ஒக்.25

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் மஞ்சள்காமாலை நோய் வேகமாகப் பரவி வருவதாக சாவகச்சேரி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நோயினால் இதுவரை ஆறு பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## உள்ளூராட்சி கண்காட்சியில் வலி.தெற்கு முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த 18 ஆம் 19 ஆம் திகதிகளில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான கண்காட்சியில், வலி.தெற்குப் பிரதேச சபை முதலிடம் பெற்று விருதைச் சுவீகரித்துள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற உள்ளூராட்சிக் கண்காட்சியில் வட மாகாணத்திலுள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகள் அனைத்தும் பங்குபற்றின.

இக்கண்காட்சியில் (சிறந்த கண்காட்சிக்குரிய) முதலாவது இடத்திற்குரிய விருதினை வலி.தெற்கு பிரதேச சபை பெற்றுக்கொண்டது. இதன் பொருட்டு இச்சபைக்கு ஒரு இலட்சம் ரூபா பரிசாகக் கிடைக்கவுள்ளது.

மேலும் 2007 ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டியில் மூன்றாம் இடத்தையும், 2008 ஆம் ஆண்டுக்குரிய முகாமைத்துவப் போட்டியில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டது. (1-38)


### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேஷன் பெண், ஆண், கிறேடேன் ஆண், பொக்கெட் பெனியர் ஆண், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் பெண், ஆண், கறுப்பு வெள்ளை நிற குட்டிகளும் விற்பனைக்கு.

தொடர்பு - லிங்கமூர்த்தி மயூரன், இல.209, பலாலி றோட், கோண்டாவில். ராஜா பிளாசா முன்பாக

### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் YAMAHA MATE - 90 மோட்டார் சைக்கிளும், டொல்பின் VAN கரியரும், கறுப்பு நிற அல்சேஷன் சிறிய, பெரிய நாய்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0212225283

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் சிறந்தமுறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.

இல - 6, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, K.K.S வீதி, யாழ். தொ.பே - 021 222 8680


## மரண அறிவித்தல்கள்

**சாமுவேல் அன்பையா (சுப்பிறீன்)**



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் அன்பையா (04.10.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் - இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், அழகையா, அருளையா, காலஞ்சென்றவர்களான அம்பிகா, அலிசையா மற்றும் அருபிகா, அருபையூா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், அன்புவதி (அனுசா)யின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.10.2009) திங்கட்கிழமை பிரான்ஸ் நேரம் மதியம் 12.30 மணியிலிருந்து 1.30 மணிவரை "HOPITAL SIMON VEIL EAUBONNE" 28 RUE DU Dr.EMILE ROUX - 95602 EAUBONNE என்னும் இடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப 2.30 மணியிலிருந்து 3.30 மணிவரை CREMATORIUM DES LONCHEROLLES A VILLETANEUSE (93) (AUCHAN க்கு பின்புறம்) தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பெரியண்ணா, அழகு, கமலா, குடும்பத்தினர்
758, ஆஸ்பத்திரி வீதி, புஸ்பா, மணிமொழி (பெறாமகள்),
யாழ்ப்பாணம். (90268) விமலன் மணிவிழி (பெறாமகள்) குடும்பத்தினர்.

**மாரிமுத்து சிவராஜா**



குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல. 110/1, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சிவராஜா நேற்று (24.10.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - நாகமுத்து தம்பதியினரின் செல்வப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - லக்சுமி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பசுபதி மற்றும் தங்கம்மா, கனகசபை, கண்மணி, சற்குணம் ஆகியோரின் அருமைச் சகோதரனும், பத்மஜோதி, விஜயகுமார், பத்மசிறி, விஜயரெட்ணம், ஜாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமாரன், சிறிதரன், சிறிப்பிரியா, ரவிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கீர்த்தனா, சகானா, ருபிஷன், லரினா, லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் நாகராஜா, யோகராஜா, காலஞ்சென்ற பரமராஜா மற்றும் கமலராஜா, லீலாவதி, மனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*110/1, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (90297)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.
தொடர்பு T.P. 0212227311
Sri Lanka - 00940212227311


FedEx Express

உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

இப்போது வட்டுக்கோட்டையிலும்

குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

திருமுருகன் கொம் நெற்

TCN EXPRESS
28, Nelsan Place, Colombo -06

மற்றும் முகவரியில் ஒப்படைக்கப்படும்.

259,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மீளக் குடியமர முடிந்தும் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க இயலாது அந்தரிக்கும் மாணவர் சமுதாயம்

வன்னியில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தில் சிக்கி ஒருவாறு உயிர் தப்பிப் பிழைத்து அகதி முகாம்களில் அடைபட்டு அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் எமது உறவுகள் இப்போது மெதுமெதுவாக கட்டம் கட்டமாக அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

அரசின் இத்தகைய மீள்குடியேற்ற செயற்பாடுகள் மிக மெதுவாக ஆமை வேகத்தில் இடம்பெற்று வந்தாலும், எமது உறவுகள் தமது சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்தப்பட்டு வருகின்றமை மனதுக்குச் சற்று ஆறுதல் தருமொன்றாகும்.

எமது உறவுகள் வன்னியில் பரவலாகத் தாம் வாழ்ந்து வந்த இடங்களிலிருந்து வெவ்வேறு இடங்களுக்கு அடிக்கடி இடம்பெயர்ந்து இறுதியாக தாம் இடம்பெயர்ந்து வாழ்ந்த இடங்களுக்கு அண்மித்ததாகப் போர் நெருக்கடிகளை எதிர்கொண்டு உயிர் தப்பினால் போதும் என்ற மனநிலையில் அங்கிருந்து வெளியேறி அகதிமுகாம்களில் தங்கி பலமாதங்களாக அவலங்களைச் சந்தித்து வந்தனர்.

தற்போது கட்டம் கட்டமாக அவர்கள் தாம் முன்னர் வாழ்ந்த அவர்களுடைய பழைய இடங்களில் குடியேற்றப்பட்டு வருகின்றனர். இச்செயற்பாடுகள் மிக மிக மெதுவாக அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பரவலாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தற்போது அவர்கள் மீளக் குடியமர்த்தப்படுவது அவர்கள் முன்னர் வாழ்ந்துவந்த இடங்களாக இருந்தபோதிலும் அவர்களது வாழ்வியல் என்பது முற்று முழுதாக புதிதாக ஆரம்பிக்கப்படுமொன்றாகவே ஆகியுள்ளது. தாம் அது நாள்வரை ஆண்டுஅனுபவித்த தமது சொத்துக்களை முற்றுமுழுதாக இழந்தும், தமது குடும்பத்து உறுப்பினர்கள், நெருங்கிய உறவினர்கள் எனத் தம் உறவுகளை யுத்தத்தில் பறிகொடுத்தும் எதிலிகளாகத்தான் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் அவர்களது வாழ்வியலின் சுட்டமைப்பை மீண்டும் துளிர்க்க வைப்பதற்காக அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரைந்து செயலாற்ற வேண்டியுள்ளமை இன்றைய காலத்தின் தேவையாகும்.

இன்று இவர்களது வாழ்வியல் சீரமைப்பில் மிக முக்கிய அம்சமொன்றான எதிர்கால சந்ததியினரின் கல்வி அபிவிருத்தி பற்றியும் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

மீள்குடியமர்த்தப்படுகின்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதில் பல்வேறு இடையூறுகளை, முட்டுக்கட்டைகளை எதிர்கொள்கின்றனர் என்பது யதார்த்தமானதொன்றாகும். இது எந்த விதத்திலும் மறைந்துவிட இயலாத பெரும் முக்கியத்துவம் மிக்க விடயமாக கொள்ளத்தக்கதாகும்.

இந்த விடயத்தில் எமது கல்வித்துறைசார் அதிகாரிகள் சற்றுக் கவனம் செலுத்தி இடம்பெயர்ந்த மாணவர்கள் விடயத்தை மனிதாபிமான பார்வையுடன் கையாண்டு அம்மாணவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி உதவுவது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவை என்று சொல்வதைவிட வரலாற்றுத் தேவையுமாகிறது.

### யுத்தம் காரணமாக கல்விச் சான்றிதழ்களைத் தொலைத்துவிட்டு அலைந்து திரியும் மாணவர்கள்

போரின் உச்சக் கட்டத்தில் சிக்குண்டு தமது சிந்தனைமுதல் சொத்துக்கள் வரை அத்தனையையும் இழந்து சிதறுண்டு உயிர்தப்ப ஓடிப் போனவர்களில் மாணவர்கள் கணிசமான தொகையினராவர். குறிப்பாக மாணவர்களில் அநேகமானவர்கள் அதிலும் உயர்தரப் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சை என்பவற்றில் தோற்றி அவற்றுக்கான பெறு பேற்றுச் சான்றிதழ்களை பாடசாலைகளில் இருந்து பெற்றுத் தம்முடனேயே வைத்திருந்தவர்கள் பலர். யுத்தம் காரணமான இடப் பெயர்வுகளின் போது அதனைத் தொலைத்து விட்டார்கள். அதுவுமன்றி யுத்தத்தில் சிக்குண்ட காரணத்தால் பல மாணவர்களது கல்வி தொடர்பான ஆவணங்கள் அழிந்தும் போய் விட்டன.

இத்தகைய திரிசங்கு சொர்க்க நிலையில் அத்தகையவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு மற்றும் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்குமென கல்விச் சான்றிதழ்கள் இல்லாமையால் கல்வி வலயங்களுக்கு அவற்றைப் பெற நாளாந்தம் அலைந்து திரிகிறார்கள்.

பாடசாலை ஊடாக கல்விபெறுபேற்றுச் சான்றிதழ், ஒரு தடவைக்குமேல் வழங்கப்படலாகாது என்றவொரு பொதுநிபந்தனை தற்போதும் நடைமுறையில் உள்ளது. அதனால் தாம் தொலைத்த தமது கல்விச் சான்றிதழ்களுக்குப் பதிலாக வேறு சான்றிதழ் மீளவும் கிடைக்குமா? என்ற ஏக்கம் கலந்த மன உளைச்சலுடன் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மாணவர்கள் காணப்படுகின்றார்கள்.

### மீளக்குடியமர்ந்த பொது மக்களது பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் அனுமதி மறுக்கப் படுகிறது

அத்துடன் மீள்குடியமர்த்தப்படுகின்ற மாணவர்கள் தாம் கல்வியைத் தொடர விரும்பி பாடசாலைகளில் அனுமதி கேட்டுச் செல்கின்போது, பாடசாலைகளின் அதிபர்கள் பல்வேறு நொண்டிச்சாட்டுக்களைக் கூறி அவர்களுக்கு பாடசாலைகளில் அனுமதிக்க மறுத்து வருகின்றனர்.

யுத்தம் இடம்பெற்ற வேளை கிளிநொச்சியில் இருந்த மாணவியொருவர் புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தற்போது தரம் 9 இல் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய கல்லூரி ஒன்றுக்கு அனுமதி கேட்டுச்சென்ற போது அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

''நீர் முன்னர் படித்த பாடசாலையின் அதிபரிடம் உமது கல்வி தொடர்பான உறுதிப்படுத்தல் கடிதம் ஒன்று வாங்கி வந்தால்தான் அனுமதி வழங்கப்படும்'' என நொண்டிக் குற்றச்சாட்டொன்றைக் கூறி அம்மாணவியைத் திருப்பி அனுப்பிவிட்டார் அந்தக் கல்லூரியின் அதிபர்

உண்மையில் அந்த மாணவி யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர். இடப்பெயர்வின் காரணமாக வன்னிக்குச் சென்று தற்காலிகமாக அங்குள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்று தற்போது அரசினால் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் தாம் முன்னர் படித்த பாடசாலையின் அதிபரை எங்கு, எப்போது சந்திப்பது? கோரப்படும் உறுதிப்படுத்தல் கடிதத்தை எவ்வாறு அந்த அதிபரிடமிருந்து வாங்குவது? அந்த அதிபர் தற்போது உயிருடன் இருக்கிறாரா? அல்லது ஏதாவதொரு அகதிமுகாமில் உள்ளாரா? இத்தனை கேள்விகளுக்கும் விடை தேடிப் பிடித்தால்தான் குறிப்பிட்ட அந்த மாணவியால் பாடசாலையில் கல்வியைத் தொடர்வதற்கான தனது பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை அந்த மாணவி கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள இயலாதா? என்பதை பாடசாலை அதிபர்கள், கல்விவலயங்களின் பணிப்பாளர்கள், கல்வித்துறைசார் அதிகாரிகள் சிந்திக்கத்தவறிவிட்டார்களா?

அல்லது வேண்டுமென்றே இவ்விடயத்தில் அக்கறையேதுமின்றி நடந்து கொள்கிறார்களா?

### உயர்தரவகுப்புகளில் அனுமதி பெறமாணவர்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல

வன்னியில் கடந்த வருடம் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இன்றுவரை அவர்களது பரீட்சைப் பெறுபேறு வழங்கப்படவில்லை.

அத்துடன் கணித பாடப்பரீட்சை மீள்பரீட்சை சகல மாவட்டங்களிலும் நடத்தி முடிக்கப்பட்ட போதும் வன்னியில் நடத்தப்படவில்லை. இதனால் அந்த மாணவர்கள் தாம் சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தோமா? அவ்விதம் சித்தியடைந்திருந்தால் தாம் உயர்தர வகுப்புக்கு எந்தத் துறையினைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலாம் என்கின்ற குழப்பகரமான நிலையில் சிரமப்படுகின்றனர். பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் இணைந்து கல்வி கற்க அனுமதி கேட்டுச் சென்றால் அங்குள்ள அதிபர்கள் வழக்கம் போல் கைவிரித்து விடுகிறார்கள்.

சில பாடசாலைகளில் அனுமதி கோரிச் செல்கின்ற போது தமது பாடசாலையில் உயர்தர வகுப்புகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளதால் அனுமதி வழங்க இயலாதுள்ளது எனவும் அதிபர்கள் இலேசாக நொண்டிச்சாட்டுக்கூறி விடுகிறார்களாம்.

# மழை விட்டும் தூவானம் போகவில்லை என்ற நிலையில் இடம்பெயர்ந்த மாணவர்கள் இன்று

மீளக்குடியமர்ந்து தமது கற்றல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்க முயலும் மாணவர்கள் இத்தகைய பல்வேறு நெருக்கீடுகளைச் சந்திக்க நேர்வதால் கல்வியில் திறமை இருந்தும் தமது கல்வியைத் தொடர முடியாமல் தமது கற்றல் செயற்பாடுகளுக்கான காலத்தை வீணே அவமாக எவ்வித பிரயோசனமுமின்றி கழிக்க நேர்ந்துள்ளது.

### கல்வித்துறைசார் பொறுப்புள்ள அதிகாரிகளே சிந்தியுங்கள் விரைந்து செயலாற்றுங்கள்

அகதி முகாம்களில் இருந்து பொதுமக்கள் நாளாந்தம் தத்தமது சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக பாடசாலைகளில் இட நெருக்கீடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. இதனைக் கருத்தில் எடுத்து செயலாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பினை காலம் உங்கள் மீது சுமத்தியுள்ளது

எவ்வளவுதான் துயரங்கள் எங்களைத் ஓடஓடவிரட்டினாலும், வாழ்க்கையில் மற்றெவற்றைத்தான் இழந்தாலும் கல்வியே தமிழர்களின் மூலதனம் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விட இயலாது.

எனவே வெறுமனே விழாக்களை எடுத்து ஆரவாரம் செய்வதை விடுத்து மீள்குடியமர்த்தப்படுகின்ற மாணவர்களது கல்விச் சான்றிதழ், பாடசாலை அனுமதி, எனப் பல்வேறு தேவைகளை இனம் கண்டு உயர்மட்டங்களுக்கு மாணவர்களது பிரச்சனைகளைத் தெரியப்படுத்தி உடனுக்குடன் அவர்களுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் விதத்திலான நடவடிக்கைகளுக்காகக் களமிறங்குங்கள்.

உங்களது துரித நடவடிக்கைகள் மூலம் அம் மாணவர்களது மனங்கள் மன உளைச்சலுக்குள்ளாகாமல் அவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பும், காலமும் பின்தள்ளிச் செல்லப்படாமல் துரிதமாகவும், மகிழ்ச்சியாகவும் அவர்கள் தமது கல்வியினைத் தொடர உதவுவதன் மூலம் அர்ப்பணிப்பு உணர்வ மிக்க கல்விச் சேவையை மேற்கொள்ளும் தாப்பிரனான நீங்கள் மாணவ சமுதாயத்தின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டிகளாக அமைய முடியும்.

கவிநேசன்

# புலம்பெயர் தமிழ் மக்களுடனான தொடர்பாடல் உறவினை இலங்கை வாழ் தமிழர்கள் மேம்படுத்த வேண்டும்

''புலம்பெயர் தமிழர்களுடன் ஒன்றிப்பு தாயகத் தமிழர்களுக்கு இன்று அவசியம்'' என்ற உதயனின் ஆசிரிய தலையங்கம் (21.10.2009) ஒரு நல்ல சிந்தனையை தமிழ் மக்கள் முன் வைத்துள்ளது. காலத்தின் தேவையை உணர்ந்து இச்சிந்தனையை வெளிப்படுத் தியது மிகவும் பொருத்தமானதே.

இன்று தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவது ஒன்றே தமிழ் மக்களின் விருத்திக்கு வழியேற்படுத்திக் கொடுக்கும் என்பது மக்களிடைய பரந்துபட்டுக் காணப்படும் ஒரு நம்பிக்கை. நான் பலரோடு பேசிப்பார்த்ததில் இது தெரியவருகின்றது. இந்த ஒற்றுமை பின்வரும் வகைகளில் ஏற்படலாம்

1. தாயகத் தமிழர்களிடையே ஒற்றுமை
2. புலம் பெயர்ந்த தமிழர்களிடையே ஒற்றுமை
3. புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் தாயக தமிழர்களுக்கும் இடையிலான ஒற்றுமை

இவ் ஒற்றுமைகளின் வாயிலாக வெளிக்கிளம்பும் ஒரு பொதுச் சிந்தனையின் மூலம் தான் தமிழ் மக்கள் தமது நல்வாழ்வை கட்டியெழுப்ப முடியும்.

## இன்றைய தேவைகளில் தென்னிலங்கை மக்களுடனான தொடர்பும் சமாந்தரமாகத் தேவை

புலம் பெயர்ந்த தமிழர்கள், தாயகத் தமிழர்களிடையே ஒரு சரியான தொடர்பாடலை மேம்படுத்துவதன் மூலம் உதயன் ஆசிரியர் கூறுகின்ற ஒன்றிப்பை ஏற்படுத்த நாம் முயலலாம். இந்த மேம்பட்ட தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கு தாயகத் தமிழர்களின் உரிமைக் கோரிக்கை பற்றி அவர்களின் அக்கறையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையே நான் கடந்த காலங்களில் ஊடாடியபோது அவர்கள் தாயகம் பற்றிய இரண்டு விடயங்களில் முக்கிய அக்கறை செலுத்துவதை அறிந்துகொண்டேன்.

தாயகத்தில் வாழும் தமிழர்கள், சம உரிமையோடு சுதந்திரமாக வாழவேண்டும் என்ற அவர்களது அபிலாசை நாம் வாழும் நாடுகளில் மக்களுக்குள்ள சுதந்திரம் அந்த நாடுகளினதும், மக்களினதும் வளர்ச்சிக்கு எந்தளவு தூரம் உறுதுணையாக உள்ளது என்பதை அவர்கள் நேரடியாகக் கண்டுணர்ந்தவர்கள். சிறப்பாக அங்குள்ள இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகள் தமக்குக் கிடைக்கும் சுதந்திரம் எந்தளவு தூரம் மனிதர்களின் உச்ச வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது என்பதை அனுபவித்துணர்ந்தவர்கள். இதன் காரணமாக தாயகத்தில் வாழும் தமது உறவுகள் சுதந்திரமாக வாழ வேண்டும். அவ்வாறு சுதந்திரமாக வாழ்வதன் மூலமே அவர்கள் ஒரு உச்ச வளர்ச்சியை பெறமுடியும் என்ற வேட்கையோடு உழைப்பதை கண்டேன்.

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் எவ்வளவு தான் பணத்தைச் சேர்த்தாலும் தமது தமிழ் அடையாளத்தை இழந்து வாழ விரும்பவில்லை. தமிழ் அடையாளத்தை இழந்தால் தமது பிள்ளைகளை அந்நிய பண்பாட்டிடம் இழந்து விடுவோம் என அஞ்சுகிறார்கள்.

தாயகத்தில் தமிழ் பண்பாட்டானது பாதுகாப்போடும் தலைநிமிர்வோடும் இருந்தால் தமது பிள்ளைகளை குறைந்தது வருடம் ஒருமுறையாவது தாயகத்திற்கு அழைத்து வந்து தமது உறவுகளோடு கலக்கவைத்து தமிழ் பண்பாட்டின் சுவையை அனுபவிக்கச் செய்யலாம் என்பது பெற்றோர்களின் நம்பிக்கை.

இந்த அக்கறைகளின் காரணமாக புலம் பெயர்ந்த தமிழர்கள் தாயகத் தமிழர்களின் உரிமையைப் பெறும் முயற்சியில் தாமும் பங்களிப்பதற்கு தயாராகவே உள்ளார்கள். அது மட்டுமல்ல தமிழர்களுக்கு உரிமை கிடைத்தபின் தமிழர்களின் பங்களிப்போடு நடக்கும் அபிவிருத்தி முயற்சிகளிலும் தாங்கள் பங்களிப்பதற்கு தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அவர்களுடைய இந்த அக்கறைகளைப் புரிந்து கொண்ட நாம் அவர்களோடு ஊடாடும்போது அவர்களிடையேயும் ஒற்றுமையையும், பொதுச்சிந்தனையையும் ஏற்படுத்தலாம் என்பது நான் அவர்களோடு பழகிய அனுபவத்தில் பெற்ற நம்பிக்கையாகும்.

இதே சமயம் புலம்பெயர்ந்த தமிழர்களும் தாயகத்தில் உள்ள யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். இன்றைய காலச்சூழலுக்கேற்ற செயற்பாடுகளுக்கு அவர்களும் அனுசரனை வழங்க வேண்டும். தாயகத்தில் தனித்துக் கிடக்கும்

## உரைகல்

தமிழ் சமூகம் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஒருபுறம் தெற்கிடம் பணிந்து போதல், மறுபுறம் தெற்கை எப்போதும் எதிர்த்து நிற்றல் என்பவற்றை விடுத்து தமிழ்ச் சமூகம் தன்னைப் பெறுத்தளவில் தனது அடையாளத்தைப் பொறுத்தளவில், தனது உரிமைகளைப் பொறுத்தளவில் ஒரு வலுவடைந்த நிலையில் நின்று கொண்டு தெற்கோடு ஒரு சரியான உரையாடலை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு பக்குவ நிலைக்கு தமிழ்ச் சமூகத்தை வளர்த்தெடுப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பும் முக்கியமானது.

இத்தகைய பணியில் ஊடகங்களுக்கு ஒரு சிறப்புக் கடமை உண்டு. தமிழ் ஊடகங்கள் தமிழ் மக்களுடைய உரிமையைப் பெறுவதற்காக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கடந்த காலத்தில் கணிசமான பங்கு வகித்தது. அவ்வாறே இன்றைய கால கட்டத்தின் வித்தியாசத்தை புரிந்துகொண்டு அதற்கேற்ப புதிய முறையில் அவர்கள் பணிசெய்ய வேண்டும். மக்களிடம் கற்பனையை வளர்க்கும் விதத்தில் புதிய கருத்துக்களுக்கு அவர்கள் ஊடகங்களில் இடம் தரவேண்டும்.

நாம் எல்லோரும் சேர்ந்து புதிய ஒரு அரசியல் பண்பாட்டை தோற்றுவிக்க முயல்வோம். இப்புதிய அரசியல் பண்பாட்டின் தோற்றமே இன்றைய சூழலில் தமிழ்

[illegible] ம்பரநாதன்,
[illegible] மன்ற உறுப்பினர்,
யாழ் மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

வங்கி முகாமையாளர் பாவனையில் உள்ள 1 ஸ்ரீ, 2ஸ்ரீ கறுப்பு நிற மைனர் கார்கள் இரண்டு உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: 0777589728 (சி-561833)

## புறொயிலர் குஞ்சுகள் விநியோகம்

No.1 பகீரா இன புறொயிலர் குஞ்சுகள் (35 நாள்களில் 2Kg மேல் வளரக்கூடியது) 28.10.2009, 31.10.2009 திகதிகளில் விநியோகிக்கப்படவுள்ளது. விநியோகங்கள் வரையறுக்கப்பட்டவை.
சுஜி கனஞ்சியம், தேவிபாம்பை, வல்வெட்டித்துறை. T.P: 0212263511
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி. T.P:0217912783

## இறைச்சிக் கோழிகள் விற்பனை

புறொயிலர், கல்பேட், ஊர்காவல்கள், முட்டை என்பன மலிவான விலையில் வேண்டிய அளவுகளில் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி.
T.P:0217912783 (90257)

# மரண அறிவித்தல்கள்

### செல்வி சிவராசா திசாளினி (சாளி)

(மாணவி, நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை)



சக்களாவத்தை, கரணவாய் வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரான செல்வி சிவராசா திசாளினி 22.10.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவராசா- விஜிதா தம்பதியினரின் அன்பு மகளும், பொன்னம்பலம்- கமலாதேவி தம்பதியினரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.10.2009 அன்று அவரின் இல்லத்தில் இடம்பெற்று ஆலங்கட்டை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் வடக்கு, கரவெட்டி. (சி-561831)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி அன்னபூரணம் இராசையா (வில்லியம்)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் இராசையா (23.10.2009) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் இராசகுமார், இரவிக்குமார், உதயகுமார், சுதாகர் ஆகியோரின் அன்புத் தாயும் பரமேஸ்வரி, கமலராணி, தர்மராணி, நளினி ஆகியோரின் அன்பு மாமியும் செல்லையா சிவராஜாவின் (கொழும்பு) சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருண் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய். (90260)
தகவல்: இ.இராசகுமார் (மகன்), பிள்ளைகள், மருமகள்மார்.

### செல்லத்தம்பி சிவஞானம்



தனங்கிளப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாவும், பெருங்குளம், சங்கத்தானை வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி சிவஞானம் நேற்று (24.10.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி- புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், ரூஜி (லண்டன்), வினோதா (லண்டன்), சியாமளா (சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாலன் (இலங்கை), விவேகானந்தன் (ஜேர்மனி), தாம்பிரவர்ணன் (இலங்கை), வரதராசன் (சுவிஸ்), தயாபரன் (ஜேர்மனி), ஞானவரோதயன் (இலங்கை), விஜயலக்ஸ்மி (இலங்கை), மகேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் சகோதரரும், சிவநேசன் (லண்டன்), கிருஷ்ணதாசன் (இலங்கை), பகீதரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், விதுர்ணா (லண்டன்), வியாசன் (லண்டன்), தேனுகா, கிருசாந்தன், லக்சிகா (இலங்கை), கீர்த்திகன் (லண்டன்), அபினா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், மதிவதனா, அரியராணி, மனோறஞ்சிதம், சுபா, சாரதா, கோகிலவதனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருங்குளம், சங்கத்தானை வீதி, சாவகச்சேரி. (90261)
தகவல்: குடும்பத்தினர்.

## உடன் விற்பனைக்கு

பழைய தளபாடங்கள், கைத்தொழில் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. இன்று மட்டும். மேலும் சிறு கைத்தொழில் பழக ஆர்வமுள்ளவர்களும் தேவை. பயிற்சிக்காலத்தில் சம்பளம் வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு :-
356, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 0217903020 (90263)

## தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த வரதராஜன் மிகுதாகரன் என்பவருடைய அடையாள அட்டை (891353251V) மற்றும் வாகன அனுமதிப்பத்திரம் என்பன சுன்னாகம் சூழலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். T.P 0772247510

## வீடு, காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலும் காரைநகர் வீதிக்கு அண்மையிலும் உள்ள 5 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771508099 (சி/561829)

# மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பத்மநாதன்

(Retired Accountant, Marketing Department)



காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பத்மநாதன் 23.10.2009 வெள்ளிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னாசிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும் மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் பிரபானந்தா (லண்டன்), அமிர்தானந்தா, அருந்ததி (வேல்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிசாந், பிரியா, ஆஸ்பனா, டேவிற் ஆகியோரின் அன்புப் பேரனும் கல்யாணி ஆன், Nigel ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, டாக்டர் குணநாயகம், இராசநாயகம் மற்றும் நேசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (26.10.2009) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் கல்கிசை பொது மயானத்தில் பிற்பகல் 5 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11, அல்பேட் பிளேஸ், தெஹிவளை.
தொ.பே.: 0112726667
தகவல்: மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.
(சி/561912)

## பயிற்சிப் பட்டறை

நாவற்குழி, ஒக்.25

வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் 'சரிநிகர் சமானமாக' வினைத்திறன் விருத்திப் பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நாளை தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரை யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற இருக்கிறது.

யாழ்ப்பாணபிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1-288)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் தெற்கில் அரச மருத்துவமனைக்கு முன்பாக நிலப்பரப்பு பதினைந்து குளி பதினாறு விஸ்தீரணமான வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்ட, விவசாயம் செய்ய உகந்தது. சுன்னாகம் சந்தியில் இருந்து ½ மைலுக்குள் உள்ளது.

தொடர்பு:
011 2365679 (சி/561913)

## பொன்விழா

புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் பொன் விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் கலந்து கொள்வார். (1)

## VACANCIES IN A LEADING SUPERMARKET - JAFFNA

- ASSISTANT ACCOUNTANT
- IT PERSON

தேவையான தகைமைகள்

compulsary "O" Level Maths& English
Should Be "A" Level Qualified
Accounting Knowledge
Computer Knowledge

உங்கள் சுயவிவரக் கோவையை அனுப்ப வேண்டிய முகவரி

Human Resource Manager ANFC
178, Central Road, Colombo - 12.
E-Mail : anfcc@sltnet.lk
Contact Tel. No : 2434812

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய பொறுப்புரிமையாளர்சபையில் நீண்டகால அங்கத்தவராக இருந்து ஆலய வளர்ச்சிக்காக உழைத்த அம்பலவாணர் செல்வராசா அவர்களின் மறைவு எங்களை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம், காரைநகர்.
பொறுப்புரிமையாளர் சபை. (90259)

## கண்ணீர் அஞ்சலி



வலி.கிழக்கு பிரதேச சபை, கோப்பாய் உப அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரியும் திருமதி அருள்ராஜன் சோபனா அவர்களின் அன்புத் தந்தை

**கந்தசாமி நாகராஜா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## Computer Express

Institute of Information Technology



யாழ் நகரில் முதன் முறையாக அனைத்து தொழில்சார் கணனிக்கற்கை நெறிகள் கணனி ஆர்வலர்களின்நலன் கருதி புதுப் பொலிவுடன் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| Professional Diploma in Microsoft Office 3500/= 3 Months | Diploma in Printing Technology & Desk top Publishing ~~22500/=~~ 4500/= 4 Months | Diploma in Server Technology & Web Page Designing ~~22500/=~~ 4500/= 3 Months |
| Diploma in Graphic Designing & Adverdisement Marketing ~~22500/=~~ 4500/= 4 Months | Diploma in Hard ware Engineering & Net working ~~20000/=~~ 4000/= 3 Months | Diploma in Computerized Accounting & E- Commerce ~~22500/=~~ 4500/= 3 Months |
| Diploma in Computer Seience & Programming ~~22500/=~~ 4500/= 4 Months | Diploma in Auto cad & Arcetecture Designing ~~22500/=~~ 4500/= 3 Months | Honours Diploma in Information Technology ~~32500/=~~ 6500/= 6 Months |

100 % செய்முறைப்பயிற்சி ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும் கிறமை முறையில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

50 % Advance Courses
Diploma in Film Technology & Video Editing ~~10000/=~~ 5000/= 4 Months
Diploma in Studio Technology & Multy Media ~~9500/=~~ 4750/= 4 Months

ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்
குறைந்த கட்டணம் வரையறையற்ற செய்முறைப்பயிற்சி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்




No.167, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 8250

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| Batch I | 28.10.2009 9.00 a.m. or 3.00 p.m |
| Batch II | 30.10.2009 9.00 a.m. or 3.00 p.m |
| Batch III | 31.10.2009 10.00 a.m. or 2.00 p.m |
| Batch IV | 01.11.2009 10.00 a.m. or 2.00 p.m |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயக்கப் போவது யார்?

அஜித்தின் 50ஆவது படத்தை இயக்கும் நெறியாளர்கள் பட்டியலில் இப்போது கே.எஸ்.ரவிக்குமாரும் இடம்பிடித்திருக்கின்றார். ஏற்கனவே கே.எஸ்.ரவிக்குமார் அஜித்தை வைத்து இயக்கிய 'வில்லன்', 'வரலாறு' ஆகிய இரண்டு படங்களும் ரசிகர்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றவை. இந்நிலையில் 'ஏகன்' படம் தந்த படுதோல்வியால் தன்னுடைய ஐம்பதாவது படத்தில் நெறியாளரைத் தெரிவு செய்வதில் மிகுந்த அவதானமாக இருக்கிறார் அஜித். நம்பிக்கைக்குரிய இயக்குனரான கே.எஸ்.ரவிக்குமாரை வைத்துத் தன்னுடைய 50ஆவது படத்தை இயக்கினால் அதுவும் நிச்சயம் வெற்றிபெறும் என்று அஜித் எண்ணுவதால், ரவிக்குமாரும் அஜித்தும் மீண்டும் இணைந்து ஒரு வெற்றிப் படத்தைத் தருவதற்கான சாத்தியங்கள் அதிகமாகத் தென்படுகின்றன. ★

# திடீர் மாற்றம்



படம் எடுப்பதில் மிக நீண்டகாலம் இழுத்தடிப்பவர் என்றொரு குற்றச்சாட்டு செல்வராகவன் மீது கூறப்படுவதுண்டு. இவர் இயக்கத்தில் கார்த்தி நடித்துவரும் ஆயிரத்தில் ஒருவன் திரைப்படம் இரண்டரை வருடங்களைக் கடந்த பின்பும் இன்னும் முடிந்தபாடில்லை. இந்நிலையில் விக்ரம், சுவாதி நடிக்கும் புதிய படமொன்றைச் சத்தமில்லாமல் இயக்கி வருகிறார் செல்வராகவன். அண்மையில் லடாக் என்ற இடத்துக்கு விக்ரம், செல்வராகவன் உள்ளிட்ட படக்குழுவினர் பயணித்துள்ளனர். மிக விரைவில் இப்படத்தின் இரண்டாம் கட்டப் படப்பிடிப்புகள் சென்னையில் ஆரம்பமாகவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. வழமையாக இழுத்தடிக்கும் இயக்குனர் இவ்வாறு திடீர் உற்சாகம் வந்தவராக வீறுகொண்டெழுவதற்கு என்ன காரணம் என்று புரியாமல் விழிக்கின்றது தமிழ்த் திரையுலகம். ★★★

# நியூயோர்க்கில் தீபாவளி



கௌதம் மேனனின் இயக்கத்தில் சிம்பு, திரிஷா நடித்துவரும் படம் 'விண்ணைத்தாண்டி வருவாயா'. அடுக்கு வசனங்கள், ஆர்ப்பாட்டமான சண்டைக்காட்சிகள், விரல்வித்தை என ஒரு வணிக ரீதியான கதாநாயகனாக வலம் வந்த சிம்பு இப்படத்தில் தன்னுடைய பழைய விளையாட்டுகளையெல்லாம் மூடைகட்டி வைத்துவிட்டு மிக அமைதியான இளைஞனாக நடித்து வருகிறார். சிம்புவின் பாத்திரத்தைப் போலவே படத்தின் கதையும் அமைதியான அழகான காதலை மையமாகக் கொண்டது. இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகின்றது. இதனால் இம்முறை தீபாவளியை சிம்புவும் திரிஷாவும் நியூயோர்க்கில் கொண்டாடி மகிழ்ந்துள்ளார்கள்.

★★★★★★★★★★★

# காதல் திருமணம்




தனுஷ் நடித்த 'சுள்ளான்' படத்தில் அறிமுகமானவர் நடிகை சிந்துதுலானி. அதன்பின்னர் சிம்புவுடன் மன்மதன் படத்திலும், புதிய இயக்குனர் ஒருவரின் 'அலை அடிக்குது' என்ற படத்திலும் நடித்தார். அழகிருந்தும், திறமையிருந்தும் இவர் நடித்த படங்கள் எதுவும் வெற்றிக்கோட்டை எட்டாததால் தமிழில் ராசியில்லாத நடிகையாக சிந்துதுலானி ஓரங்கட்டப்பட்டார். எனினும் தெலுங்கில் அவருக்கு வாய்ப்புகள் குவிந்தன. தெலுங்கின் பிரபல இயக்குனரான சுரேந்தர்ரெட்டிக்கும் சிந்துதுலானிக்கும் இடையே காதல் மலர்ந்தது. விரைவில் இவர்கள் இருவரும் திருமணம் செய்யப்போவதாக முறைப்படி அறிவித்துள்ளனர். ★★★★★



# திரைவிமர்சனம்

# பேராண்மை



ஜெயம்ரவி, பொன்வண்ணன் போன்றோரின் நடிப்பில் ஜனநாதனின் இயக்கத்தில் வெளிவந்துள்ள படம் 'பேராண்மை'.

நேர்மை தவறாத வனத்துறை அலுவலர் ஜெயம்ரவி. இவரின் பொறுப்பிலிருக்கும் காட்டுப் பகுதிக்கு பயிற்சிக்காக கல்லூரி மாணவிகள் ஐந்துபேர் வருகிறார்கள். இதேவேளை சாதிவெறி பிடித்த மேலதிகாரி பொன்வண்ணனால் அடிக்கடி அவமானப்படுத்தப்படுகிறார் ஜெயம்ரவி. இதேவேளை பயிற்சிக்கு வரும் மாணவிகளும் தமக்கு இடையூறாகவிருக்கும் ஜெயம்ரவி மீது வீண்பழி சுமத்துகிறார்கள். இதன்போதெல்லாம் தன் கோபத்தைக் கட்டுப்படுத்தி பொறுமை காக்கிறார் ஜெயம்ரவி. இந்நிலையில்தான் இந்தியாவில் செயற்கைக்கோளை அழிக்கும் நோக்குடன் அந்தக் காட்டுப் பகுதிக்கு வந்துள்ள கூலிப்படை பற்றி ஜெயம்ரவி தெரிந்துகொள்கிறார். அவர்களைக் கல்லூரி மாணவர்களின் துணையோடு அழித்து இந்தியாவின் செயற்கைக் கோளினையும் ஜெயம்ரவி காப்பாற்றுவதே பேராண்மை படத்தின் கதைக் கருவாகும்.

வித்தியாசமான கதைக் களத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது இத்திரைப்படம். காடு பற்றிய புதிய தகவல்கள், நவீன ஆயுதங்கள் பற்றிய விளக்கங்கள் என்பனவெல்லாம் மிகச் சரியாகப் படத்தில் கையாளப்பட்டுள்ளது. பாத்திரத்துக்கேற்ற வகையில் கட்டுக்கோப்பான உடலோடு தோன்றும் ஜெயம்ரவி நடிப்பிலும் ஜொலிக்கிறார்.

காட்டின் அழகை அள்ளியெடுத்து திரையில் அப்படியே காட்டியிருக்கிறது எஸ்.ஆர்.சதீஸ்குமாரின் ஒளிப்பதிவு. ஆயினும் வித்தியாசாகரின் இசை ஏமாற்றத்தையே தருகிறது. இயற்கை, ஈ படங்களின் வரிசையில் இன்னுமொரு வித்தியாசமான வெற்றிப்படத்தை தந்துள்ள இயக்குனர் ஜனநாதன் பாராட்டப்பட வேண்டியவரே.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




"நான் இந்த 'ராட்சஷி' உமக்கு பதில் சொல்கிறேன். மனிதக் குழந்தை என்னுடையது. நொண்டிப்பயலே- என்னுடையது என்றால் எனக்கு சொந்தம் என்று அர்த்தம். அதை யாரும் கொல்லமுடியாது. அது எங்கள் குட்டிகளுடன் ஓடித்திரிந்து வளர்ந்து வேட்டையாடும். கடைசியில் இங்கே பார் உடையணியாத குழந்தைகளை வேட்டையாடுபவனே! தவளைதின்னி! உன்னையும் வேட்டையாடுவான் தெரிந்ததா? இப்போ போய்விடு- இங்கு திரும்பியும் பாராதே" என்று உறுமினா.

அப்பா ஓநாய் ஆச்சரியமாகப் பார்த்தார். அம்மா ஓநாயை தாம் வேறு ஐந்து நாய்களுடன் சண்டையிட்டு வென்றெடுத்ததை அவர் மறந்தே போய்விட்டார். ஆசைக்கும் கூட அவாவை ராட்சஷி என்று எவரும் கூறியதில்லை.

அம்மா ஓநாய் மூச்சு வாங்கியபடி குட்டிகளுக்கிடையில் விழுந்து படுத்துக் கொண்டா. அப்பா ஓநாய் அவவிடம் பின்வருமாறு கூறினார்.

"ஷேர்கான் கூறியதில் விஷயம் இருக்கிறது. எமது கூட்டத்தாரிடம் மனிதப் பிள்ளையைக் காட்டியாக வேண்டும். அவனை நீயே பார்த்துக்கொள்வாயா......... அம்மா"

"பார்த்துக்கொள்வாயாவா? இரவு நேரத்தில் கடும் பசியோடு அம்மணமாக அவன் இங்குவந்தான். எதற்குமே அஞ்சியதாகத் தெரியவில்லை. பாருங்கள். எங்கள் குட்டிகளில் ஒன்றை அப்பால் தள்ளிவிட்டு பால்குடிக்கிறான். அவன் நொண்டியன்- ஷேர்கான் - இவனைக் கொன்று தின்று ஓடியிருப்பான். நல்ல காலம் எங்களிடம் வந்துவிட்டான். நான் வைத்துக் கொள்வேன். நீ அப்பிடியே கிடவடா சின்னப்பையா".



அப்பா ஓநாய் என்றால் ஷேர்கான் எதிர்த்துநின்றிருப்பார். ஆனால் அம்மா ஓநாயை அவரால் எதிர்த்து நிற்கமுடியாது. ஏனென்றால் அந்த இடத்தில் கள நிலவரம் எல்லாம் அம்மா ஓநாய்க்கு சாதகமாகவே இருந்தன. கடைசியில் சாகும் வரைக்கும் அவவால் சண்டையிட முடியும். எனவே குகையின் வாயிலில் இருந்து மெதுவாகப் பின்வாங்கினார். ஆபத்தில்லை என்று கண்டதும் பெரிதாகக் குரல் எடுத்து "எந்த ஓநாயும் தனது சொந்த தோப்புக்குள் இருந்துகொண்டுதான் குலைக்க முடியும். ஓநாய்களின் கூட்டம் மனிதப் பிள்ளைகளை வளர்ப்பது பற்றி என்ன சொல்கிறது பார்ப்போம். மனிதப் பிள்ளை என்னுடையது. கடைசியில் அவன் என் வாய்க்குள் வரத்தான் போகிறான்". *(வளரும்)*

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -37

01. 'சம்பியன் லீக்' இருபது-20 கிரிக்கெட் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற்று வருகின்றன?
02. இந்தியத் தேசியக்கொடியின் நடுவில் உள்ள சின்னத்தின் பெயர் என்ன?
03. கொலம்பஸ் அமெரிக்காவில் தரையிறங்கிய இடத்தின் பெயர் என்ன?
04. முதலாவது கடல் விமானத்தில் அத்திலாந்திக் பிரதேசத்தைச் சுற்றிவந்த விமானி யார்?
05. உதயனில் வெளிவரும் 'ஓநாய்ச் சிறுவன்' தொடரைத் தமிழில் மொழி பெயர்த்து தருபவர் யார்?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 04.11.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடை தெரியுமா? -35** சரியான விடைகள்

01. இங்கிலாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளரான ராலப்வெட்ஜ்வூட்.
02. அவுஸ்ரேலியா.
03. பிரேசில்.
04. சங்கமித்தை.
05. இந்தியாவின் விண்கலமான 'சந்திராயன் - 1'

### பரிசுபெறுவோர்

**01.** ர.கனிஸ்ரன், தரம்-8G, கொக்குவில் இந்துக்கல்லூரி.
**02.** தெ.தினேஸ் மாத்திராவளவு, கொம்மந்தறை வல்வெட்டித்துறை.
**03.** பி.வினுஜா, தரம்-6, உடுவில் மகளிர் கல்லூரி.
**04.** ச.தர்சன், தரம்-5 D, யா/மத்திய கல்லூரி.
**05.** சா. பபிதா, தரம்-6, யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயம்.
**06.** ச.கஜரூபன், தரம்-9D, யா/மத்திய கல்லூரி.




# அருணனின் அபாரமூளை

ஓர் ஊரிலே அருணன் என்ற பணக்கார இளைஞன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவ்வூரில் உள்ள இளைஞர்களுக்குள் தானே அபார மூளையுடையவன் என்று அவன் பெருமைப்படக்கூறிக் கொள்வான். மற்றவர்கள் அவனைக் குறைத்து மதிப்பிட்டால் அவனுக்குக் கோபம் வந்துவிடும். உண்மையில் அருணன் அப்படியொன்றும் அதி புத்திசாலி அல்ல. ஒருநாள் அயலூரில் நடக்கும் திருவிழாவிற்கு அருணன் புறப்பட்டுச் சென்றான். நடுவழியில் ஓர் அடர்ந்தகாடு முன் எச்சரிக்கையாக அருணன் பெரிய தடியொன்றை எடுத்துச் சென்றான். அவன் நடுக்காட்டை அடைந்ததும் சில திருடர்கள் அவனை வழி மறித்தார்கள். அவனிடம் இருப்பதைத் தரும்படி மிரட்டினார்கள். ஆனால் அருணனோ திருடர்களுக்குப் பயப்படாமல் பேசாமல் நின்றான். இதனைக் கண்ட திருடர்கள் கோபம் கொண்டு அருணனைத் தாக்க முற்பட்டனர். அந்த நேரம் அருணன் தன் பாதுகாப்புக் கருதிக் கொண்டு வந்த தடியால் அவர்களை எதிர்த்துச் சண்டையிட்டான். திருடர்களின் உடலில் காயம் ஏற்பட்டது. திருடர்கள் ஐந்து, ஆறுபேர் நின்றதால் அவனால் அதிக நேரம் எதிர்த்துச் சண்டையிட முடியவில்லை. இறுதியில் திருடர்கள் அனைவரும் சேர்ந்து அவனைப் பிடித்து மரத்தில் கட்டிப்போட்டனர். திருடர்களில் ஒருவன் அருணனைச் சோதனையிட்டு அவன் இடுப்பிலிருந்த பணப்பையை எடுத்துப் பார்த்தான். அப்பைக்குள் சில சில்லறை நாணயங்கள் மட்டுமே இருந்தன. இதைக்கண்ட திருடன் "இதற்காகவா எங்களுடன் இவ்வளவு நேரம் சண்டையிட்டாய்? முட்டாள் உனக்குக் கொஞ்சமாவது மூளை இருக்கின்றதா?" என்று ஏளனமாகக் கேட்டான். இவ்வாறு திருடன் கேட்டதுதான் தாமதம் அருணனுக்குக் கடும் கோபம் ஏற்பட்டுவிட்டது. "யாரைப்பார்த்து முட்டாள் என்று கேட்டாய். எனக்கு அபாரமூளை உள்ளது. நான் ஒன்றும் இந்தச் சில்லறைக் காசுக்காகச் சண்டைபோடவில்லை. எனது தலைப்பாகையில் மறைத்து வைத்திருக்கும் 1000 பொற்காசுகளைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் சண்டை போட்டேன்" என கூறினான். உடனே திருடர்கள் அவனின் தலைப்பாகையைக் கழற்றி மறைத்து வைத்திருந்த பொற்காசுகளையும் எடுத்துச்சென்றார்கள்.



*தி.கஸ்தூரி, மிருசுவில் நலன்புரி நிலையம்.*

## நீங்களும் எழுதலாம்



(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள பீடிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-.................................
தரம் :-.................................
பாடசாலை :-.................................
.................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................................          .................................
திகதி          வகுப்பாசிரியர் கையொப்பம்

## என் அம்மா



கருவறையில் என்னை
கண்போல காத்து
கண்மணியே என பெற்று
கண் போல காத்திடும் என் அம்மா

பாலூட்டி சீராட்டி
பக்குவமாய் என்னை
பாரினிலே தவழவிட்ட
என் அம்மா


பருவம் வந்தவுடன்
பள்ளிக்கு பசியின்றி
பக்குவமாய் என்னை
அனுப்பிய என் அம்மா

பட்டங்கள் பல பெற்று
பாரினில் நான் வாழ
பல்லாண்டு வாழ்த்துக்கூறும்
என் அம்மா

என்னைக் காக்கும் என் தாயை
எப்போதும் நான் மறவேன்
என் உயிர் உள்ளவரை
என் தெய்வத்தை மறவேன்

தரம்-11, யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி.


## மாணவர் தூரிகை



வி.பிரசாத், தரம் - 6B, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.



சா.பபிதா, தரம் -6, யா/கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தி.



சி.கார்த்திகா, தரம் -6B, யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்.



த.ஜெனோஜ், தரம் - 5, யா/உடுவில் மகளிர் கல்லூரி.



ம.நிதுஞ்சலி, தரம் - 3A, யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட



எஸ்.சதீஸ்காந், தரம் -8A, யா/கனகரத்தினம் மத்திய ம.வித்தி.



சீ.பிரியங்கன், தரம் -9C, யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்துக்கான நிரந்தர அரசியல் தீர்வைக் காண திறக்கப்பட்டுள்ள கதவு அதற்கு வழி விடுமா?

இன்று, அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், தொடர்பாக நாட்டில் அரசியல் அலசலொன்று களமிறங்கியுள்ளதைக் காணமுடிகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டு யுத்தமென்ற சவால் வெற்றி கொள்ளப்பட்டதையடுத்து நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திவிடும் தீர்வுமார்க்கமொன்றாக அரசமைப் பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லும் விதத்திலான அதிகாரப் பகிர்வு வழங்கப்படுமென சர்வதேச சமூகத்துக்கு அரசினால் வழங்கப்பட்ட உறுதிமொழியையும், அனைத்துக் கட்சிக் குழுவின் சிபாரிசுகளையும் அடித்தளமாகக் கொண்டே இப் புதிய அரசியல் சர்ச்சை தலைதூக்கியுள்ளது.

அரசின் இந்த அரசியற் செயற்பாட்டிற்கு எதிராக எழுந்து நிற்கும் தரப்புகளுள் ஆரம்பம் முதலே இந்த அதிகாரப் பகிர்வு யோசனையை எதிர்த்து வந்துள்ள ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற அரசியல் கட்சிகளும், ஜாதிக ஹெல உறுமய, நாட்டுப் பற்றாளர் மக்கள் அமைப்பு உட்பட பல்வேறு மக்கள் அமைப்புக்களும் முன்னணியில் நிற்கின்றன.

அதிகாரப் பகிர்வுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி நிற்கும் அதிகாரத்தரப்புக்களால் முன்வைக்கப்பட்டு வரும் முக்கிய வாதமாகியிருப்பது, நந்திக் கடல் பிரதேசத்தில் வைத்து விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கொலையுண்டதன் தொடர்ச்சியாக இலங்கை இராணுவத்தால் விடுதலைப் புலிகள் அமைப்பு நிர்மூலமாக்கிவிடப்பட்டிருக்கும் நிலையில் மீளவும் எவ்விதத்திலுமான அதிகாரப் பகிர்வொன்றுக்கு அவசியமேயில்லை என்பதாகும்.

ஆனாலும், போர்ப்பலம் கொண்ட தீவிர சக்தியொன்றை போர் ரீதியில் தோற்கடித்து விட்டாலும் கூட அரசியல் பிரச்சினைகளை யுத்தமொன்றில் மூலம் முடிவுக்கு கொண்டுவர முடியாது. விடுதலைப் புலிகள் என்ற பயங்கரவாத அமைப்பை ஆயுதமேந்திய யுத்தமொன்றுக்கு தள்ளிச் சென்றது பல தசாப்த காலமாகத் தீர்த்து வைக்கப்படாதிருந்த அரசியல் பிரச்சினையொன்றுக்குள் சிக்குண்டிருந்த தமிழ் மக்களேயென்பதை நாம் மறந்துவிட இயலாது. யுத்தத்தின் மூலம் பயங்கரவாத அமைப்பொன்றின் போர்ப்பலம் சிதைத்து விடப்பட்டாலும் கூட இற்றைவரையிலும் தீர்த்து வைக்கப்படாத - தீர்வொன்றை எட்டாத- தமிழ் மக்கள் முன்னுள்ள சிக்கலுக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்படாதிருக்கும் நிலையில் மேற்படி அரசியல் பிரச்சினையானது, எதிர் காலத்தில் மேலுமொரு போரியல் குழுவொன்றின் வளர்ச்சிக்கான ஜன்ம பூமியாக ஆகிவிடக் கூடும்.

அதற்கும் மேலதிகமாக இலங்கையரசுக் குப் பயங்கரவாத யுத்தத்தைத் தோற்கடித்த தனது யுத்த வெற்றிக்கு அப்பால் சர்வதேச சமூகத்துடன் மனித உரிமைகள் மீறப் பட்டமை தொடர்பான மேலுமொரு யுத்தத் துக்கும் முகம் கொடுக்க வேண்டி நேர்ந்திருந்ததென்பதையும் நாம் மறந்துளவிடக் கூடாது. அப்போராட்டத்தில் வெற்றியீட்டிக் கொள்வதற்கு எமக்கு பக்க பலமாக நின்ற இந்தியா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி நின்றமைக்கு, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை வெற்றிகரமானதொரு செயற்பாட்டின் மூலம் தீர்த்து வைக்கப்படுமென அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உறுதிமொழியே காரணமாகியிருந்தது. அந்த வகையில், அந்த வாக்குறுதியைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பையும் கூட இலங்கை யரசு நிறைவேற்ற வேண்டியுள்ளது.

தமிழ் மக்கள் முன்னுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைத் தேடிப் பெறும் விடயத்தில், உண்மையிலேயே அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும் அநீதியை அல்லது அவர்கள் சமநிலையில் வைத்துக் கருதப்படாத தன்மையை தெளிந்துணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. இந்நாட்டில் ஆங்கிலேயரது ஆட்சி நிலவிய காலகட்டத்தில் இந்நாட்டின் தமிழ் மக்கள் தமக்கென்றொரு புறம்பான நிர்வாகத்தையோ, ஒரே நாடென்ற ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி நிர்வாகமொன்றையோ கோரி நின்றதில்லையென்பது வரலாற்றை உற்று நோக்குகையில் தெளிவாகிறது. 1930 ஆம் மற்றும் 1940 ஆம் ஆண்டு காலங் களில் அன்றைய அரசியல் பிரமுகரொருவரான ஜீ.ஜீ. பொன்னம்பலத்தால் முன்வைக்கப்பட்ட ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை கூட தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டதோடு ஏறத்தாழ 1950களில் புறம்பானதொரு இராச்சியத்தைக் கோரி தனித்தொரு போராட்டத்தை மேற்கொண்ட எஸ். சுந்தரலிங்கத்தின் வாதமும் கூட தமிழர் அரசியலினால் அப்போது நிராகரிக்கப்பட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

1926 இல் இளைய தலைமுறை அரசியல் வாதியொருவரான எஸ்.டபிள்யூ. ஆர்.டீ. பண்டாரநாயக்கா, இலங்கைக்குப் பொருந்தும் நிர்வாக முறைமை சமஷ்டி நிர்வாகமேயாகுமென கருத்து வெளிப்படுத்தி நின்ற வேளையில், தமிழ் அரசியல்வாதிகளால் அது நிராகரிக்கப்பட்டு ஒற்றையாட்சி நிர்வாக முறைமையின் அவசியம் விதைத்துரைக்கப்பட்டுள்ளது. பத்திரிகைக்கு (1926.07.17. Morning Leader) அன்று கருத்து வழங்கியிருந்த பிரமுகர் ஜேம்ஸ். ரீ. ரத்தினத்தின் கருத்து வெளிப்பாடு இது:

"இலங்கைக்கு இனவாத ஆட்சி முறைமையொன்றை முன்வைப்போரின் குறிக்கோளாயிருப்பது மக்களிடையே ஒருமைப்பாட்டை உருவாக்குவதே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான போதிலும், இந்த நாட்டு மக்களை பேதப்படுத்திவிடுவதற்கு அதைவிடப் பொருத்தமான வேறு அரசியல் முறைமையொன்று இல்லையென்பதே எனது நிலைப்பாடாகும்". என்றவாறு அமைந்திருந்து.

**சட்டத்தரணி கருணாரத்ன ஹேரத் "ராவய" பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது. தமிழில் தருபவர் சரா**

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் சமஷ்டி நிர்வாக முறைமை குறித்த அரசியல் கருத்தை முன்வைத்த எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தமிழரசுக்கட்சி (சமஷ்டிக் கட்சி) கூட இலங்கை இராச்சியத்திலிருந்து வேறுபட்டு நிற்கும் இராச்சியமொன்று தொடர்பான கோரிக்கையை முன்வைத்ததில்லை. 1957 ஆம் ஆண்டில், அன்று வரையிலும் அரச கரும மொழியாகவிருந்த ஆங்கில மொழி

## புத்தி ஜீவிகளைக் கொண்ட ஆணைக்குழு நிறுவி பொருத்தமான தீர்வைப் பெறுவதே உகந்தது

நீக்கப் பட்டு சிங்கள மொழி அரசகரும மொழி யாக்கப்பட்ட மொழிச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டமை, முதற்தடவையாக இலங்கையினுள் தாம் இரண்டாம் பட்சமான உரிமைகளுக்குரித்தாகும் - குறைத்து மதிப்பிடப்படும் - இனமொன்றே என்ற உணர்வை தமிழ் மக்களிடையே ஏற்படுத்தக் காரணமாகியிருந்தது. மேற்படிக் கருத்தியலின் காரணமாக தமிழ் சமூகங்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் விளைவாகவே 1957இல் பண்டாரநாயக்கா செல்வநாயகம் இடையிலான ஒப்பந்தமொன்று முகிழ்ந்தது. அப்போது கூட, பெரும்பான்மையாகத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் செயல்படும் அரச அலுவலகங்கள் மற்றும் நீதிமன்றங்களில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் அப்பிரதேசங்களில் அரசினால் மேற்கொள்ளப்படும் விவசாயக் குடியேற்றங்களில் காணிகளற்ற மேற்படி பிரதேச வாசிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பவையே தமிழ் மக்களின் கோரிக்கைகளாக இருந்துள்ளன.

இந்த மிக இலகுரக கோரிக்கைகள் கூட நிறைவேற்றப்படுவதற்குத் தடைகளை ஏற்படுத்தி நின்ற குறுகிய மனப்பாங்கு கொண்ட சிங்கள இனவாதிகள் அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதையும் புறமொதுக்கச் செய்தனர். அதன் பின்னர் 1965ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் டட்லி சேனாநாயக்கா - செல்வநாயகம் இடையிலான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்திலும் கூட 1957இன் ஒப்பந்தத்தில் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைகளுக்குச் சமமான சில கோரிக்கைகள் கூடத் தமிழ்மக்களுக்கு வழங்கப்படாத விதமாக அந்த அரசைத் தடுத்து விடும் அளவுக்கு இந்நாட்டுச் சிங்கள இனவா[illegible].

இலங்கையில் அடிமைத்தன ஆட்சி நிலவிய யுகத்திலும், நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர், 1972இல் இலங்கைக் குடியரசென்ற அரசமைப்பு முறை கொண்டுவரப்படுவதற்கு முன்னரான நிர்வாகக் காலத்திலும் ஜனநாயகவாத வழிமுறையிலான நியாயமான கோரிக்கைகளுடன் மட்டும் தம்மை வரையறுத்துக் கொண்டிருந்த தமிழர்களது அரசியல் வியூகமானது, புறம்பானதொரு இராச்சியமென்ற கொள்கை வகுத்துக் கொண்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் அரசியல் வியூகத்தில் தடம்பதிப்பதற்கு, இலங்கைக்குடியரசு என்ற அரசமைப்பின் மூலம் சிறுபான்மைச் சமூகங்களின் அனைத்துச் சட்டரீதியிலான மற்றும் நியாயமான உரிமைகள் இல்லாதொழிக்கப்பட்டமையே காரணமாக அமைந்தது. மேற்படி திருப்புமுனை அமைந்த சந்தர்ப்பம் வரையிலும் நிலவிய - அரசமைப்பின் 27ஆவது விதியின் - மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளும், சிறுபான்மைச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப் படுத்திநின்ற ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நீக்கப்பட்டமை மற்றும் மூதவை இல்லாதொழிக்கப்பட்டமை ஆகியவை மூலம் சிறுபான்மை இனங்களின் உரிமைகள் வெட்டிக்குறைக்கப்பட்டமையும், சிங்களமொழி அரச கரும மொழியாகவும் பௌத்தம் தேசிய மதமாகவும் அரசமைப்பிலேயே உறுதிப்படுத்தப்பட்டுப் பிரகடனப்படுத்தப்பட்டமையும் தமிழ் மக்கள் என்போர் போர் இலங்கை நாட்டினுள் அவர்களது உரிமைகளைப் பொறுத்தவரையிலும் கீழ் மட்டத் தரப்பொன்றே என்பது உணர்த்தி விடப்பட்டது.

இவை ஒருபுறமிருக்க, அரசமைப்பின் 13ஆவது திருத்தமென்பது இந்திய அழுத்தத்தின் மூலமாக அவசர கதியில் நிறைவேற்றப்பட்ட - இலங்கைக்குச் சற்றும் பொருந்தாத - முறைமை யொன்றே என்ற மேலுமொரு எதிர்வாதக் கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் விடுதலைப் புலிகளின் யுத்த முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வந்த சந்தர்ப்பத்தில், இலங்கையரசு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களுக்கிடையில் இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் இடம் பெற்ற திம்புப் பேச்சுகள் மற்றும் புதுடில்லி ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1985இல் அரசு மற்றும் விடுதலைப் புலித்தலைவர்களென்ற இவ்விரு தரப்புக்களுமே, அரசமைப்பின் 13ஆவது திருத் தத்தின் மூலம் முகிழ்ந்திருந்த இந்தியத் தரப் பின் அரசமைப்பு வரைபினூடான அதிகாரப் பகிர்வு நிர்வாகமொன்றுக்கு இணக்கம் கண்டிருந்தன.

பிற்காலத்தில், மங்கள முனசிங்க குழுவின் அறிக்கைக்கு அமையவும், தற்போது தயாரித்து முடிக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சிக்குழுவின் அறிக்கைக்கு அமையவும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு மிகப்பொருத்தமானதாக அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து வெளிப்பாடுகளுக்கு அமைய மாகாண சபையின் மூலம் பகிர்ந்தளிக்க படவுள்ள அதிகாரத்துக்கு அப்பாலும் பயணிக்கும் முறைமையூடாக அதிகரித்த அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கும் அவர் தயாராகவிருந்தார்.

அவ்வாறான போதிலும், இலங்கையினுள் மாகாண சபைகள் என்பவை வெற்றிகரமான அதிகாரப்பகிர்வு நிர்வாக முறைமையொன்றாக அமையவில்லையென்பதைக் கடந்த இரு தசாப்தகாலப் பட்டறிவுகளுக்கு அமைய தீர்மானிக்கமுடிகிறது. 1990 முதல் 2008 வரையிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் செயற்பட்டுள்ள மாகாண சபைகள் பொதுநிதியை வீண்விரயமாக்கும் தோல்விநிலை நிர்வாக முறைமையே என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தத்தமது அரசியல் கட்சிகளின் வெற்றிக்காக பொதுமக்களது வளங்களையும் தமது அதிகாரப் பலத்தைப் பிரயோகித்துக் கொள்ளும் அடாவடித் தரப்புக்களை இயக்கிச் செல்லும் மையமொன்றாகவும், மத்திய நிர்வாகம் சார்ந்த அரசியல்வாதிகளின் குடும்ப உறுப்பினர்களை தேசிய அரசியலுக்குள் புகுத்திவிடுவதற்கான பயிற்சி மையமாகவும், இந்த இரண்டாம் மட்ட அரசியல் உறவினர்கள் தேசிய நிதியைத் தமது விருப்புகளுக்கமைய சூறையாடிக்கொள்வதற்கு வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கும் நிறுவனமொன்றாகவும் மட்டுமே மாகாணசபைகள் செயற்பட்டு வருகின்றன.

இந்தத் தோல்வி நிலைக்குக் காரணமாக அமையும் அடிப்படை ஏதுக்கள் நிறையவே உள்ளன.

முதலாவதாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய, மாகாண சபைகளுக்குக் கிட்டவேண்டிய அதிகாரங்களை அவை நடைமுறைப் படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்க அரசு தயாரில்லை என்பதைச் சுட்டிக்காட்ட முடியும். இதற்கமைய, விசாலமான நிதிவளம் விரயமாக்கப்பட்டு இயக்கிச்செல்லப்படும் மாகாண சபைகளின் மூலம் இடம்பெறுவது உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலமாக நிறைவேற்றப்படும் கருமங்களாகவே அமைவதோடு, மக்களுக்கான ஒரே செயற்பாட்டுக்கு இரண்டு நிறுவனங்களை இயக்கிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று, அரச உத்தியோகத்தர்களுக்கு தமது பொறுப்புக்களை நிறைவேற்றும்போது மத்திய அரசின் அரசியல்வாதிகளினதும் மற்றும் மாகாணசபைகளின் அரசியல் வாதிகளினதும் சட்டத்துக்கு முரணான அழுத்தங்களுக்கு இரு கோணங்களில் அடிபணிய வேண்டி நேர்கிறது. இவ்விதமான பாதிப்பான நிலைப்பாடுகளேயன்றி அரசசேவையில் செயற்றிறன் மிக்க தன்மைக்கு அங்கு இடமிருப்பதில்லை. அதன்மூலம் அரசசேவைகள் என்பவை வரையறையற்ற அரசியல் அழுத்தங்களினுள் ஊழல்மயமாவதன் ஊடாக மக்களுக்குக் கிட்டக்கூடிய சேவை அற்றுப்போய்விடும் பாதகமான நிலைப்பாடொன்றே மாகாணசபைகள் மூலம் உருவாகியுள்ளது.

மேலும், அரசமைப்பிலேயே சட்ட பூர்வமாக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பெருமளவிலான அதிகாரங்கள், மாகாண சபைகளால் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தடுத்துவிடுவதன் மூலமாகவும் கூட, மாகாண சபைகளை எந்தவொரு அதிகார பலமுமற்ற நிறுவனங்களாக்கிவிடும் உத்தி கடந்த இரு தசாப்த காலமாகவே நடந்தேறிவந்துள்ளது. முக்கியமாக, காணி அதிகாரங்கள் மற்றும் பொலீஸ் அதிகாரங்கள் என்பவை சட்டரீதியாகவே மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் அவை செயலுருவில் நடைமுறைப்படுத்துப்படுவதைத் தடுத்துவிடும் அதிகாரபலம் மத்திய அரசு மற்றும் ஜனாதிபதியின் வசத்தில் அமைந்துள்ளது. அத்தோடு மாகாண ஆளுநர் பதவியில் தமக்கு நெருக்கமான ஒருவரை அமர்த்தி மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரங்களைக் கடும்பிடியில் கட்டுப்படுத்தி விடும் அதிகார பலமும் கூட ஜனாதிபதியின் வசமுள்ளது. இதற்கமைய நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கு உள்ள வரையறையற்ற அதிகாரங்களின் கீழ் அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதென்பது செயலுருவில் மேற்கொள்ளப்பட இயலாததொரு நிலைப்பாடென்பது புலப்படுகிறது.

எனவே, இனப்பிரச்சனைக்குக் தீர்வொன்றாக அதிகாரங்களைப் பரவலாக்கிவிடும் கட்டமைப்பு மற்றும் பரவலாக்கப்பட வேண்டியிருக்கும் அதிகாரங்கள் தொடர்பான முறையானதொரு பரிசீலனையை மெற்கொள்ளாது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மீது தங்கியிருப்பதானது மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலைப்பாட்டினுள் சாத்தியப்படாததொரு கருமமே என்பதைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

(14 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bra & Petticoats

Solace
Feder
Deli
Lucid
DELIA
Dating
Angel



DG Fashion
Garment
(Pvt) Ltd.

ස්වාභාවිකත්වය
ප්‍රිය කරන
පහසුවට
අඳින්න කැමති
හැමෝටම....

Ashokarama Road, Kondeniya, Dickwella.
Tel:041-2255954/9 Fax:041-2255955
Email:-info@newdgfashions.com
Web:-www.newdgfashions.com


## வெறுக்கிறேன்!

மனதில் கசக்கும்
உறவுகள்
வெறுத்தேன்
வேஷம் போடும்
மனிதரை
வெறுத்தேன்
தாய் இல்லாத
நாள்களை
வெறுத்தேன்
போலியாய்ப் பழகும்
மனிதரை
வெறுத்தேன்
தோல்வியைக் கண்டு
துவள்வோரை
வெறுத்தேன்
கண்ணீர் கொள்ளும்
கண்களை
வெறுத்தேன்
கோபச் சொற்களை
சொல்ல வெறுத்தேன்
கர்வச் சோம்பும்
மூளையை
வெறுத்தேன்
வீம்பாய் நடக்கும்
தன்மைகள்
வெறுத்தேன்
பெண்களைச் சுற்றும்
ஆண்களை
வெறுத்தேன்
காதலில் கூறும்
பொய்களை
வெறுத்தேன்
கல்யாண வாழ்வை
முறிப்பதை
வெறுத்தேன்
பெற்றோர் கண்டிக்காத
தவறுகளை
வெறுத்தேன்
வெற்றிக்காய்
முயற்சிக்காத்
தோல்வியை
வெறுத்தேன்

ஜெ.மஞ்சு, மூளாய்.


# கட்டபிளர் 428E பக்கோ லோடர்

அமெரிக்காவில் மிகப் பிரபலமான "பக்கோ லோடர்"

- 01 வருட உத்தரவாதம்
- இங்கிலாந்தின் உற்பத்தி
- மேலதிக "பக்கட்" ஒன்று இலவசம்
- முன் பொருத்தப்பட்ட பல நோக்கங்களுக்கான "பக்கட"
- உபகரணத் தொகுதியொன்று இலவசம்



விசேட விலைகள் சம்பந்தமாக அழைக்கவும்
லலந்தி : 0114 828 262 (Mon-Fri)

United Tractors CAT



# DG Brief & Vests



Glamer
REGAL
CREDO
Xcellent
Super Wear
Bestwear
apex

உங்களுக்கு காம்பீரமான தோற்றத்தைத் தரும் நாள்பூராகவும் உங்களுடன் இணைந்திருந்து உங்களுக்கு ஒத்தாசை புரியும் ஒரு நண்பன் DG ஆண்களுக்கான உள்ளாடைகள்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான கடைகள் எல்லாவற்றிலும் பெற்றுக் கொள்ளலாம்

Enhance Your Real Masculinity

Maximum Performance 100% Combed Cotton Quality Fabrics


DG Fashion Garment (Pvt) Ltd.
Ashokarama Road, Kondeniya, Dickwella. Sri Lanka.
Tel:041-2255954/9 Fax:041-2255955
Email:-info@newdgfashions.com
Web:-www.newdgfashions.com



For Students & Learners

From **Samudra Book Publications**
with well qualified Teacher Mr. Sarath Silva

Elementary
# English Grammar
A New Grammar Practice Book with Activities



Intermediate
English Grammar - In Print

Advanced
English Grammar - In Print

Best Selling Publications
in English Language & Literature

Available at Jaffna Annai Book Shop, Poobalasingham Book Shop, & Book Lab, All Samudra Book Shop Outlets & Other Leading Book Shops Island Wide. Contact : 0718140079, 0722136711



# சாடிக்கேற்ற மூடி!
# வேலைக்கேற்ற சீமெந்து, ஹொல்சிம்!



கொங்கிரீட்டிற்காகவே தயாரிக்கப்பட்ட சீமெந்து ஹொல்சிம் சங்ஸ்தா சுபிரி

சுவர் கட்டுவதற்கும், சாந்துப்பூச்சிற்கும் மிகச் சிறந்த சீமெந்து ஹொல்சிம் சங்ஸ்தா பெதரேரு

அசுர பலத்துடன் அம்புஜா சீமெந்து

உட்கட்டுமான வேலைகளுக்கு ஹொல்சிம் ரெடி ஃப்லோ

தேசத்தின் மிகச் சிறந்த சீமெந்து

Holcim


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**************1960 துகளின் பிற்பகுதியில் ஈழத்துத் தமிழ்ப் புனை கதைத்துறையில் தன்னை இணைத்துக்கொண்டவர் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான். கவிஞர், எழுத்தாளர், விமர்சகர் என்ற பல்துறைகளில் தமது தனித்துவத்தை வெளிப்படுத்தியவர். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது 'அழியா நிழல்கள்', 'தாத்தாமாரும் பேரர்களும்' நூல்கள் வாசகர்களின் பரவலான கவனத்தைப் பெற்றவை. இவை தவிர இலக்கிய, இலக்கண நூல்கள் வரிசையில் பல ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ்மொழிப் பாடத்திட்ட உருவாக்கலில் கணிசமான அளவு பங்களிப்பு வழங்கியுள்ளார்.

கணையாழி சஞ்சிகையில் வெளியாகி "அன்று..... தேர்ந்த சிறுகதைகள்" இரண்டாவது தொகுதியில் இடம் பிடித்த இவரது சிறுகதை 'சதுப்பு நிலம்' இங்கு பிரசுரமாகிறது.****************************************

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 121

# சதுப்பு நிலம்

அவளை இதற்குமுன் வேறு எங்கேயும் கண்டதாக அவனுக்கு நினைவு இல்லை. நிச்சயமாக நான் கண்டிருக்க முடியாது என்று தான் அவன் நினைத்தான். ஏனென்றால் அவன் அடிக்கடி மட்டக்களப்புக்கு வருவதில்லை. வந்தாலும் வாசிக சாலைக்குள் வர அவனுக்கு நேரம் கிடைப்பதில்லை. எப்போதோ இரண்டொரு முறைதான் அவன் இங்கு வந்திருக்கிறான். இவள் அடிக்கடி பின்னேரங்களில் வருவாளாக்கும் என்று நினைத்தான். அவள், அவனுக்கு இடதுபுறமாகச் சிறிது தள்ளி அமர்ந்திருந்தாள்.

அவனுக்கு அவளை மீண்டும் ஒருமுறை பார்க்க வேண்டும் போல் இருந்தது. ஆயினும் புத்தகத்தையே வாசிப்பது போல் அவன் பாவனை பண்ணினான். என்றாலும் மனம் அலைபாய்ந்தது. புத்தகத்தில் ஒன்றுமே அவனுக்குப் பிடிபடவில்லை. வெறும் எழுத்துக்களைக் கண்கள் மேய்ந்து கொண்டு சென்றன. இன்னும் அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது போல் அவன் உணர்ந்தான். புத்தகத்தில் குனிந்திருந்த தன் நெற்றியில், அவள் விழிப்பார்வை பட்டுச் சுடுவது போல் அவனுக்கு உணர்வு தட்டியது.

அவன் தலையை நிமிர்த்திப் பார்த்தான். ஆனால் அவள் அவனைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. தன் பாட்டில் புத்தகத்தைப் பார்த்து கொப்பியில் ஏதோ குறிப்பு எழுதிக் கொண்டிருந்தாள். அதே மேசையில் அவளைச் சுற்றி அவளுடைய தோழிகள் மூவர் அதே போல் ஏதோ குறிப்பு எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவரும் அவனைக் கவனிக்கவே இல்லை.

அவனுக்கு அது சிறிது ஏமாற்றமாக இருந்தது. வெட்கமாகவும் இருந்தது. அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதாக நினைத்ததை எண்ணிய போது அவனுக்குச் சிறிது அவமானமாகவும் இருந்தது. அவன் மீண்டும் அந்த மாதப் பத்திரிகையில் தலை குனிந்தான்.

தான் அவளைப் பார்த்ததை மற்றவர்கள் பார்த்திருக்கக்கூடும் என்று திடீரென அவன் நினைத்தான். மற்றவர்கள் தன்னைப் பிழையாக நினைப்பதை அவன் விரும்பவில்லை. யாரும் தன்னைக் கவனிக்கிறார்களா என்று அவன் தலை நிமிர்ந்து சுற்றவும் பார்த்தான். யாருமே அவனைக் கவனிக்கவில்லை. எல்லோரும் தம்பாட்டில் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் புரட்டிக் கொண்டும் வாசித்துக் கொண்டும் இருந்தனர். எங்கும் அமைதியாக இருந்தது. தாள் புரளும் ஓசையைவிட மற்றபடி அறை மௌனமாகவே இருந்தது. சற்றுத் தள்ளி மேசைத் தொங்கலில் இருந்த அந்தக் கண்ணாடி போட்ட மனிதன் இடைக்கிடை காலை இழுத்து நீட்டுவதால், செருப்பு தரையில் உராயும் ஓசை மெதுவாகக் கேட்டது. தூரத்தே கல்லடிப் பாலத்தின் ஊடாகப் பஸ் ஒன்று போவது ஜன்னலின் ஊடே தெரிந்தது. கீழே பரந்து கிடக்கும் வாவியிலிருந்து வரும் காற்று மேல் மாடியில் மிகவும் இதமாக வீசியது.

அவன் மேல்மாடிக்கு ஏறி வந்த போதுதான் அவளைக் கண்டான். எழுதுவதை விட்டுவிட்டு அவள் தான் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவள் மட்டுமில்லை: மேல் மாடியில் இருந்த எல்லோரும் தான் அவனை ஒரு கணம் பார்த்தார்கள். பார்த்துவிட்டு மீண்டும் தங்கள் வாசிப்பில் கவனத்தைப் பதித்துக்கொண்டார்கள். எல்லோரும் அவனைப் பார்த்ததும் அவனுக்குக் கூச்சமாக இருந்தது. அவன் வாசிகசாலைக்குப் பொருத்தமில்லாத சப்பாத்தை அணிந்திருந்தான். சப்பாத்தின் அடிப்பகுதியில் அடித்திருந்த இரும்பு லாடங்கள் சீமெந்துத் தரையில் டொக்... டொக்... என்று சத்தம் எழுப்பின. வாசிகசாலையின் அமைதியில் அந்தச் சத்தம் மிகவும் பெரிதாகக் கேட்பது போல் இருந்தது.

அவன் மிக மெதுவாக நடந்து வந்தான். மேசையில் கிடந்த ஒரு பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு தூண் ஓரத்தில் கிடந்த கதிரையில் உட்கார்ந்தான். அதுவரை அவள் அவனைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். அவன் நடந்து வந்த மெதுமை அவளுக்கு வேடிக்கையாக இருந்திருக்க வேண்டும். பேனையின் மூடிப்பகுதி அவள் கன்னத்தில் பதிந்திருந்ததை அவன் கண்டான். அவள் இதழ்களில் ஒரு சிறிய நகை நெளிந்ததையும் அவன் கண்டான். பிறகு அவன் அந்தப் பத்திரிகையில் பார்வையைப் புதைத்துக் கொண்டான். (12 ஆம் பக்கம் பார்க்க....)

## பசுமைத் தமிழ்

பல்லாண்டு காலமாய்,
உங்கள் பாட்டன்
முப்பாட்டன்
காலம் முதலாய் இம்மண்ணில்
வாழ்ந்து உங்களுக்கு
பயன் கொடுத்தோமல்லாமல்
உரிமை ஒன்றும் கேட்டிலம்
ஆரம்ப நாளில்
உண்ணக் கனியளித்து
மண்ணிலிடப்
பசளையுட் ஈந்து
மகிழ்வடைந்திருந்தோம்
பின்னாளில் இருப்பிடம் அமைத்து
நீங்கள் குடியேறும் போதுங்கூரை
தாங்கியாய்
கதவாய்க் கதிரையாய்
கட்டில் பலகையாய்
வனப்புகள் மிக்கதாய் - நீவிர்
ஆக்கிய பொருள்கள் பார்த்து
மறுவாழ்வு கிடைத்தாய் மனதில்
மகிழ்ந்தோம்.
இடையில்...
விவசாய நில மீட்பென்று
வகை தொகையின்றியெம்மை
அழித்திட்ட போது
மனக் கலக்கம் கொண்டோம்
அத்தோடு....
விறகுக்கு என்றே
வேரோடு பெயர்க்கும் போது
நீறும் மிஞ்சாது
காற்றுடன் கலந்தோம்
இந்நாள்களில்
புவிக்கோள் வெப்பம் புதுப்புது
வார்த்தைகள்
பேசுகின்ற போதும், சட்டங்கள்
போட்டு எங்களைக் காக்க
அமைப்புக்கள் வந்த போதும்
அனுமதிப் பத்திரங்கள்
அவலங்கள் மனிதரை (த்)
தின்ற போதும்
சர்வதேச ரீதியாய்
எங்களது புகழ்
ஓங்கி ஒலிப்பதாய்
உள்ளூர உணர்ந்தோம்.
இன்று.....
யுத்தம் மலிந்த
தமிழர் தேசத்தில்
பிறந்ததன் பயனை
முழுமையாய்த் தெரிந்து கொண்டோம்
பதுங்கு குழிகளட
காப்பரண்கள்
என்று உயிர் காக்கும்
பணியில் எங்களை இணைத்து
மரணத்திலும் நாம் மகிழ்வடைந்தோம்.
செல்லரித்து எங்களுக்குச்
சேதங்கள் வாராமல்
ஒயிலோடு ஏதோதோ
ஒழுங்காகப் பூசினீர்கள்
ஷெல்லடித்து எங்கள்
தேகங்கள் உயிரோடு
பற்றி எரியும் போது
அணைக்கின்ற கைகள்
எதையுமே காணவில்லை
"கிறீன்பீஸ்" அமைப்பும்
ஓசோன் ஓட்டையும்
புவிக்கோள் வெப்பமும்
கொழுந்து விட்டெரியும்
நெருப்பினில் அவிந்ததுவோ?
பதிலுபகாரம் கேட்காது
நும்பணி தொடர்வதற்கு
காத்திருக்கும் எங்கள்
அவலங்களங உங்கள்
காதுகளுக்கு எட்டாதது
விந்தையாக உள்ளது.
அதுசரி
வெப்பத்தால் விரைவில்
அவியப்போகும் புவியில்
நாங்கள் மட்டும்
இருந்தென்ன பயன்?

- காயத்திரி, கோப்பாய்.

# சிலப்பதிகாரத் துன்பமாலை
## அவலச் சுவைக்கு ஓர் எடுத்துகாட்டு

இலக்கியக் காட்சி 12

ஒருவரை அவர் யார் என்று அடையாளம் காண உதவுவது அவரது முகமே! அத்தோடு அவருக்கு அழகு தருவதும் முகமே! அது போலத்தான் கவிதையையோ- கட்டுரையையோ- செய்தியையோ நாம் அடையாளங்காண உதவுவதும் அழகு சேர்ப்பதும் தலையங்கம் தான். தலையங்கம் இடும் ஆற்றல் பத்திரிகையாளரிடம் சிறந்து விளங்குவதை இன்று காண்கிறோம்.

சிலப்பதிகாரத்தில் வரும் காதைகளுக்குத் தலையங்கம் இடுவதில் தாம் தேர்ந்த கலைஞர் என்பதை இளங்கோ அடிகள் காட்டியுள்ளார்.

கோவலன் கொலையுண்டதைக் கேட்டுத் துடிக்கும் கண்ணகியின் அவலத்தைக் காட்டும் காதைக்கு இளங்கோ அடிகள் 'துன்பமாலை' என்று தலையங்கம் இட்டுள்ளார். பதிகத்தில் துன்பமாலை பற்றிக் குறிப்பிடும் இளங்கோ அடிகள் "தீத்திறம் கேட்ட துன்ப மாலையும்" என்று விளக்குகிறார். அது கோவலன் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகியின் இயல்பு என்கிறார்.

மாலை என்ற சொல்லுக்குத் தொடர்ச்சி என்றும் பொருள் உண்டு. பலமுத்துக்கள் தொடர்ச்சியாகக் கோர்க்கப்பட்டது முத்துமாலை.

பல துன்பங்களைத் தொடர்ச்சியாகச் சந்தித்த கண்ணகியின் நிலையும் துன்பமாலை தான்.

மாலை என்ற சொல்லுக்கு மாலைக் காலம் என்று பொருள் கொண்டாலும் அதுவும் பொருந்தும். ஏன் என்றால் அன்றைய மாலைக் காலம் கண்ணகிக்குத் துன்பம் விளைவிக்கும் மாலைக்காலமாக அமைந்து விட்டது.

சிலம்பு விற்கச் சென்ற கோவலன் புறப்பட்ட அன்று கோவலனுக்கு முன்னரே கண்ணகி நித்திரையால் எழுந்து அவசர அவசரமாகக் கோவலனுக்கு அறுசுவை உணவு தயாரிக்கிறாள்.

பல வருடங்கள் மாதவி வீட்டிலேயே தங்கியிருந்த கணவனுக்குப் பல வருடங்களின் பின் தன்கையாலே உணவு சமைக்க நேர்ந்தது கண்ணகிக்குப் பெரு மகிழ்ச்சி அளிக்கிறது. துயில் நீங்கி எழுந்த கோவலன் மதுரை நகர் செல்ல ஆயத்தமானதும் தானே சமைத்த அறுசுவை உணவைக் கண்ணகி கோவனுக்குத் தன் கையாலேயே பரிமாறுகிறாள். கோவலன் மாதவியிடம் சென்ற மாபெரும் தவறைச் சிறிதும் சிந்தியாமல் அன்பு கலந்து இன் சொற்களையே பகிர்ந்தபடியே கணவனுக்குப் பிடித்த உணவை அருகிருந்து பரிமாறுகிறாள். அப்படிப் பரிமாறுவதில் பேரின்பம் அடைகிறாள். உணவுண்டு முடிந்ததும் வெற்றிலை, பாக்குக் கொடுத்துச் சிலம்பு விற்க கோவலனை மதுரை நகருக்கு அனுப்புகிறாள். அனுப்பிவிட்டுக் கணப்பொழுதை மணிப் பொழுதாக கழித்து அவன் வரவுக்காகக் காத்திருக்கிறாள்.

காலையில் உணவு வாங்கி உண்ட கணவன் மாலையில் கொலையுண்டான் என்ற செய்தியை ஒரு பெண் கேட்பதாயின் அதை விட அவலம் வேறு என்ன இருக்க முடியும்? அந்த மாலைக்கு துன்பமாலை என்று இளங்கோ அடிகள் பெயரிட்டது எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

அன்று மாலை கோவலன் கொலையுண்ட அவலச் செய்தியைக் கேட்கும்போது கண்ணகி இருந்த நிலையைச் சிந்திக்க வேண்டும். சோழ நாட்டில் இருந்து பாண்டி நாட்டுக்கு வந்திருக்கிறாள். இருப்பது உறவினர் வீடு அல்ல. முன்பின் பழக்கமில்லாத இடையர் வீடு. மாதவியும் அவள் மகள் ஐயையும் கண்ணகியிடம் அன்பு காட்டினாலும் அவர் கள் புதியவர்களே!

அன்பின் பெருமையை விளக்க ஒரு பழமொழி சொல்வார்கள். "தான் ஆடா விட்டாலும் தன் தசை ஆடும்" என்பதே அது.

கோவலன் கொலையுண்ட செய்தி வரு முன்னரே கண்ணகிக்குத் திடீரென்று மனம் துன்பம் அடைகிறது. திடீரென்று உடல் நடுக்கமுறுகிறது. காரணம் தெரியாத மனத்துயர். காரணம் தெரியாத உடல் நடுக்கம். எதற்காக இவ்விதம் ஏற்பட வேண்டும் என்று கண்ணகி மேலும் துடிக்கிறாள்.

அந்த நேரத்தில் கண்ணகி இருந்த வீட்டிற்குப் பெண் ஒருத்தி வருகிறாள். அவள் கோவலன் இறந்த செய்தியுடனேயே வருகிறாள். ஆனால் அந்த அவலச் செய்தியை எப்படிக் கண்ணகிக்குக் கூறுவது என்று தடுமாறுகிறாள். ஒருவரின் அகத்தில் உள்ளதை முகத்தில் படிக்கும் ஆற்றல் வாய்ந்த கண்ணகி அவளைப் பார்த்துக்

**"காதலற் காண்கிலேன்**
**கலங்கி நோய் கைம்மிகும்**
**ஊதுலை தோற்க**
**உயிர்க்கும் என் நெஞ்சன்றே**
**ஊதுலை தோற்க**
**உயிர்க்கும் என்நெஞ்சாயின்**
**ஏதிலார் சொன்ன**
**தெவன் வாழியோ தோழி!"**

எனக் கேட்கிறாள்.

"என்னுடைய காதலனைக் காணவில்லை. என்னுடைய பெருமூச்சுத் துருத்தியால் வரும் வெப்பக்காற்றைவிட வெப்பமுடையதாக இருக்கிறது. அப்படியானால் அயலவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொல் தோழி" என்று கேட்கிறாள்.

**"அரசுறைக் கோயில் அணியார் ஞெகிழம்**
**கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே**
**கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே**
**குரைகழல் மாக்கள் கொலைகுறித்தனரே!"**

என்கிறாள் அந்தப் பெண்.

அரசன் தங்கும் அந்தப்புரத்தில் இருந்த சிலம்பைச் சிறிதும் ஓசையின்றிக் கவர்ந்த கள்வன் என்று கழல் அணிந்த ஊர்க்காவலர்கள் கொலை செய்ய நினைத்தனர் என்கிறாள். கொலை செய்தனர் என்று சொல்ல இயலாதவளாகிக் "கொலை குறித்தனர்" என்கிறாள்.

இதனைக் கேட்ட கண்ணகி **"பொங்கி எழுந்தாள்"**

கோவலன் சிலம்பு திருடினான் என்ற பொய்க் குற்றச்சாட்டைக் கேட்டுச் சீறி எழுந்தாள்

**"விழுந்தாள்"**

கோவலன் இறந்த துயர் தாங்க முடியாது விழுந்தாள்.

கண்கள் சிவக்கும் படி அழுதாள். "அன்பனே! எவ்விடத்தில் இருக்கின்றீர் கள்" என்று வருந்தி ஏக்கமுற்று மயங்கினாள்.

**"பொங்கி எழுந்தாள்**
**விழுந்தாள் பொழிகதிர்த்**
**திங்கள் முகிலொடும்**
**சேணிலம் கொண்டெனச்**
**செங்கண் சிவப்ப**
**அழுதாள் தன் கேள்வனை**
**எங்கணா என்னா**
**இனைந்தேங்கி மாழ்குவாள்!"**

சிலப்பதிகாரத் துன்பமாலை அவலச் சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.



ம.பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்



## இளமைக்கால நினைவுகள்



வாழ்க்கையில் ஏதோவொரு துறையில் பிரபல்யம் பெற்றுத் திகழ்வோரில் பலருக்கு தமது இளமைக்காலத்தில் வசதி வாய்ப்புக்களின்றி சிரமத்தோடு வாழ்க்கையை ஓட்ட நேர்ந்திருக்கும் ஆனால் அவர்களில் பலர் தமது இளமைக்கால சிரம வாழ்க்கை நிலை குறித்த உண்மைத் தகவல்களை வெளிப்படுத்த முன்வருவதில்லை. அது தமக்கு கௌரவக் குறைவை ஏற்படுத்துவதாகக் கருதுவதே அதற்கான காரணமாகும்.

ஆனால் இவர்களில் சகலரும் அத்தகைய போக்குடையவர்களல்லர் என்பதை வெளிப்படுத்துகிறது, நீங்கள் கீழே படிக்கப்போகும் இத் தகவல்.

சார்லி சப்ளின் ஒரு பிரபல ஆக்கில நகைச்சுவை நடிகராக விளங்கியவர். பிரிட்டனில் பிறந்து வளர்ந்த அவர், அமெரிக்கா சென்று அதிஷ்டவசமாக திரைப்படத்துறையில் பிரபல்யம் பெற்றவர்.

திரைப்படத்துறையில் பிரபல்யம் மிக்க நடிகரான பின்னர் தமது பிறந்து ஊரைப்பார்க்கும் ஆசை அவருக்கு ஏற்பட்டது. அதற்காகப் பிரிட்டனுக்குச் சென்ற அவருக்கு அந்த வேளையில் பிரிட்டனில் கோலாகலமான மாபெரும் வரவேற்புக் காத்திருந்தது.

அவர் தங்கியிருந்த பிரபல்யமான ஹோட்டலில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வுகள் யாவும் முடிவடைந்த பின்னர் எவரும் அறியாத விதத்தில் தமது நெருங்கிய நண்பனையும் அழைத்துக் கொண்டு சப்ளின் வாடகைக் காரொன்றில் வெளியில் புறப்பட்டார்.

பாதை ஓரத்தில் ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி சார்லிசப்ளின் தனது நண்பனுக்குக் கூறினார்.

''இதோ பார்,இது தான் நான் பிச்சை எடுத்த இடம்.''

நண்பர் திடுக்கிட்டு அவர் முகத்தைப்பார்த்தார். சார்லிசப்ளினோ தனது சிறுபராயத்து ஞாபகங்களில் மூழ்கிப் போயிருந்தார்.

மேலும் சிறிது தூரம் சென்றதும் வாடகைக் காரை நிறுத்தும்படி சாப்ளின் கூறினார்.

''இதோ பார்... இதுதான் நாங்கள் குடியிருந்த வீடு.''

மௌனமாக இருவருமே இறங்கி அந்த வீட்டை நோக்கி நடந்தார்கள்.


வீடா அது; ஒரு சிறிய பொந்து. அங்கே தான் தமது சிறு வயதில் சார்லிசப்ளினும் அவரது சகோதரனும் முடங்கிக் கிடந்தார்களாம். தலையைக் குனிந்து தான் உள்ளே போக வேண்டியிருந்தது. அந்த இடத்தில் நின்ற போது சார்லியின் மனதில் பழைய நினைவுகள் பொங்கிப் பிரவகித்தன. சார்லி நண்பனிடம் கூறினார்.

''அப்போது அம்மா நோயாளியாக வைத்தியசாலையில் படுத்திருந்தார். நானும் எனது சகோதரனும் இந்த வீட்டில் இருந்தோம். வாடகை கொடுக்க வழி இருக்கவில்லை. வெளியில் கதவைப்பூட்டி விட்டு ஜன்னல் வழியாக ஏறிக்குதித்து உள்ளே படுத்துக்கொள்வோம். வீட்டுக்காரன் வாடகை வசூலிக்க வந்து பார்த்துவிட்டு எவரும் வீட்டில் இல்லை என நினைத்துக் கொண்டு போய் விடுவான்.'' நண்பர் ஆச்சரியத்தோடு தம்மைப் பார்ப்பதை உணர்ந்த சார்லிசப்ளின் ''ஆச்சரியமாயிருந்தாலும் அதுதான் உண்மை'' என்றாராம் அமைதியாக.

தமது கடந்த கால வாழ்க்கை நிலையை மறைத்து போலியாக வாழத் தெரியாத பெருந்தன்மை உலகில் ஒரு சிலருக்கே உண்டு.

★★★★★

## நம்பிக்கை



அரசன் ஒருவன், அப்பாவி ஒருவனுக்கு தவறாக தண்டனை தந்து சிரச் சேதம் செய்து விட்டான். தான் செய்த பாவத்தை உணர்ந்த அவன், முனிவர் ஒருவரிடம் பரிகாரம் கேட்கச் சென்றான்.

அவன் சென்ற நேரத்தில் முனிவரது ஆசிரமத்தில் அவரது மகன் மட்டுமே இருந்தான். அரசன், முனிவரின் மகனிடம் தன் பிரச்சினையைச் சொன்னான். கேட்ட சிறுவன், ''சிவ நாமத்தை மும்முறை சொல்லுங்கள் உங்கள் பாவம் நீங்கும்!'' என்றான்.

மன்னன், மகேசன் திருநாமத்தை மும்முறை சொல்லி முடித்த சமயத்தில் அங்கு வந்தார் முனிவர். நடந்ததைத் தந்தையிடம் சொன்னான் முனி புத்ரன். கோபம் கொண்டார் முனிவர். ''ஒரு முறை சொன்னாலே ஓராயிரம் கோடி பலன் தரும் ஈசன் நாமத்தை மும் முறை சொன்னால் தான் பாவம் நீங்கும் என்கிறாயே... இவ்வளவு அவநம்பிக்கை கொண்ட நீ ஓடக்காரனாய் பிறப்பாயாக'' என்று சாபமிட்டார்.

வருந்திய மகன் சாபவிமோசனம் கேட்க, ''அப்படிப்பிறந்தாலும் கங்கையில் படகோட்டி பிறரைக் கரைசேர்த்து ராமபிரானால் கரைசேரும் பாக்யம் பெறுவாய்!'' என்றார் முனிவர். அந்த முனிபுத்திரனே கங்கைக் கரையில் பிறந்து ஓடம் செலுத்தி ராமரின் நட்பைப்பெற்ற குகன்.

## என்னைக் கண்டால் உண்மையில் உங்களுக்குப் பயம் தான்



எனது பெயரைக் கேட்டாலே உங்களுக்கெல்லாம் பயம் வந்துவிடும். 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்று நீங்கள் கூறுவதுண்டல்லவா? அதைப் போல எனது உருவமும் பெயரும் சிறிதாக இருந்தாலும், உங்களுக்கு என்னைக் கண்டால் நடுக்கம் தான். அதற்குக் காரணம் என்னிடமுள்ள விசேடஅம்சமான 'கொடுக்கு' தான்.

கணுக்காலி தொகுதியிலே சிலந்தி வகுப்புப் பிராணிகளில் 'ஸ்கார்ப் பியானிஸ்' என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் நாங்கள். எங்களை ஆங்கிலத்தில் 'ஸ்கார்ப்பியன்' என அழைப்பார்கள். எங்களில் ஏறக்குறைய 400 வகை இனங்கள் உள்ளோம்.நாம் ஒரு வகையில் ஆதிவாசிகள் இனமெனக் கொள்ளப்படத் தக்கவர்கள். 25கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எமது இனம் இப்பூமியில் வாழ்ந்து வருவதைப் பாறைப் படிமங்கள் மூலம் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். எங்கள் இனங்களில் உள்ள அத்தனை தேர்களும் அளவில் வேறுபட்டிருந்தாலும், ஒரே மாதிரியான தோற்றம் கொண்டவர்களே. அந்த வகையில் அரை அங்குலம் முதல் எட்டு அங்குலம் வரையான அளவு வித்தியாசங்கள் எமது இனத்தாரிடம் உள்ளன.

எமது உடலில் முதற்பகுதி தலையும் மார்பும் ஒன்றாகச் சேர்ந்துள்ள தலைமார்பு அல்லது முன்னுடல் எனப்படும். இதில் ஆறு கண்டப் பகுதிகள் சேர்ந்துள்ளன. இரண்டாம் பகுதி வயிறு. இது ஏழு கண்டங்கள் அகலமானது. அதற்குப் பின் உள்ள ஐந்து கண்டங்கள் கொண்ட பகுதி வால். வாலின் நுனியில் தான் நீங்கள் பயப்படும் 'கொடுக்கு' என்ற நஞ்சு சுரக்கும் பகுதி அமைந்துள்ளது. நாம் ஒரு போதும் அநாவசியமாக எமது கொடுக்கைப் பயன்படுத்துவதில்லை. எம்மைத் தாக்குபவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக மட்டுமே ஒரு தற்காப்பு ஆயுதமாக நாம் கொடுக்கைப் பயன்படுத்துவோம். இரை எமது பிடியிலிருந்து தப்பிச் செல்லும் தருணங்களிலும் எமது கொடுக்கைப் பயன்படுத்துவோம். நாம் மனிதர்களைக் கொட்டினால் அந்த இடம் உடனே எரிச்சலுடன் வீங்கிவிடும். வைத்தியரிடம் உரிய மருந்தெடுத்தால் ஓரிரு நாள்களில் குணமடைய இயலும். ஆபிரிக்காவில் வாழும் எமது இனத்தவர்களில் சிலர் கொட்டினால் மரணம் கூட ஏற்படுவதுண்டு. தலைக்கு அருகில் எமக்கு இரண்டு பெரிய இடுக்கிகள் உண்டு. இவை இரையைப் பிடிப்பதற்கும்,உணர்ச்சிக் கருவிகளாகவும் செயற்படுகின்றன. தவிரவும் எமக்கு நான்கு சோடி கால்கள் உள்ளன. இவை நடப்பதற்கு எமக்கு உதவுகின்றன. முன் வயிற்றின் அடிப்புறத்தில் நான்கு சோடி மூச்சுத்துளைகள் உள்ளன.

எமது முக்கிய உணவு பூச்சிகள் தான். சிலந்தி, மர அட்டை, பூரான், கரப்பான் போன்வற்றைக்கூட சந்தர்ப்பம் வாய்த்தால் ஒரு கை பார்த்துவிடுவோம்.

ஜெயன், கந்தரோடை.

## வாழ்க்கைப் பாதையைச் சீரமைத்துத் தரவல்ல நல்ல நட்பு



நமது வாழ்வில் வரும் வெற்றி தோல்விகளை, இன்ப துன்பங்களை,சோதனைகள் வேதனைகளை, மன உளைச்சல்களை, ஆதங்கங்களை, நமது அந்தரங்க சிந்தனைகளை, எமது நம்பிக்கைக்குரிய இன்னொருவருடன் பகிர்ந்து கொள்வதனால் நல்ல பலன் கிட்டும்.

எம்மில் பலருக்குத் தமது சிந்தனைகளை ஏக்கங்களைப் பகிர்ந்து கொள்ளத் தகுந்த ஒருவர் கிடைப்பதில்லை; மேலும் நம்மில் பலர் யாரையுமே நம்புவதில்லை. இதுவே விரக்தி ஏற்படக் காரணமாகிறது.

மற்றவர்களுடன் நமது மகிழ்ச்சியைப் பகிரும்போது அது மகிழ்ச்சியை இரட்டிப்பு ஆக்குகிறது. துன்பங்களைப் பகிரும் போது அது அரைவாசியாகக் குறைந்து விடுகிறது. இது பலரின் அனுபவ உண்மைகள். யாதார்த்தமானதொன்று.

முன்னரெல்லாம் கூட்டுக் குடும்பங்களில் பெரியோர் பலர் இருந்து நமது நன்மை தீமைகளில் பங்கெடுத்து எம்மை வழிநடத்தினர். அது எமக்கு மறைமுகமான பயிற்சியாகவும் அமைந்தது. ஆனால் இன்று அந்த நிலைமாறி எவரை நம்புவது என்று தீர்மானிக்க இயலாது குழப்பமுற்று நாம் அங்கலாய்க்கிறோம்.

மனிதன் ஒவ்வொருவனதும் அந்தரங்கமும் ஒரு சாக்கடை.அது அடிக்கடி சுத்திகரிக்கப்படுதல் அவசியம். இல்லாவிடில் அக வாழ்வு மந்தமடைந்து செயற்பாடுகள் தடைப்படநேரும். அத்தகைய மன அசுத்தங்களை வெளியேற்ற நம்பிக்கைக்கு உரிய ஒருவர் நமக்குத் தேவை.

உயிர்த் துடிப்புள்ள இளைஞர்களின் பிரச்சினைகள், கணவன்-மனைவி அபிப்பிராய பேதம், பிள்ளை வளர்ப்பு, அயலவர்-உறவினர் சிக்கல்கள் மற்றும் ஆன்மீகம், இலக்கியம், விஞ்ஞானம் என்பவை குறித்த எண்ணங்களைப் பரிமாறி சிந்தனைத் தெளிவுபெற வயது, அறிவு, அனுபவங்களுடன் நல்லொழுக்கமும் கொண்ட நல்லதொரு நண்பர் கிடைத்தால் அது பெரும் பாக்கியமாகக் கொள்ளத்தக்கதே!

## கைக்குட்டை பாவனைக்கு வந்த விதம்



இப்போது வெளியில் செல்லும் போது நாமெல்லோரும் அடையாள அட்டையைப் போன்று கைக்குட்டையையும் எடுத்துச் செல்ல மறப்பதில்லை.

இந்தக் கைக்குட்டையைப் பயன்படுத்தும் வழக்கம் எப்போது யாரால் ஆரம்பிக்கப்பட்டது என்பது தெரியுமா? 14 ஆம் நூற்றாண்டின் ஒரு கால கட்டத்தில் இங்கிலாந்தை ஆண்ட றிச்சர்ட் என்ற மன்னரே கைக்குட்டையைப் பயன்படுத்தும் முறையை ஆரம்பித்து வைத்தார். அடிக்கடி தடிமனால் அவதிப்பட்டு வந்தபோது அவர் மூக்கிலிருந்து வழியும் சளியைச் சுத்தம் செய்து அகற்ற சிறு துணியைப் பயன்படுத்தத் தொடங்கி நாளடைவில் அதுவே கைக்குட்டை பயன்படுத்தும் வழக்கமாகப் பிரபல்யம் பெற்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுப்பு நிலம்.....

*[09 ஆம் பக்கத் தொடர்ச்சி....]*

அவளுடைய விழிகள் அவனைக் கவர்ந்தன. அவை மிகவும் அழகாக இருப்பதாக அவன் நினைத்தான். மீண்டும் ஒரு முறை அவளைப் பார்க்க வேண்டும் என்று அந்த நினைப்பு அவனைத் தூண் டியது. கையைத் தூக்கித் தலையின் முன் மயிரைத் தடவிவிட்டவாறே அவள்புறம் திரும்பிப் பார்த்தான். அவள் இன்னும் எழுதிக் கொண்டு தான் இருந்தாள்.

அந்த நாலுபேரிலும் அவள் மட்டும்தான் அழகாக இருப்பதாக அவன் நினைத்தான். பாடசாலை உடையில் அவள் அழகாகத்தான் இருந்தாள். பழுப்பு நிறமான வட்டமான முகத்திற்கு அவளுடைய சிறிது தடித்த சிறிய உதடுகள் கவர்ச்சியாக இருந்தன. அவள் அடிக்கடி கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு எழுதினாள். அதனால் அவள் இதழ்கள் ஈரமாக இருந்தன. அந்த இதழ்களின் ஈரப் பொழுபொழுப்பு அவனைக் கவர்ந்தது. அவளுடைய இரு காதுகளின் மேற்பகுதிகளும் கூந்தலுள் மறைந்திருந்தன. அவள் பின்னல்களில் ஒன்று தோளில் இருந்து வழுவி முன்புறம் விழுந்து கொப்பியின் மீது பட்டும் படாமலும் ஆடியது. அவள் அதை இடது புறங்கையால் ஒதுக்கிவிட நிமிர்ந்த போது அவளுடைய கண்கள் அவனைச் சந்தித்தன.

அவனுக்கு 'சுரீ' என்றது. தான் அவளைப் பார்த்துக் கொண்டிருந்ததை அவள் பார்த்துவிட்டதைக் கண்டதும் அவன் கண்கள் உயர்த்தி மேலே சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தான். பிறகு தனது மணிக்கூட்டையும் அதனோடு ஒப்பிட்டுப்பார்த்தான். தன்னைப் பற்றி அவள் பிழையாக நினைக்கக்கூடும் என்று அவன் நினைத்தான். அந்த நினைப்பு அவனைச் சுட்டது. அவள் அவ்வாறு நினையாமலும் இருக்கலாம். அவளுக்கும் என்னைப் பார்ப்பதில் ஒரு கவர்ச்சி உண்டாகி இருக்கலாம். நான் அவளைப் பார்த்ததனால் கவர்ச்சி கொண்டு அவள் மீண்டும் என்னைப் பார்க்கக்கூடும் என்றெல்லாம் அவன் நினைத்தான்.

எனினும் இனி அவளைப் பார்க்கக் கூடாது என்று அவன் உறுதி கொண்டான். தான் பார்க்காவிட்டாலும் அவள் தன்னைப் பார்ப்பாள் என்ற எண்ணத்தில் அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். கையில் இருந்த தமிழ்ப் பத்திரிகையைப் போட்டுவிட்டு ஓர் ஆங்கிலப் பத்திரிகையை எடுத்துக்கொண்டான். அவனுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆனால் சாதாரணமாக வாசிக்க முடியும். வாசிப்பது அரை குறையாக விளங்கும். ஆயினும் அவன் அதை வாசிக்கத் தொடங்கினான். அடிக்கடி வாசித்ததை நிறுத்தி வாசித்ததை ஆழ்ந்து சிந்திப்பதுபோல் நெற்றியைச் சுருக்கிக் கொண்டான். எதையோ கண்டு மகிழ்சியுற்றவன்போல முகத்தை மலர்ச்சி அடையச் செய்து கொண்டான்.

என்றாலும், 'சே இது பெரிய கேவலம்' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். சாதாரணமாக இருக்க முனைந்தான். காற்சட்டைப் பையில் இருந்த கைலேஞ்சியை எடுத்து முகத்தையும் கழுத்தையும் பிடரியையும் துடைத்துக் கொண்டான். பிறகு பத்திரிகையை வேகமாகப் புரட்டி அதில் உள்ள படங்களைப் பார்க்க முனைந்தான்.

ஆயினும், மனம் அலைபாய்ந்தது. அவள் இதற்கிடையில் தன்னைப் பார்த்திருக்கலாம் என்று அவன் கற்பனை பண்ணினான். இப்பொழுது அவள் என்ன செய்கிறாள்? உதட்டைக் கடித்துக் கொண்டிருக்கிறாளா இல்லையா? என்று பார்க்க வேண்டும் போல இருந்தது. என்றாலும் அவன் பார்க்கவில்லை. தான் பார்ப்பதை அவள் பார்த்துவிட்டால் தன்னைப் பற்றிக் குறைவாக நினைப்பாள் என்று அவன் எண்ணினான். அது தனது ஆண்மைக்குப் பெரிய அவமானம் என்று அவன் கருதினான்.

அவள் யாராக இருக்கக்கூடும் என்று கூட அவனுக்குத் தெரியாது. பள்ளி மாணவி என்பது மட்டும் நன்றாகத் தெரிந்தது. பள்ளி விட்டதும் புத்தகக் கட்டோடு வந்து ஏதோ குறிப்பு எடுக்கிறாள் என்பதும் தெரிந்தது. ஒருவேளை அவள், 'அட்வான்ஸ் லெவல்' படிக்கக் கூடும்; எங்கே படிக்கிறாளோ? வின்சன் தானே பக்கத்தில் இருக்கிறது. அங்கே தான் படிக்கக்கூடும் என்றெல்லாம் யோசித்தவாறே ஜன்னலூடு பார்வையைச் செலுத்தினான்.

பாலத்தின் ஊடாக ஒரு வைக்கோல் லொறி மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. ஜன்னல் நிலைப்படியில் ஒரு அடைக்கலம் குருவி வந்து நின்று 'கீச்' என்று இருமுறை கத்தியது. பிறகு எங்கோ வெளியே பறந்து சென்றது.

பக்கவாட்டில் கதிரைகள் இழுபடும் சத்தம் கேட்டது. அவர்கள் போவதற்காக எழுந்துவிட்டார்கள் என்று அவன் நினைத்தான். அவளைப் பார்க்கக்கூடாது என்ற உறுதியுடன் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டினான். செருப்புச் சத்தங்கள் மெதுவாக ஒவ்வொரு அடியாகக் கேட்டன. தான் பார்ப்பதனாலோ பார்க்காமல் விடுவதனாலோ தனக்கோ அவளுக்கோ என்ன வந்துவிடப் போகின்றது என்று அவன் நினைத்தான். இது தனது பலவீனம் தான் என்று யோசித்தபோது அவளைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது.

அவள் கீழே குனிந்து கொண்டு ஒவ்வொரு அடியாக இறங்கிச் சென்றாள். கீழே செருப்புகளின் ஓசை கேட்டு மறைந்தது. அவனுக்கு நெஞ்சில் சிறிது உறுத்தலாகவும் பாரமாகவும் இருந்தது. இது வெறும் அர்த்தமில்லாத உணர்ச்சி என்று அவன் நினைத்தாலும், அது அப்படித்தான் இருந்தது. அவள் பின்னலைத் தள்ளிவிடுவதற்காக நிமிர்ந்த அந்தச் சந்தர்ப்பத்தில் தான் பின்வாங்காது அவளுடைய கண்களை உற்றுப் பார்த்திருக்கலாம் என்று அவன் எண்ணினான். தான் பார்த்திருந்தால் அவளும் கண் கொடுத்திருக்கக்கூடும் என்று அவன் நினைத்தான். அவளுடைய பொழுபொழுப்பான கன்னங்களும் ஈரமான உதடும் எண்ணெய் பூசாத கூந்தலும் அவன் கண்ணுக்குள் நின்றன.

அவள் இருந்த கதிரையை வெறித்துப் பார்த்தான். இப்போது யாரைப் பற்றியும் அவன் கவலைப்படவில்லை. ஏனென்றால், அவன் பார்க்கும் இடத்தில் அந்தப் பெண்கள் இல்லை. கதிரைகள் காலியாகத்தான் இருந்தன. எழுந்து அவள் பின்னாலேயே சென்று பார்ப்போமா என்று யோசித்தான். கூடவே உடனே சென்றான். நான் அந்தப் பெட்டைகளைப் பார்ப்பதற்காகத்தான் அவர்கள் பின்னால் எழுந்து செல்கிறேன் என்று மற்றவர்கள் நினைக்கக்கூடும் என்ற எண்ணம் எழுந்தது.

அவன் கடிகாரத்தைப் பார்த்தான். நாலரை மணி. ஐந்து மணிக்கெல்லாம் ஆஸ்பத்திரியில் நிற்கவேண்டும். அவனுடைய சகோதரிக்கு நேற்று ஒப்பரேஷன் நடந்தது. அவளைப் பார்ப்பதற்காகத் தான் கல்முனையில் இருந்து காலையில் வந்தான். ஆறேகால் கல்லோயா எக்ஸ்பிரசில் திரும்பிப் போகவேண்டும். அவன் எழுந்து கீழே சென்றான். அவளும் தோழிகளும் பள்ளிவாசல் வாகையின்கீழ் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நிற்கும் போது அவன் அவர்களைக் கடந்து போக விரும்பவில்லை. இப்போது போனால், தங்களைப் பார்ப்பதற்காகத்தான் இவன் வருகிறான்.' என்று ஒருவேளை அந்தப் பெட்டைகள் நினைக்கக்கூடும் என்று அவன் எண்ணினான்.

வாசிகசாலைக்கு வெளியே நாட்டி இருந்த விளம்பரப்பலகையை வாசிக்கத் தொடங்கினான்.

பொது நூல் நிலையம்
மட்டக்களப்பு...
திறந்திருக்கும் நேரம்....
மூடும் நேரம்....

என்று ஒவ்வொன்றாக வாசித்தான். அது அலுத்த பின் வெறுமையாகக் கிடந்த கோட்டடியையும் தூரத்தெரிந்த கச்சேரி மதிலையும் நகரசபைக் கட்டடத்தையும் பார்த்துக்கொண்டு நின்றான். விளையாட்டு மைதானத்தில் ஏழெட்டுப் பெண் பிள்ளைகள் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவளும் தோழிகளும் தபாற்கந்தோரடியால் நடந்து கொண்டிருப்பதை அவன் கண்டான். அவன் சிறிது தூரம் நடந்து பள்ளி வாசலடிக்கு வந்தான். அவர்கள் நெடுக நடந்து கொண்டிருந்தார்கள்.

'நெடுகப் போனால் அவர்களுக்குப் பின் தொடர்ந்து போவது போல இருக்கும். நாம் சென்றல் கொலிச்சால போவம்' என்று அவன் குறுக்கு வீதியால் திரும்பி நடக்கத் தொடங்கினான். நெடுகவும் போய் இருக்கலாம் என்று ஒரு மனம் சொல்லியது. அவளுடைய இடை அசைந்து செல்லுவது மிகவும் அழகாக இருப்பதாக அப்போது அவன் நினைத்தான். ஆயினும் அவன் குறுக்கு வீதியால் நடந்து கொண்டிருந்தான். இவளுகளப் பாத்தாத்தான் என்ன? பாக்காட்டித்தான் எனக்கென்ன? என்று நினைத்தவாறே அவன் தன்பாட்டில் நடந்தான்.

'சே! எப்பவும் இப்படித்தான். நான் ஒரு மடையன்' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

************

## சொற்சிலம்பம் - போட்டி இல: 84

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | 5 | 6 | |
| | ■ | 7 | | | | | ■ |
| 8 | 9 | ■ | 10 | | | | 11 |
| 12 | | 13 | ■ | | ■ | 14 | |
| 15 | | | | ■ | 16 | | ■ |
| | ■ | | ■ | 17 | | ■ | 18 |
| ■ | 19 | | 20 | | ■ | 21 | |
| 22 | | ■ | 23 | | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### மேலிருந்து கீழ்

1. நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகியன.
2. சபை.
3. கீர்த்தி.
4. பாடுபவன்.
5. தரையில் கைகளை ஊன்றி, கால் முட்டிகளைப் பயன் படுத்தி ஊர்ந்து செல்.
6. சிங்கம் எழுப்பும் ஒலி.
9. துலக்கம் குறைய.
11. புன்னகை புரி.
13. வனம்.
16. குழந்தையின் உணவு.
17. விடை
18. ஈராக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி.
19. எடை.
20. போதை தரக்கூடியது.
21. கழித்தல் குறியீடு.

### இடமிருந்து வலம்

1. செய்யக்கூடாத ஐந்து பாவங்கள்.
7. கௌரவரின் சகோதரர்கள்.
8. ஒரேயளவான.
10. ஒருவரைப் பற்றி ஏற்றிப் போற்றிக் கூறுதல்.
12. நந்தவனம்.
14. இணக்கச் சொல்.
15. எரிதல்.
16. ஒரு பாத்திரம்
17. மனிதனுக்கு முப்பத்திரண்டு.
19. வாழ்க்கையில் அனைவரும் வேண்டுவது இதைத்தான்.
21. எந் நேரமும்.
22. ஒரு தோல் வாத்தியம். -
23. மிகச் சரியாக.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்ட சாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 84**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 04.11.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல. 84இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 08.11.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 82 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) முதலாவது (5) இசை (6) கரு (7) தனிதல் (9) தாமதம் (11) கலம் (12) திரு (13) அரம் (15) மதுவம் (17) நுகம் (19) ஆடி (20) பரு (21) சரணாகதி (22) விவிலியம் (23) வேல்.

**மேலிருந்து கீழ்**
(1) முகதா (2) தருமதி (3) வதம் (4) துணி (5) இல்லம் (8) தகரம் (10) தருமம் (13) அவதாரம் (14) அநுபவி (16) கடிதில் (18) கருவி (19) ஆகவே (21) சய.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 82 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** அன்ரன் தூறோசன் பொயற்றலலா, இல.15/1, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** செல்வி மு. ஆரணி, யா/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு** பிரம்மஸ்ரீ சக. சுதர்சனக்குரு, சிவன் கோயிலடி, ஆவரங்கால், புத்தூர்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) சி.சரவண[illegible], சங்குவேலி[illegible], மானிப்பாய்.

(2) செல்வி கு.லதாங்கி, இல.34, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

(3) [illegible], [illegible], மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(4) சி.நளினி, மக்கள் வங்கி, சுன்னாகம்.

(5) ந.பாலகுமார், தரம் 9 ஏ, யாழ் - இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நரையுடையானேன்!

அகவை சிலவாக என் கேசம் நரையுடை ஆனமை
பகரும் காலை பலவுள ஏதுக்கள்
சோதரிகளிருவரும்தம் ஆருயிர்
துணைவரைத் தொலைத்தனர்
அகமுடைந்த னர் ஆதலின் ஆழ்ந்தேன் துயரில்
மக்கள் எல்லாம் மானிகளா யேகினர்
பக்கம் எல்லாம் பற்பல பாடுகள்

உற்றார் அனைவரும் ஊரைச் துறந்தனர்
கற்றாரெல் லாம்குரை கடல் தாண்டினர்
களவும் கடனொடும் காவலும் இழந்தே
வளமும் குறைய வள்ளல்கள் நலிந்தனர்
உறவெலாம் வாடி ஊர்கெட்டுப் போனமை
பறக்குமென் இளநரை பகரும் ஏதுக்களே!

- பிறை.


சாடிக்கேற்ற மூடி!
வேலைக்கேற்ற சீமெந்து, ஹொல்சிம்!




கொங்கிரீட்டிற்காகவே தயாரிக்கப்பட்ட சீமெந்து ஹொல்சிம் சங்ஸ்தா சுபிரி


சுவர் கட்டுவதற்கும், சாந்துப்பூச்சிற்கும் மிகச் சிறந்த சீமெந்து ஹொல்சிம் சங்ஸ்தா பெதரேரு

அசுர பலத்துடன் அம்புஜா சீமெந்து

உட்கட்டுமான வேலைகளுக்கு ஹொல்சிம் ரெடி ஃப்லோ

தேசத்தின் மிகச் சிறந்த சீமெந்து

Holcim


தனித்துவ பாரம்பரிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் யாழ்ப்பாணத்திலும் ஈகிள் காப்புறுதியின் அரவணைப்பு

உலகின் ஐந்தாவது மிகப்பெரிய காப்புறுதி நிறுவனமான அவிவாவின் சக்தியினால் பலம் கொண்ட ஈகிள் காப்புறுதி நிறுவனத்தின் யாழ் அலுவலகம், இல.62/6, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 2009 ஒக்டோபர் 26ஆந் திகதி திறந்துவைக்கப்படுகிறது.

ஈகிள் இன்சூரன்ஸ்
AVIVA அங்கத்தவர்

AVIVA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

யாழ்ப்பாணத்தில் பாடசாலைச் சீருடைகள்
தைப்பதற்கு தையல் தெரிந்த
(SEAMSTRESSES)
பெண் தொழிலாளர் தேவை.
விண்ணப்பங்களைக் கீழ்காணும் முகவரிக்கு
அனுப்பிவைக்கவும்.
த.பெ.இல.:23, யாழ்ப்பாணம்.
(சி/558499)



# தேவை கணக்கு இலிகிதர்

யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்தாபனம் ஒன்றிற்குக் கணக்கியல் துறைசார்ந்த பெண் இலிகிதர் தேவை. இவர் க.பொ.த. (உ/த) இற்கு மேற்பட்ட தராதரம் உடையவராகவும், 23 - 30 வயதிற்கு இடைப்பட்டவராகவும், யாழ்.நகரிலிருந்து 5 கிலோ மீற்றர் இடைப்பட்ட இடத்தில் வசிப்பவராகவும் இருக்கவேண்டும்.

மேலதிக உயர் கணக்கியல் தராதரங்களும், வேலை அனுபவங்களும் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. விவாகம் செய்த பெண்களும் விண்ணப்பிக்கலாம்.

C/O, விளம்பர இல:3954,
உதயன் பத்திரிகை நிறுவனம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(90222)



# வெளிவந்துவிட்டது !




தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் சி.பிரணவனின்
க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான
"ICT வினா விடை"
(கடந்த கால வினாக்களுடன், அலகு ரீதியான
வினா விடைகள் மற்றும்
எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியது)
கிடைக்கும் இடம் :
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தக சாலை
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

ஆசிரியரின் மாபெரும்
தகவல் தொடர்பாடற் தொழில் நுட்ப
கருத்தரங்கு

காலம் : 02.11.2009 காலை 10.00 மணி
இடம் : Softview Computer College
அரசடி வீதி,யாழ்ப்பாணம்
(தட்டாதெரு சந்திக்கருகில்)


## சமாதானத்துக்கான நிரந்தர.....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

1957 ஆம் ஆண்டிலிருந்தே இச்சிக்கலுக்கான தீர்வுகளைத் தேடிப்பெறும் பொறுப்பை அரசியல்வாதிகளே தமது கரங்களில் எடுத்துக் கொண்டு வழங்கியுள்ள அனைத்துத் தீர்வுகளும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. அந்தவகையில், 1957ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க செல்வநாயகம் இடையிலான ஒப்பந்தம் முதற்கொண்டு இற்றை வரையிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் தீர்வு மார்க்கங்களும் சிதைவடைந்து, நாட்டை அழிவை நோக்கி இட்டுச் சென்ற யுத்த மொன்றும் கூட உருவாகி விடுவதற்கு அரசியல்வாதிகளின் அவ்விதத்திலான நடவடிக்கைகளே காரணமாகியிருந்துள்ளன.

இவ்வளவுக்குப் பின்னரும், இன்றைய அரசு, தீர்வு மார்க்கங்களைத் தேடிப் பெறுவது தொடர்பான அக் கருமத்தை அனைத்துக்கட்சிக் குழுவிடம் ஒப் படைத்துள்ளது. இங்கு இனப்பிரச்சினை சம்பந்தமான சமமான கருத்துக்களைக் கொண்டுள்ள எந்தவொரு அரசியல் கட்சிகளையோ அல்லது குறைந்த பட்சமாக இரு அரசியல் கட்சிகளையோ, தேடிக் கண்டறிந்து கொள்ள இயலாதுள்ள நிலைப்பாடொன்றினுள், பல்வேறு- ஒன்றுக்கொன்று முரணான-கொள்கை நிலைப் பாடுகளை அடித்தளமாக அமைத்துக் கொண்டுள்ள கட்சிகள் அனைத்தினதும் இணக்கப்பாட்டுடன் தீர்வொன்றைத் தேடி கொள்வதென்பது செயல்பூர்வமாகச் சாத்தியப்பட மாட்டாதென்பது அரசுக்குப் புலப்படாதிருப்பது துரதிஷ்டவசமானதாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றை மட்டுமே ஆராய்ந்து பார்த்தாலும் கூட, ஆக்கபூர்வமான நடைமுறைகளைக் கண்ட றிந்து கொள்ள முடியும். அந்த வகையில், ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்துள் அரசுக்கு எதிராக முன்னெழுந்த மக்கள் எழுச்சிகளுக்குப் பரிகாரங்களைத் தேடிப் பெறுவதற்காக புத்திஜீவிகள் உள்ளடங்கிய ஆணைக்கு ழுக்கள் நியமிக்கப்பட்டிருநடந்ததாகவும் கோல்புரூக் ஆணைக்குழு, டொனமூர் ஆணைக் குழு, சோல்பரி ஆணைக்குழு, 1927 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி ஆணைக் குழு என்ற ஆணைக்குழுக்களினால், அரசுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள் அடித்தளமாகக் கொள்ளப் பட்டு, அவற்றின் மூலம் அடிமைத் தளை மட்டத்திலிருந்து டொமினியன் நிலைப்பாடு வரையில் இலங்கை நாட்டை இட்டுச் சென்ற நிர்வாக முறைமைகள் முகிழ்ந்திருந்ததை எம்மால் அறியமுடிகிறது. மேலும், 1818 மற்றும் 1848ஆம் ஆண்டுகளில் தலையெடுத்த கிளர்ச்சிகளின் போது ஆயுத பலத்தால் அவற்றைத் தோல்வியுறச் செய்வதற்கு முடிந்திருந்த போதிலும் கூட, அவற்றின் பின்புலங்களாகியிருந்துள்ள மக்களின் அதிருப்தி நிலை தொடர்பாக ஆணைக்குழுக்களிடமிருந்து பரிந்துரைகளைப் பெற்று, நிர்வா கக் கட்டமைப்புக்கள் நேர்சீர் செய்யப்பட்டன என வரலாற்றிலிருந்து எம்மால் பாடங் களைக் கற்றுத் தேற முடியும். எவ்வாறான போதிலும், இன்றைய அளவில், வெற்றிகரமானதொரு அரசியல் தீர்வொன்றின் மூலம் நிரந்தர சமாதானத்தை நோக்கிப்பயணிப்பதற்கான கதவு இந்த யுத்த வெற்றியை அடுத்து இன்றைய அரசுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. அரசியல் வாதிகளின்-தோல்வியில் முடியும் தீர்வுயோசனைகளைப் புறமொதுக்கி வைத்து, புத்திஜீவிகள் உள்ளடங்கும் ஆணைக்குழு வொன்றை நிறுவி, பொருத்தமான நிர்வாகக்கட்ட மைப்பைச் சம்பந்தப்படுத்தும் பரிந்துரைகளைப் பெறுவதற்கு இன்றைய அரசு செயற்படுமானால், அது, புத்திசாலித்தனமான கருமமாக அமையக் கூடும்.

***************


# 25 ஆம் ஆண்டு நினைவு நாள்

அன்னையின் மடியில்
11 * 04 * 1972



இறைவனின் அணைப்பில்
25 * 10 * 1984

செல்வி நிமாலினி வீரசிங்கம்
(பாப்பா)

எங்கள் செல்ல மகளே, நம் வீட்டில் முழு நிலவாய் வந்தாய்
சொல்லாமல் மறைந்ததென்ன?
அந்த நிலவுகூட நொந்து தான் வளரும்
அம்மா நீயும் உன் நினைவுகளும் எம் மனதில்
என்றென்றும் தேயாத நிலவம்மா.....

34/1, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கைமார்.
(90107)



# 3 ஆம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்



மலர்வு 12 - 03 - 1952
உதிர்வு 29 - 10 - 2006
தர்மலிங்கம் இராகவி



மலர்வு 23 - 03 - 1982
உதிர்வு 29 - 10 - 2006
தர்மலிங்கம் சுஜீந்தினி

உங்கள் அன்பான முகங்கள் எம் கண்முன்னே இன்றும் தோன்றுகின்றதே
ஆனால் வாய் விட்டுக் கதைக்க முடியவில்லையே
எந்நாளும் உங்கள் நினைவுடன் வாழும் உங்கள் உறவுகள்.

ம.தர்மலிங்கம் (கணவர்),
த.சசிகுமார் - ச.சுதாகினி (மருமகன் -மகள்),
த.சுகன்ஜா, சந்துஜன், சந்திஸ்கா (பேரப்பிள்ளைகள்).

இலகடி,
உடுப்பிட்டி.
(90227)



# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 25.05.1948
மறைவு: 29.10.2006

அமரர் தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்
திதி: 25.10.2009
பூர்வபட்ஷ சப்தமி

(பிஸ்கால் உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்)


குடும்பத்தின் வேராகநின்று உழைத்தவரே!
ஆலம் விழுதுபோல் இருக்கும் உறவுகளை எல்லாம்
தவிக்க விட்டுச் சென்று மூன்று ஆண்டுகள் ஆகியும்
ஏற்றிய தீபமாய் எம் நெஞ்சில்
என்றும் அணையாது இருப்பீர்கள்

70, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் உமை மறவா
மனைவி,
பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர் (மாதகல்).
(90089)



# யாழ் புத்தக கண்காட்சி 2009




Main Sponsor
எம்.டி.குணசேன
புத்தக சாலை

Endorsed by
Ministry of Education
Northern Provincial Council

Official stall contractor
pico

அனுமதி இலவசம்

Organized by
pico Events

28 - 31 ஐப்பசி
(9 a.m - 5 p.m)
யாழ் மத்திய கல்லூரியில்
(சி/55840)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறிய விலங்கினம்தான் அது ஆனாலும் எலிகளிடம் உள்ள திறமைகளோ ஏராளம்

என் வாதத்தையும் செவிமடுத்து எலிகள் கூட்டத்தை விடுவிக்க ஆவன செய்வீரா?

இது ஒன்றும் விதண்டா வாதமில்லை 'ஐயா'!

மாண்புமிகு நீதிபதி



அவர்களே!

உருவத்தில் சிறியவர் என்பதால் என்கட்சிக்காரரான எலியாரை எதிர்த்தரப்பு வக்கீல் நையாண்டி செய்து மடக்கப் பார்ப்பது சரியல்ல. ஆறறிவுடைய வக்கீல் ஒருவர் ஐந்தறிவு கொண்ட என்கட்சிக்காரரை மட்டமாக நினைப்பதையும், அவருக்கு மரியாதை கொடுக்காது இழிவாகப் பேசுவதையும் நிறுத்த வேண்டும். ஒரு விலங்கு இன்னொரு விலங்கை இம்சைப்படுத்த இடமளிக்கக்கூடாது. என் கட்சிக்காரரின் கோரிக்கை நியாயமானது, நீதிபதி அவர்களே! தாமுண்டு தம்வேலையுண்டு என தமக்காகவும் உண்டு தன் குட்டிக்காகவும் சேமித்து வைப்பதை குற்றமென்று கூறி முன் அறிவிப்பு எதுவுமின்றி கைது செய்து கூண்டில் அடைத்திருக்கிறார்கள். இரண்டு நாள்களாக உணவோ, தண்ணீரோ கிட்டாத விதத்தில் தாம்வைத்த பொறிக் கூண்டில் என் கட்சிக்காரரைச் சிக்கவைத்துத் தவிக்க விட்டிருக்கிறார்கள். மிருக வதை என்பது மிகப்பெரிய குற்றமே.

எவருமே இவ் வாயில்லாத ஜீவன்களுக்காக வாதாட முன்வராததால் மனித நேயத்துடன் நான் இவர்களுக்காக வாதாட முன்வந்துள்ளேன். இவர்களின் கதை துன்பமானது. இவர்களைப் பற்றி எவருமே இவர்கள் பக்கத்திலிருந்து சிந்தித்தது இல்லை. ஆனால் மிருகக் கூட்டங்களுள் சிறுபான்மையினர் என்றாலும் இவர்களை இப்போது கணக்கில் கூட எடுக்க முடியாது என விதண்டாவாதம் பேசும் எதிர்க்கட்சி வக்கீலைத் தமது வாதத்தை சற்று நிறுத்தச் சொல்லுங்கள். இவர்களும் இந்த நாட்டின் பிரஜைகளே. விஞ்ஞான அகராதியைத் தட்டிப் பாருங்கள். விலங்கு இராட்சியத்திலே பூச்சிகள், பறவைகள், மீன்கள், கால்நடைகள் குறிப்பாக ஆடுகள், மாடுகள் என நீண்டு செல்லும் பட்டியலில் என் கட்சிக்காரரான எலிகளும் ஒரு தரப்பினரே!

இவற்றுள் குட்டியீன்று பால் கொடுப்பனவற்றை முலையூட்டிகள் என்கின்றனர். முலையூட்டிகளுள் மனிதரான என் எதிர்கட்சிக்காரரைப் போல என்கட்சிக்காரரும் தம் குட்டிகளுக்கு பால் கொடுத்து கண்ணை இமை காப்பதுபோல காக்கின்றனர். ஆனால் மனிதர்கள் இப்போதெல்லாம் தமது குழந்தைகளுக்கு தாய்ப்பாலை கொடுப்பதில் சிரமப்படுகிறார்களாம். தமது பிள்ளையை பெற்றவுடன் பசுப்பாலை பவுடராக்கி பின் அதைக் கரைத்து பாலாக்கி கொடுக்கின்றனர். இதனால் தானோ என்னவோ அவர்களது பிள்ளைகளும் மந்த புத்தியுள்ளவர்களாகி பசுப்பால் உடல் முழுவதும் சுவறி ஐந்தறிவு ஜீவன்களாகித் திணறுகின்றனவாம். என்கட்சிக்காரரிடம் உள்ளது போல தாய்ப் பாசத்தை எங்கும் காணமுடியாது.

தன் குட்டிகளுக்காக உணவு சேமித்து அவர்களை வளர்த்து ஆளாக்கி விடும் திறமையே தனி. ஏனைய பாலூட்டிகளைப்போல உடல் முழுவதும் மயிர்களைக் கொண்டிருந்தாலும் அவர்களைப் போல பெரிய மூளையையும் கொண்டிருக்கின்றனர். இதனால் என் கட்சிக்காரர்களுக்கும் புதிய விடயங்களை கற்றுக்கொள்ளும் தன்மை அதிகம். ஏனைய பாலூட்டிகளுக்கு ''நஞ்சு'' எனப்படுபவை என் கட்சிக்காரருக்கும் நஞ்சாகுமாம்.

### எலிகளுக்கு நிறங்கள் தெரியாது

ஏழுவர்ணத்தில் வானவில்லைக் கண்ட மனிதரைப்போல என் கட்சிக்காரரான எலிகளுக்கு நிறமென்று பிரித்தறியத் தெரியாது. கேட்பதையும், மணப்பதையும் வைத்தே அவர்களால் சுற்றாடலில் உள்ளவற்றையும், நடப்பதையும் அறிய முடிகின்றது. மனிதரைப்போல ஆறாவது அறிவும் இல்லை, ஐம்புலன்களும் இல்லை, நால்டியாரும் தெரியாது, மும்மொழியும் தெரியாது. சூழலில் ஏற்படும் மாற்றங்களை விரைந்து குறிப்பறியும் ஆற்றல் இருந்தாலும் என்கட்சிக்காரர்களினால் உருவங்களை உருப்படியாக இனம்கண்டறிய முடியாது. ஆனால் தூரப்பார்வையுடையவர் போல மிக நெருக்கமாக உள்ள உருவங்களை ஓரளவிற்கு இனம்காண முடியுமாம். இவர்களுக்கு கேட்கும் சக்தி அபரிமிதமானதாகும். இதை வைத்தே எலிகளனைத்தும் தப்பிப் பிழைக்கின்றன.

என்கட்சிக்காரர்களின் இவ்விதமான இயல்பைக் கருவியாக்கி மனிதர்கள் வெவ்வேறு எலிவிரட்டும் பொறிகளை ஆறறிவு கொண்டு கண்டுபிடித்து இவர்களை விரட்டுகிறார்கள். இவ்விதமான மிகத்துல்லியமானதும் வேகமானதுமான ஒலியை உருவாக்கும் பொறிகளை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்து பாரிய வியாபாரத்தை முடுக்கி விட்டிருக்கிறார்கள். ஆனாலும் என் கட்சிக்காரர்கள் இதற்கெல்லாம் சளைத்தவர்கள் அல்லவே. மனிதனது செயல்களை, நடமாட்டத்தை இலகுவில் கண்டறியும் வல்லமை எலிகளுக்கு உண்டு. ஆனால் மனிதனது தாக்குதல்களைத் தாங்கி வாழும் திறனுடையதாகவோ அல்லது தவிர்க்கும் திறனுடையதாகவோ செயற்பட என் எலிகளுக்கு சக்தியில்லை என்பது வருத்தத்துக் குரியதே.

### எலிகளுக்கு நுகரும் சக்தி

நீதிபதி அவர்களே!

அநேகமான எலிகள் உணவையும் தன்னுறவையும் கண்டுபிடிக்க நுகரும் சக்தியையே பயன்படுத்துகின்றன. ஒவ்வொரு எலியும் மற்றயதை மணந்து பார்த்தே இனம்கண்டு கொள்ளும். இதைவிட என்கட்சிக்காரர்களுக்கு நன்கு சுவைத்து அனைத்தையும் இனம்காணும் திறனும் உண்டு. சுருக்கச் சொன்னால் சிறந்த சுவைப்பிரியர்கள். இதனைக் கொஞ்சமேனும் கருத்திலெடுக்காத மனிதர்களை என்னவென்பது. அதனால் தான் அதைக்கடித்து இதைக்கடித்து இறுதியில் மனிதரையே கடித்து விட்டார்கள். தவறுதலாக கடித்தது உண்மைதான் நீதிபதி அவர்களே! அதனால் நோய் பரவும் என என் கட்சிக்காரரின் ஐந்தறிவுக்கு இதுவரை புலப்படவில்லையே. உண்மையை இங்கே உரைத்ததால் என் கட்சிக்காரருக்கு கொஞ்சமேனும் கருணை காட்டுங்கள். ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை.....மன்னித்துவிடுங்கள்! வாய்தடுமாறி வழமையாக பாடுவது

## விலங்கிலிருந்து மனிதனுக்கு.... சேதங்களும், தொற்று நோய்களும் 11

வந்துவிட்டது.

சுவைக்கும் திறனை எலிகள் விருத்தி செய்து வைத்திருப்பதால் தங்களை கொல்வதற்கும் நோய்வாய்ப் படுத்துவதற்குமான உணவுகளை மனிதன் வைக்கும் போது இந்த கள்ளத்தனத்தைப் புரிந்து, அந்த நஞ்சாக்கிய உணவை உண்பதிலிருந்து தவிர்த்து விடுவர். மனிதனுக்கு மட்டுமேயான இந்த தீய புத்தி வேறுஎவருக்கும் இல்லை. தன்னுறவுகளுக்கே உணவிலும், சொல்லிலும் மனதாலும் கூட நஞ்சு வைக்கும் செயலை என் கட்சிக்காரர்களிலும் செய்து பார்க்கிறார்கள். ஆனாலும் நீதிபதி அவர்களே! எலிகள் சிமெந்தையும், இரும்பையும் இன்னும் பலவற்றையும் பற்களால் சுரண்டிப்பார்க்கும் அதே வேளையில் அவை தமது வாயினூடாக வயிற்றினுள் செல்வதை தடுத்தும் கொள்வர். அவற்றை சுவைத்தும் பார்ப்பதில்லை. தமது முன்பற்களுக்கும் இறுதி பற்களுக்கும் இடையிலான சவ்வு ஒன்றினால் இவ்வாறு தடுப்பது சாத்தியமாகிறது. இந்த சவ்வு மூடும்போது அவர்களது கூரிய பற்கள் வாயின் வெளிப் பகுதியிலிருக்கும்

### எலிகளின் ஆற்றல் யாருக்கு தெரியும்?

என்கட்சிக்காரர்களான எலிகளைப் பற்றி கூற எனக்கு ஆனந்தமாயிருக்கிறது. இவர்களால் நன்றாக நீந்தவும் விரைந்து மரத்திலேறவும் முடியும். கழிவு நீர்ப்பைப்புகள், மரங்கள் மற்றும் மின்சார வயர்களில் கூட ஏறி கட்டடங்களுக்குள் புகும் தன்மை இவர்களுக்குண்டு. எனது கட்சிக்காரர்களில் அநேகமானவர்களுக்குப் பெரிய கால்வாயைக் கூட நீந்திக் கடக்கத் தெரியும். இதெல்லாம் தெரிந்தே ஆழிக்குமரன் ஆனந்தனும் கடலில் நீந்திச் சாதனை படைத்தாராம்.

### எலிகளின் நடமாட்டம் குறுகிய வட்டத்திற்குள்

அநேகமான எலிகள் தங்களது நடமாட்டத்தை தினமும் சிறிய இடத்தினுள் ஏறக்குறைய அரைப்பரப்பிலிருந்து ஒரு பரப்பு நிலத்தினுள் முடக்கிகொள்வர். சுதந்திரமாக நடமாடும் வசதியைக் கூட மனிதர்கள் என்கட்சிக்காரர்களுக்கு தராத காரணத்தால், இவ்வாறு அவர்களது நடமாட்டமும் சுருங்கிவிட்டது. தாங்கள் தினமும் ஒரே பாதையில் சென்றுவரவே விரும்புவார்கள். இதனை ஒற்றுப்பார்க்கும் மனித கூட்டம் தமது திறமையினால் இந்தப்பாதையில் நஞ்சாக்கிய உணவையோ அல்லது பொறிகளையோ வைத்து எலிகளைக் கவர்ந்திழுத்துப் பிடித்து அடித்துக் கொலை செய்கின்றனர். தெரு நாயைப் பாதுகாப்பதற்கென இன்னொரு சட்டம் ஒன்று இருப்பதாகக் கூறும் தெரு நாய்ச் சங்கத்தலைவர், என் கட்சிக்காரருக்கான பாதுகாப்பிற்கு என எதுவித சட்டமும் இதுவரை ஆக்கப்படவில்லை என வீறாப்புப் பேசுகின்றார். ஒரு விலங்கைப் பாதுகாக்க ஒருசட்டம். ஆனால் இங்கே இன்னொரு விலங்கை அழிக்கவும் அது பயன்படுகிறதே.

ஏதேனும் ஒருவகையில் ஒரு எலி இறந்துவிட்டால் அநேகமான எலிகள் உடனடியாகவே அந்தச் சுற்றாடலில் இருந்து அரை மைல்களுக்கு அப்பால் சென்றுவிடுகின்றன. எப்படி நாடோடியானலும் தாமும் தன்குட்டிகளுடன் சேர்ந்து வாழ விருப்பப்பட்டுள்ள எலிகளை மனிதரே இன்று சுதந்திரமாக நடமாட, இருக்க எளிமையாக நடக்க விடுகின்றனரில்லை. தமக்குத் தாமே தடைகள் போடுவதும் எடுப்பதுவும் அவர்களுக்கு பழக்கமாகிவிட்டது.

அநேகமான எலிகள் ஒருவருடம்வரை உயிர்வாழும் திறனுடையவை. ஆனாலும் மனிதருடன் சேர்ந்து இவர்களுக்கு பல எதிரிகளும் உண்டு. அவற்றுள் பாம்புகள், ஆந்தைக்ள் என பலவுண்டு. இவற்றின் கண்களிலிருந்து எலிகள் தப்பி வாழ வேண்டியிருக்கிறது.

என்கட்சிக்காரர்களைப் பற்றி தெரியாத பலவிடயங்களைத் தெரிவிக்க எனக்களித்த இந்தச் சந்தர்ப்பத்திற்கு நன்றி.

நீதிபதி அவர்களே!

நீதிதேவதையின் அருட்பார்வை குற்றவாளிக் கூண்டிலிருக்கும் ஏதுமறியா என்கட்சிக்காரர்கள் மீது விழவேண்டும் எனக்கூறி இத்துடன் என்வாதத்தை நிறைவு செய்கின்றேன். விலங்குகள் என்றாலும், சீண்டினால் மட்டுமே சீண்டும். இவர்களுக்கு விடுதலை தந்து குற்றமற்றவர்கள் என தீர்ப்பளிக்க வேண்டும் என தங்களை கேட்டு அமைகின்றேன்.

அமைதி!

(வளரும்)

## மனித நடமாட்டத்தை இலகுவில் கண்டறியும் வல்லமை அவைகளுக்கு; ஆனால் அவர்களின் தாக்குதல்களைத் தாங்கும் திறன் இல்லவே இல்லை



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNI ICT CAMPUS & Nottingham College of London

## தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தனது கணனிக்கல்விச் சேவையை ஆரம்பிக்கின்றது

- தலைநகர் கொழும்பில் 07 வருட தன்னிகரற்ற கணனிக்கல்வி சேவையை கொண்ட நிறுவனம் -

(Accredited by the Ministry of Higher Education & Vocational Training - Sri Lanka)



We are very much happy indeed on the opening of UNI-ICT Campus in Jaffna as the affiliated Institute of Nottingham College, Sri Lanka. As we from Saxion Universities of Applied Sciences, Netherland looking for the best students from Sri Lanka as there are large number of students following world class degree in our University with the help of Nottingham College of London, Sri Lanka. We convey our best wishes for your valuable service to the students in Jaffna.

Drs. Chris J.M. van den Borne
Director International Office
Saxion University of Applied Sciences
The Netherlands



We take a great pleasure in extending our best wishes on the opening of UNI-ICT Campus in Jaffna. As we European Institute of Education have nominated Nottingham College of London, as our partner in Sri Lanka to act on our behalf and it is a pleasure for us on opening of UNI-ICT Campus being the affiliated partner of Nottingham College of London, Sri Lanka. This venture would bring more benefits for the students to pursue BBA and MBA and the degrees awarded by Tbilisi National University "Metekhi" which is accredited in the Sri Lankan University of Grants Commission.

Antonello Cappitta
President
European Institute of Education (eie)
Malta



கொழும்பு நகரில் இயங்கிக்கொண்டிருக்கும் Nottingham College of London கல்வி நிறுவனமானது (NCL) தற்போது யாழ் மண்ணில் இயங்கும் UNI – ICT Campus நிறுவனத்திற்கு Multimedia, IT, Computing, Business Management, and English language programmes கற்கை நெறிகளுக்கான உத்தியோக பூர்வ சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.

இச் சான்றிதழ் ஆனது வெளிநாட்டுக்கல்வி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளிநாட்டு குடியமர்வு போன்றவற்றை தனதாக்கிக்கொள்ள உங்களுக்கு பெரிதும் உதவியாக அமையும். எமது NCL கல்வி நிறுவன நிறைவேற்று அதிகாரிகள், ஆசிரியர்கள், நிறுவன ஊழியர்கள், அனைவரும் UNI – ICT Campus யாழ்ப்பாணத்தில் பலாலி வீதியில் தனது கிளைய ஆரம்பிப்பதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றனர். அத்துடன் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் தற்போது தொழில்சார் கல்விகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. ஓவ்வொரு வருடமும் பல்லாயிரக் கணக்கான மாணவ மாணவியர்கள் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றுவார்களாயினும் அதில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையான மாணவர்கள் மட்டுமே வைத்தியம், பொறியியல் போன்ற உயர்கல்வி நிலைகளுக்கு தெரிவாகின்றனர். ஏனைய மாணவர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற Multimedia, Computing மற்றும் IT, Management and Business போன்ற பாடநெறிகளை தொழிற்சார் முறையில் வழங்குவதற்கு தற்போது இலங்கையில் பல கல்வி நிறுவனங்கள் முன் வந்துள்ளன. தற்போது யாழ் மண்ணில் இயங்கும் UNI – ICT Campus நிறுவனத்திற்கு NCL நிறுவனமானது முழு ஒத்துளைப்பையும் வழங்கும்.

மற்றுமொரு விடையம் என்னவெனில், எமது நாட்டைப் பொறுத்தவரை பொருளாதாரம் என்பது ஒரு சிக்கலான விடயமாகும். அதாவது இன்றைய காலகட்டத்தை எடுத்து நோக்குவோமானால் ஐரோப்பிய நாடுகளில் கல்வி பயில்வதை கடினம் என்று நினைக்கிறார்கள். காரணம் அவர்கள் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவது கடினம் IELTS (International English Language Testing System) பரீட்சை பற்றிய கவலை Sponsor வசதியின்மை மற்றும் ஆங்கில அறிவு போதாமை போன்றவைகளைக் குறிப்பிடலாம். NCL நிறுவனமானது UNI-ICT Campus நிறைவேற்று அதிகாரி திரு.செல்வதாசன் அவர்களுக்கு முழு ஒத்துளைப்பு வழங்கும்.

அதற்கமைய இத்தடைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து யாழ் வாழ்மாணவர்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களில் அவர்களும் ஒருவித சவால்களுக்கு மத்தியில் பட்டப்படிப்பினைத் தொடர்வதற்கான வாய்ப்பினை எதுவித தடைகளுமின்றி தன்னிகரற்ற சேவையை வழங்குவதில் NCL இன்று தலை நகரிலே முன்னிலையில் திகழ்கின்றது என்றால் அது நிகராகாது.

S.P.Karan
Chairman/MD
Nottingham College of London,



We are much pleased on he opening of UNI ICT Campus in Jaffna which we believe have the great ability to serve the Jaffna students with great force to present to end and can successfully offer what students need to be the perfect professionals to the today's world. Therefore we convey our best wishes to the management of UNI ICT campus.us.

D. Pim Vis
Dean of Europort Business School
The Netherlands



We hope on the opening of UNI- ICT Campus will provide more insight into IT, Computing, Management, Business, and English Language programme and help those students to climb the career ladder. Therefore we from the City College, UK extend our best wishes to UNI – ICT Campus chairman and staffs proceed on the service of IT, Multimedia, Management education.

Kind regards,

Mr.J.C. Lloyd
Principal
The City College (U.K)



"ஆனைமுகனே அம்பிகையின் புதல்வனே ஞான விளக்கொளியைக் காட்டுவாய் ஐயனே"

பௌதிக முன்னேற்றத்தைக் குறிக்கோளாக கொண்ட "அறிவியல்" தொழில் தகவல் நுட்பக் கல்வியே உயரிய "கல்வி"யென கருதும் இன்றைய நவநாகரிக சமுதாயத்தில் திரு. செல்வநாதன் செல்வதாசன் மேற்கொண்ட நல்ல முயற்சி "யாழ்." வாழும் மாணவர்கள் சமூகத்துக்கு கிடைக்கப் பெற்ற நல்ல தோர் அரிய சந்தர்ப்பமாகும். திரு.செல்வநாதன் செல்வதாசன் தன்னுள் இளமைக்காலப் பருவத்தின் முன் வளர்த்துக்கொண்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவ அறிவு நவீனயுகத்திற்குகேற்ப சிறப்புடன் நல்லதோர் மாணவ அறிவுச் சமூகத்தை உருவாக்கும் என்பது என் சிந்தனையின் வெளிப்பாடாகும்.

இன்று மாணவ சமூக முன்னேற்றத்திற்கு எவ்வளவுக்கு எவ்வளவு கணனி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவக் கல்வி முக்கயமாகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு முகாமைத்துவ நிர்வாகக்கல்வி முக்கியமானதாகும். இந்த அரிய வாய்ப்பு குறிப்பாக யாழ். சமூக மாணவ சமுதாயத்துக்கு இந்த இளைய ஆசிரியரின் தனித்துவமான திறமையின் மூலம் ஆசிரியரின் நேரடி நிர்வாக வடிவமைப்பில் உருவான UNI ICT CAMPUSநிறுவனத்தின் முகாமைத்துவத்தின் ஊடாகவும் க.பொ.த. (சா/த) க.பொ.த.(உ/த) நிறைவு செய்த மாணவர்களுக்கு "முகாமைத்துவம்" "கணனி முகாமைத்துவம்" மற்றும் "தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்" போன்ற துறைகளில் பட்டப்படிப்பினை தேர்வு செய்து தேர்ச்சியின் பின் நல்லதோர் பட்டதாரி மாணவர்களாக முன்வருவதற்கு நல்லதோர் வாய்ப்பை பெறுவதையிட்டு மனமார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"எல்லாம் வல்ல மானிப்பாய் மருதடிவிநாயகர் அருள்புரிய
வாய்மையும் நேர்மையும் வரமிகு கல்வியும் வழமுடனே வாழ்த்திடுவாய் வாணி"

ந. கலைச்செல்வன் M.Sc (Mgt) J'pura: P.G. Dip B.F.A (ICASL): P.G. Dip Econ Develop (UOC); B. Com (Special) J'Pura: Dip P.M.M; FPFA; MISMM.



இன்று யாழ் மாவட்டத்தில் UNI ICT Campus & Nottingham College of London ஆகிய கணனி நிறுவனங்கள் தனது சேவையை யாழ் மாணவர்களுக்காக ஆரம்பிப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். மேலும் எமது நிறுவனமானது சர்வதேசக் கற்கை நெறிகளான Multimedia, IT, Computing, Business Management, IELTS and TOEFL ஆகியகற்கைநெறிகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ள அதேவேளை வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் எமது மாணவர்களுக்கு பட்டப்படிப்பு அனுமதியை இலகுவாக பெற்றுக்கொடுக்கும் (Student Visa) சேவையையும் இங்கு வழங்கவுள்ளது. எனவே எமது யாழ் மாணவர்கள் எமது அனைத்து சேவைகளையும் இன்றிலிருந்து எமது யாழ் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் எமது நிறுவனத்தில் முதலில் இணைந்து எமது கற்கை நெறிகளை கற்க்கும் திறமையான மாணவர்களுக்கு உயரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும் என்பதையும் இதன் வாயிலாக அறியத் தருகின்றேன்.

- S. Selvathashan, Chairman/MD, UNI ICT CAMPUS -

யாழ் மாவட்டத்தில் இத்தகய சிறப்புக்கள் வாய்ந்த கணனி நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்படுவது இதுவே முதன் முறை என்ற வகையில் எமது நிறுவனம் பெருமையடைகின்றது !!!

## Our International Universities & Colleges :-

கீழ்வரும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் எமது கணனி நிறுவனத்தை அங்கீகரித்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் !!!

**UK**
University of Sussex , University of Portsmouth
The City College , East London College
Kingston College , University of Nottingham
University of Bolton, Middlesex University
University College Falmouth
University of Greenwich , Bradford University
Kingston University , University of Dundee
Heriot-Watt University , University of Huddersfield
Keele University , Lancaster University
LJMU Leicester University , University of Stirling
University of Surrey , University of Dundee
WISC, University of Wales, Newport
University of Liverpool , Oxford Brookes University

**Canada**
Humber College
University College of Fraser Valley
Kwantlen University
St Mary's University
The Royal Roads University

**Belgium**
International Management Institute

**Switzerland**
Business & Hotel Management School

**New Zeland**
Unitec Campus
Natcoll Design Technology
Universal College of Learning
AIS ST HELENS
NCBT

**The Netherlands (Holland)**
Fontys & University of Applied Science
University InHollnad Applied Science
Saxion Universifies of Applied Science
Europort Business School
Tilburg

**Singapore / Malaysia**
Hartford Institute
Raffles Design Institute
PATH School of Technology and Management

**Australia**
RMIT University Swinburne University
Griffith University, Queensland
Raffles College of Design & Commerce – Sydney
The Royal Institute of Technology - Melbourne

**Malta (Italy)**
European Institute of Education (eie)

**USA**
Parsons, the New School for Design in New York City

**China**
Central Academy of Fine Arts, Beijing, China

**Cyprus**
College of Tourism and Hotel Management
Americanos College

B.Sc , BBA, BA, MBA , Dip.IT ஆகிய பட்டப்படிப்புக்களுக்கான அனுமதிகள் தற்போது எமது நிறுவனத்தால் வழங்கப்படுகின்றது!! அனுமதிக்கு முந்துங்கள்!!

## Our International Branch Networks:-

NETHERLANDS :-
FURTHER EDUCATION GROUP LTD
Anna Blamanplein 108,
2525 ZW The Hague
The Netherlands
T +31 (0)70 388 3880, F +31 (0)84 718 9094
info@fe-group.com, www.fe-group.com

TRINCOMALEE :-
Strangers Learning
No: 28, Vidyalayam Street
Trincomalee, Sri Lanka.

UK :-
James Pitman
Managing Director
Study Group UK
1 Billinton Way
Brighton, UK
BN1 4LF
Telephone: +44 1273 339339
Fax:+44 1273 339201

NEW DELHI :-
Recruitment Manager, South Asia
International Study Centres
Study Group
G5, III Floor,
South Extension Part I,
New Delhi 110 049

MANIPAY :-
UNI TECHNOLOGY,
ICT Education Trainers,
MANIPAY.
021 - 7429325

யாழ்ப்பாணத்தில் மேலதிக விபரங்களுக்கு :-

**UNI ICT CAMPUS**

No: 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P: 021-321 6433 / 0777 -110862

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமாவளவனும் திருவிளையாடலும்




இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கூறியுள்ளமை வெறும் வேடிக்கையாகும்.

இலங்கையில் தங்கியிருந்த நாள்களில் மௌனம் காத்திருந்த திருமாவளவன் தற்போது இலங்கைத் தலைவர்களுக்கு எதிராக சென்னையில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்வது தமிழினத்தை ஏமாற்றும் விடயமாகும்.

இம்மாத முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட தமிழக எம்.பிக்கள் குழுவினருடன் வருகை தந்த திருமாவளவன், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தனியாக நின்று புகைப்படம் எடுப்பதில் காட்டிய ஆர்வமும், தற்போதைய ஆர்ப்பாட்ட அறிவிப்பும் வெறும் இரட்டை வேடங்களேயன்றி வேறன்று.

திருமாவளவன் ஐயா இப்படி கடந்த புதனன்று சென்னையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியமை அவரை அவரே ஏமாற்றிக் கொள்ளும் செயலாகும். இச்செயற்பாட்டினால் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எதுவித விமோசனமும் கிடைக்கப்போவதில்லை என்பதை அவர் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும்.

மற்றுமொரு வார்த்தையில் கூறுவதாயின் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் வெறும் கோழைத்தனமானவைதான். உங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இலங்கை மக்களைப் பகடைக் காயாக உபயோகிக்க வேண்டாம் என இரு கரம் தூக்கி, அவரை வணங்கி வேண்டுகிறேன்.

தமிழக மக்களை ஏமாற்றுவது மாத்திரமின்றி இலங்கை அகதிகளையும் ஏமாற்றும் இவ்வாறான கோழைத்தனமான செயற்பாடுகளை திருமாவளவன் கைவிட்டு விட்டு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்வதே அவர் செய்ய வேண்டிய கடமையாகும்.

சென்னைக்கு திரும்பிய பின் வீறாப்பு பேசும் திருமாவளவனுக்கு இலங்கைக்குத் தாம் விஜயம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த விடயங்களைக் கூறுவதற்கு திராணி இருக்கவில்லையா?

ஊடகவியலாளர்கள் கேள்விக்கு மேல் கேள்விகளை தொடுத்து,'' வன்னிக்குச் சென்று அகதிகளை பார்வையிட்டு வந்துள்ளீர்கள். அவர்களின் வாழ்விடம் பற்றி திருப்தி கொள்கிறீர்களா?'' என்று இங்கு கேட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வாயைக் கூடத் திறக்காமல் மௌனவிரதம் காத்த திருமாவளவன், சென்னை மீண்டதும் இப்போது அதிகம் பேசுகின்றார்.

இதை இங்கு வைத்தே கூறுவதற்கு உங்களுக்கு மனம் இருக்கவில்லை. ஏனெனில் இலங்கைத் தலைவர்களுடன் நின்று புகைப்படம் எடுக்கக் காட்டிய ஆர்வம் உங்களைத் தடுத்துவிட்டது.

நொந்துபோயுள்ள உள்ளங்களை மேலும் நோகடிக்காமல், உங்களால் முடிந்த உதவிகளை வழங்கி, இடம்பெயர்ந்துள்ள மக்களை கூடிய விரைவில் மீள்குடியமர்த்த இலங்கை அரசுக்கு அழுத்தங்களை வழங்குங்கள். இதுவே நீங்கள் இந்த நெஞ்சங்களுக்கு செய்யும் கருணை.

''எங்களை நஞ்சு வைத்து கொன்று விடுங்கள்'' என்று முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிலர் தம்மிடம் கூறினர் என இப்போது சென்னையில் போயிருந்து கூறுவதில் என்ன பயன்?

இனியும் தமிழ் மனங்களை புண்படுத்தாதீர்கள். நிம்மதியாக வாழ வழிசெய்யுங்கள். அவர்களை குழப்பிவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டாம். அதில் உங்கள் அரசியலை நடத்தவேண்டாம்.

புதனன்று நடத்திய ஆர்ப்பாட்டத்துடன் எத்தனை ஆர்ப்பாட்டம்தான் நடத்தியுள்ளீர்? இதன் மூலம் நடந்தவைதான் என்ன? 'கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்' எதற்கு?

இலங்கை விஜயத்தின் பின்னர் தமிழ் அமைப்புக்களினால் முன்வைக்கப்பட்ட பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களையும் மூடி மறைப்பதற்காக நீங்கள் அரங்கேற்றும் நாடகம் இந்த ஆர்ப்பாட்டம் என்பதை அறியாமல் இருக்கும் அளவிற்கு தமிழ்பேசும் மக்களின் புத்தி கெடவில்லை என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

கொழும்பு இக்பால்

# குதிரைக்கும், கோவேறு கழுதைக்கும் வரி அறவிட்டது அந்தக் காலத்து யாழ்ப்பாணம் நகரசபை

ஒக்ரோபர் 1926

யாழ் மாநகரசபையின் முதல் அமர்வு அடுத்தவாரம் இடம் பெறவுள்ளது. இந்த வாரம் 1926ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற யாழ்.நகரசபைக் கூட்டம் பற்றிப் பார்ப்போம். அப்போது யாழ்.மாநகரசபைக்கு மாநகர அந்தஸ்து வழங்கப்படவில்லை. உள்ளூராட்சி சபை (Local board) நகர சபை என்ற பெயர்களாலேயே யாழ்.நகர சபை அழைக்கப்பட்டு வந்தது 1926ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபைக் கூட்டத்தில் 1927ம் ஆண்டிற்கான வரி அறவிடுவது பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## எரிபொருள் வாகனம் இல்லாத காலம் அது

இதன் பிரகாரம் 1927ம் ஆண்டிற்கு தீர்மானிக்கப்பட்ட வரிகள் வருமாறு.

குதிரை வண்டி, ரிக்ஷா 5 ரூபா
இரட்டை மாட்டு வண்டி 4 ரூபா
ஒற்றை மாட்டு வண்டி 2.50 ரூபா
மிதிவண்டி ஒரு ரூபா
குதிரை, கோவேறு கழுதை 2.50 ரூபா

இதே கூட்டத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மழைக் கோர்ட் வழங்குவது பற்றி பரிசீலிக்கப்பட்டது. அத்துடன் மருத்துவமாது தவறான முறையில் நடப்பதாகவும் இனி மேல் தவறான முறையில் நடந்தால் பதவி நீக்கம் செய்யப்படுவாரெனவும் மருத்துவ மாதுவுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

## இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே......!

1926ம் ஆண்டு எரிபொருளில் இயங்கும் வாகனங்க[illegible] னைக்கு வரவில்லைப் போலிருக்கிறது......!

[illegible]

# காலம் மாறிப் போச்சு

வீதியால் சென்று கொண்டிருந்த போது நான் கண்டகாட்சி என் கவனத்தைப் பலமாக ஈர்த்தது. எனக்கு சிறுவயதில் கற்பித்த ஆசிரியர் ஒருவர் யாருக்கோ பயந்து மரமொன்றின் பின்னால் மறைந்து கொண்டு நின்றார். எனக்கு ஒரே ஆச்சரியம்! அவர் ஒரு கண்டிப்பான ஆசிரியர். தடியெடுத்தால் எங்களுக்கு தழும்பு வராமல் கீழே வைக்கமாட்டார். அவர் யாருக்கு பயந்து இப்படி ஒளிந்துநிற்கிறார் என்ற வினா எனக்குள் எழுந்தது. மெல்ல அவர் அருகே சென்றேன். ''ஏன் சேர் இப்பிடி ஒளிச்சு இருக்கின்றீங்கள்?'' என்று அவரைக் கேட்டேன்.

''உஷ்! மெல்லக் கதையப்பு. உன்ர சத்தம் கேட்டு றோட்டில போற பெடியள் என்னைக் காணப் போறாங்கள்'' என்று பயம் கலந்த குரலில் கூறினார்.

''அவங்கள் கண்டால் என்ன சேர்?''

''அவங்கள் எல்லாம் என்னட்ட படிக்கிற பெடியள். என்னைக் கண்டால் காணும் கூக்காட்டி, பட்டம் தெளிக்காமல் போகமாட்டாங்கள். அது தான் அவங்கள் றோட்டை கடக்குமட்டும் ஒளிச்சு இருக்கிறன்'' என்றார் அவர். இந்தச் சம்பவம் பல வித சிந்தனைகளை என்னுள் எழுப்பியது.

எல்லா தொழில்களுக்குள்ளும் புனிதம் நிறைந்ததாகக் கொள்ளப்படுவது ஆசிரியத் தொழில். ஆயினும் இன்று ஆசிரியர்களுக்கு உரிய மதிப்பளிக்கப்படுவதில்லை என்ற கருத்து மேலோங்கியுள்ளது. இந்நிலைக்கு ஆசிரியர்களும் ஒரு காரணமாகியுள்ளனர். குறிப்பாக சில ஆசிரியர்கள் பணம் சம்பாதிப்பதை குறிக்கோளாகக் கொண்டு தனியார் வகுப்புகளில் காட்டும் அக்கறையின் சிறு துளியைக் கூட பாடசாலை கற்பித்தலில் காட்டுவதில்லை என்ற முறைப்பாடுகள் நிறையவே உண்டு. அத்தோடு ஆசிரியத் தொழிலுக்கே மாசுகற்பிக்கும் செயற்பாடுகளிலும் சில ஆசிரியர்கள் - குறிப்பாக தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் - ஈடுபடுகிறார்கள். அண்மையில் ஒரு தனியார் நிறுவன ஆசிரியர் உயர்தர மாணவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு வேண்டிய அளவு மதுவையும் குடிப்பதற்கு கொடுத்திருக்கிறார். அத்தோடு தானும் அவர்களோடு கூடியிருந்து குடித்து,கும்மாளம் அடித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எதுவுமே தமக்குரிய இடத்தில் இருந்தால் தான் அவற்றுக்கான மரியாதை சரிவரக்கிடைக்கும். அதற்காக எப்போதுமே சிடுசிடுத்த முகத்தோடு கண்டிப்பு மட்டுமே கடமை என்ற நினைப்போடு நடக்கக் கூடாது. அது ஆசிரிய - மாணவ உற வினை சீர் குலைப்பதாகவே அமையும். அதேவேளை அளவுக்கதிகமாக மாணவர்களுடன் - ஒன்றாகச் சேர்ந்து குடிக்குமளவுக்கு - நெருக்கமாகவும் உறவுநிலையை ஏற்படுத்தக்கூடாது. கண்டிப்பும் கனிவும் சரிவரக் கலந்த நிலையிலேயே ஆசிரியர்களின் செயற்பாடுகள் அமைய வேண்டும். முன்னரெல்லாம் இவ்வாறு ஒரு புறம் அடித்தாலும் மறுபுறம் மாணவர்களை உரிய முறையில் அன்போடு வழிப்படுத்தும் செயற்பாட்டினையே ஆசிரியர்கள் மேற்கொண்டார்கள். இதனால் அவர்களின் மதிப்பு கடைசி வரை குறையவேயில்லை.

இப்போதெல்லாம் ஆசிரியர் தினத்தன்று மட்டுமே ஆசிரியர்களுக்கான மரியாதையும் மாலையும் கிடைக்கின்றது. சிலவேளைகளில் விஞ்ஞான யுகத்தின் அவசர கதியில் ஆசிரியர்கள் மீதான தமது மதிப்பை வெளிப்படுத்த காலமில்லாமல் தவிக்கும் மாணவர்கள் தம்முடைய ஆசி ரியர்கள் பற்றிய உயர்ந்த எண்ணப்பதிவை வெளிப்படுத்த ஆசிரியர் தினம் வழிசமைக்கின்றது. எனினும் ஆசிரியர் தின விழாக்களில் பாடசாலைகளில் இப்போது கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மட்டுமே மாலையும் மரியாதையும் மாணவர்களால் வழங்கப்படுகின்றது. குறித்த பாடசாலைகளில் கற்பித்து ஓடாய்த் தேய்ந்த பின் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் எவரையும் இத்தகைய ஆசிரியர் தின விழாவுக்கு அழைப்பதேயில்லை. அவர் களைக் கைக முவிவிட்டு விடு கின்றார்கள். அதனால் ஆசிரியர் தினத்தையும் உலகளாவிய கைகளுவு தலுக்கான தினத்தில் வைத்தால் பொருத்தமானதாக இருக்குமென்று மூத்த ஆசிரியர் - இளைப்பாறிய ஆசிரியர் - மனம் நொந்து உதயனுக்கு எழுதியுள்ளார்.

## கோணல்கள்

ஆசி ரியர்கள் என்ற ரீதியில் ஆசிரியர் தினத்தன்று தற்போது பணியில் இருப்போர் மாத்திரமன்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் கௌரவிக்கப்படுவதே அன்றைய நாளை முழுமையானதாக்கும். இது பற்றி இனியாவது யாராவது சிந்திப் பார்களா?

விரிவிழியன்

# மழை.... சோதிடப்படி...

வடமொழிச் சொற்களான பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று சொல்லப்படுகின்ற பஞ்ச பூதங்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என்ற ஐம்பூதங்களின் காரணிகளாக இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டு அவை மூலமே பிரபஞ்சம் என்ற பூமி உட்பட பல லோகங்களும் இயங்குவதாக சோதிட சாஸ்திரம் மட்டுமல்ல விஞ்ஞானமே சொல்லுகின்றது. எனவே இந்த பஞ்ச பூதங்களுக்கு இறைவனால் ஐந்து கிரகங்கள் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவை:

நிலத்திற்கு - வியாழனும்
நீருக்கு - வெள்ளியும்
நெருப்பிற்கு - செவ்வாயும்
காற்றுக்கு - புதனும்
ஆகாயத்திற்கு - சனியும்

04.11.2009 - 27.11.2009 வரை
கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | 5 |
| வி/ | | | செ கே |
| வி ரா | | | 7 |
| 11 | 10 | வெ சூரி | [illegible] |

மேலே சொல்லப்பட்ட ஐந்து கிரகங்களும் ஞாயிறு, திங்கள் என்று சொல்லப்படும் சூரிய, சந்திரர் என்ற இறைவனுடைய வலக்கண், இடக்கண் என்ற இரு சக்திகளால் இயக்கப்படுவதையே கோளறு பதிகத்தில் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற ஏழு கிரகங்களுடன் சாயாக் கிரகமான ராகு, கேதுவையும் சேர்த்து ஒன்பது கிரகமாக இறைவனால் இயக்கப்படுகிறது. இதையே சோதிட சாஸ்திரத்தில் நவக்கிரகங்கள் என்று சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு கிரகங்களும் ஒவ்வொரு இயக்கத்திற்கு பொறுப்பாவர். எனவே நீருக்கு பொறுப்பான கிரகம் வெள்ளியாகும். இதையே சுக்கிரன் என்று அழைப்பதுடன் அசுரர்களுக்கு குருவான சுக்கிராச்சாரியர் புராண வரலாறுகளில் வெள்ளிக்குரிய வித்தைகளை தரக்கூடிய மிருத சஞ்சீவி என்னும் இறந்தவர்களை உய்விக்கும் வித்தைக்குரியவராகவும் சொல்லப்படுகிறது.

அத்தகைய வெள்ளிக்கிரகம் தனது ஆட்சியும் மூலத்திரிகோணமும் பொருந்திய சலராசிக்கு 04.11.2009இல் துலாராசிக்கு வருவார். அப்படி வரும் போது மழையையும் கொண்டு வருவார். பின் 27.11.2009 வரை துலாராசியில் சஞ்சரிக் கும் காலம் மழை பெய்யும். அதுவரை துலாராசியில் அக்கினிக் கிரகமான சூரியன் நீசமாக இருப்பது மழை பொய்த்து விடக் கூடிய நிலையும்,-வரட்சியும் விவசாயிகள் கவலை கொள்ளக் கூடிய நிலையும் ஏற்படும். கொடும்பாவி இழுப்பதாலோ அல்லது வேறு யாகங்களாலோ துலாராசிக்கு 4.11.2009க்கு முன் வெள்ளி வரமாட்டாது. எனவே பொறுத்தார் அரசாள்வார் என்ற பழமொழிக்கமைய வேளாண்மை செய்பவர்களும் பொறுத்திருக்க வேண்டும். 17.11.2009ன் மேல் 27.11.2009 வரை வெள்ளி [illegible]பது கனமழை பெய்ய வும் வாய்ப்புண்டு. காரணம் வெள்ளி துலாத்தில் [illegible] திறமையை முழுமையாக தனித்து நின்று காட்ட வேண்டிய காலமாகும்.

சோதிடர்
க.சண்முகநாதன் J.P.
(சங்கானை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

World's No 1

**Abans**

நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன் இலவச
விநியோகசேவையைப் பெற்றிட

# Midea Electro Mart



Authorized Dealer for **Abans** Ltd.

No: 1-I, 1-H, Stanley Road,
Jaffna, Sri Lanka.

e-mail: midea21@gmail.com

Tel: 021-2224566 Fax: 021-2224566




## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

### திருமதி இளையபிள்ளை செல்லப்பா

**மலர்வு: 08.05.1922 உதிர்வு: 25.10.1997**

எம் வாழ்வு வளம் கொழிக்க வழி சமைத்த தெய்வம் நீர்
ஈராறு ஆண்டுகளும் எப்படித்தான் கழிந்தனவோ
பத்துமாதம் சுமந்தெம்மைப்பெற்றுப்
பாசத்தைப்பொழிந்து வளர்த்தீர்
பாரதனில் பாராட்டிச் சீராட்டி எமையெல்லாம்
கண்ணை இமை காப்பதுபோல் காத்தீர்
காலமெல்லாம் தரணியில் நாம் சிறந்தோங்க
கடினமாய் உழைத்தெம்மை வளர்த்தீர்
உங்களது ஆத்மாதான் இறை நிழலின் காலடியில்
சாந்திபெறத் துதிக்கின்றோம் எம் உணர்வு உள்ளவரை
உமை நினைந்து அனுதினமும் குப்பிளான் குடிகொண்ட
கற்கரைக் கற்பக விநாயகன் தாழ்
துதித்திடுவோம் உங்களது ஆத்மாவின் சாந்திக்காய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கரந்தன்,
நீர்வேலி மேற்கு.

பிள்ளைகள், குடும்பத்தினர், பெறாமக்கள்.


**SHAMROCK**
சுச்சமோட்டை, யாழ்.

A/L 2010 - 2011
★ கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள் & ஆங்கிலம்
★ Gr. 1 முதல் O/L வரை
★ Eng.Med. Gr. 6 To 11
★ Eng.Lit. 10 & 11
★ புலமைப்பரிசில் (4) ஆரம்ப பரீட்சைகளுடன்
★ ICT, GIT (செயன்முறைகளுடன்)
★ சிங்களம்
★ Spoken English

**UK VISA**

VISA APPLICATION & REVIEW
PERFECT GUIDANCE
FOR
STUDENT VISA

- Financial Assistance
- Low Tuition Fees
- Apply with O/L Or A/L
- IELTS not Compulsory

**011 5737307**



வியாபார மையத்தில் அமைந்துள்ள
வியாபார நிலையம்

## விற்பனைக்கு

உடனடியாகக் குடி புகும் நிலையில்
நவீன மயமாக்கப்பட்ட
வியாபார நிலையம்
(2.15 பேர்ச்)
No- 5, சீமெண்ட்ஸ் றோட்
(மருதானை றோட், சீமெண்ட்ஸ் றோட் சந்தி)
விசாரணைகளுக்கும், தொடர்புகளுக்கும்
"சைக்கிள் பஷார்" பொறனை
தொ.பே.இலக்கம் 2687810, 2686255.
அல்லது 2693200 க்கு தயவுசெய்து
தொடர்பு கொள்ளவும்.


## மரண அறிவித்தல்கள்

### சிங்கராசா செல்வரூபன்



பலாலி மேற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சன்னதி வீதி, அச்சுவேலியில் தற்காலிகமாக வசித்து தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான சிங்கராசா செல்வரூபன் 20.10.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிங்கராசா- யோகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வனும் றேச்சனின் (Crachael) அன்புக் கணவரும் லெனல், லியம் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரைஐயா அவனியு,
சன்னதிறோட், பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்: **சிங்கராசா** (தந்தை),
**யோகேஸ்வரி** (தாய்).

(90258)

### திருமதி ரகுபதி ராஜராஜேஸ்வரி *(ராஜி)*



தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். அத்தியடி- திருநெல்வேலி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரகுபதி ராஜ ராஜேஸ்வரி (23.10.2009) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கனகரத்தினம்பிள்ளை- சின்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி- மீனாட்சியம்மாள் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் பெறாமகளும் ரகுபதி (ஓய்வுபெற்ற உதவிப்பணிப்பாளர், விவசாயத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் அசோகன், காலஞ் சென்ற ஜனகன் மற்றும் ஜீவகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கோமதி, நளினி, சுதர்சன் (சுதன்) ஆகியோரின் அன்பு மாமியும் முருகேசம்பிள்ளை, பத்மநாபபிள்ளை, அனுசூயா, நளாயினி, சாவித்திரி, அருந்ததி, கண்ணகி ஆகியோரின் அருமைச் சகோதரியும் நாகலக்ஷ்மி, பத்மினிதேவி, முருகானந்தன், கனகநாதன், சதானந்தன், கருணாகரன், நவரட்ணம், கமலா தேவி, காலஞ்சென்ற சாரதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் வீணஜா, லக்ஷ்மிஜா, விஷ்னிஜா, செளமியா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ்வறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அத்தியடி, யாழ்ப்பாணம். (சி/561827) **மா.சுதர்சன்** (மருமகன்).


STUDY & WORK IN **UK**

**BIBM**



**JANUARY 2010 INTAKE**

HOT Courses are available at all Level (Diploma, Advance Diploma & Degree) from UK Universities & Home office UKBA approved "A" rated Colleges

**BA (Hons) In**
Business Management
Accounting & Financial Management
Innovative Business
Hospitality & Tourism Management
Architecture, Interior Design
Textile Design,
Fashion Design

**MBA In**
Innovative Management
Banking & Finance
Hospitality Management
Business Analysis, Public Relation
Information Technology
General Management,
Finance / Marketing

- **Minimum Qualification - G.C.E. (O/L)**
- **Offer Letters can be arranged within 5 working days.**

**BSc (Hons) In**
Computing / IT
Quantity Surveying
Building Surveying
Technology & E-Commerce
Mechanical & Manufacturing Eng
Pharmaceutical Science

**MSc In**
Nano Technology
Innovative Technology
Biomedical Science
Pharmacy Practice
Medical Imaging
Project Management

MSc Nano Technology (from Coventry University) ... available for JAN 2010 intake

**BEng (Hons) In**
Telecommunications & Networks
Civil Engineering
Construction Management
Communication Systems
Communicatins Engineering
Mechanical & Manufacturing Eng

Law
Nursing
Travel Agency Management
Health & Social Care
Early Childhood Studies
Hair Dressing & Make-up Artistry
Beauty & Therapies & Many More



**All courses are awarded by UK leading Universities and after the completion of the course students are eligible to apply for Two year work permit. Guidance can be given.**

WE HELP YOU WITH..

→ Courses Selection & Career Advice
→ Application Process / VISA Document Preparation Under New Tier 4 Points Based System
→ Guidance for arranging Sponsorship
→ Special discounts for Air Ticket
→ Finding Accommodation
→ Part-time Jobs

**Direct Entry to final year Top Up's are available for HND (Edexcel qualified and experienced applicants for the low course fees**

BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES PVT LTD
(Member of E2P Allied Group - UK, INDIA, PAKISTAN, MALAYSIA)
#81, 1/1, W.A. De Silva Mawatha, Colombo 06.
Tel: 0112586894 Fax: 01125...

OPPOSITE TO ROYAL HOSPITAL - W.A. De Silva Mawatha, WELLAWATTE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# குடியேற்றத் திட்டங்களில் கிழக்குக் காணிகள் கபளீகரம்

இனப்பிரச்சினையை ஒட்டிய ஆயுதப் போராட்டத்தில் இறுதி வெற்றியை ஈட்டியாகி விட்டது என்று கூறிவரும் பின்புலத்தில் இப்போது அரங் கேறும் அசிங்கங்களை - தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் அட்டகாசப் போக்கை-தமக்கே உரித்தான நாசூக்கான சொல்லாடல்களில் சிறுபான்மை இனத்தவர் களின் தலைவர்கள் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இந்த வரிசையில், வடக்கு-கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகத்தின் மீது, இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பேரினவாதக் குடியேற்ற ஆக்கிரமிப்பு எவ்வாறு தனது வலையை விரிக்கிறது என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹஸனலி எம்.பியும் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் மிக முக்கியமானவையாகும்.

*''பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தின் நிமித்த காரணிகளாக ஆரம்பத்தில் தமிழையும், பின்பு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலங்களையும் அடையாளப்படுத்திக்கொண்ட பெருந்தேசியக் கடும்போக்குவாதிகள், தங்களது போருக்கு ஒத்துழைப்புத் தராத அனைவர் மீதும் 'துரோகிகள்' என்ற முத்திரையைக் குத்தினர்.*

*''தொடர்ச்சியாக வளர்ந்து வந்த இன முரண்பாடானது யுத்தத்தின் பரிணாமத்தைத் திடீரென்று பெரும்பான்மையினரின் புனிதப் போராகவும், சிறுபான்மையினரின் தேசத் துரோகமாகவும் மாற்றியமைத்துவிட்ட பரிதாபமான நிலைமை எப்போது நீங்குமோ தெரியவில்லை.*

*''யுத்தத்தின் முடிவில் தமக்குக் கிடைத்த பரிசுப் பொருள்களில் ஒன்றாகத் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய நிலங்களும் அடங்கிவிட்டன என்ற போக்கினை அவர்களிடம் (தெற்கு மக்களிடம்) நாம் காண்கிறோம். அதனை நிரூபிப்பது போன்று அவசரமாக அரங்கேறும் சம்பவங்கள் கிழக்கில் கட்டவிழ்ந்து அச்சமூட்டுகின்றன.''*

- இப்படி வேதனையுடன் நாடாளுமன்றத்தில் நொந்து கொண்டிருக்கின்றார் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹஸனலி. அதுமட்டுமல்ல, கிழக்கில் அண்மைக்காலத்தில் பெருந்தேசியத் தீவிரப்போக்கு சக்திகளால் சூறையாடப்பட்டு, அபகரிக்கப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்ட முஸ்லிம்களின் தாயக நிலம் பற்றிய விடயங்களைப் புள்ளி விவரக் கணக்கோடு விஸ்தாரமாக அம்பலப்படுத்தியிருக்கின்றார் அவர்.

அரசுத் தரப்பின் உதவியுடன் திருகோணமலை உள்ளிட்ட கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள சிறுபான்மைச் சமூகத்துக்குச் சொந்தமான காணிகளும் அரச காணிகளும் பெரும்பான்மையினத்தவர்களுக்குச் சட்டவிரோதமான முறையில் கைமாறுகின்றமை குறித்தும் -

இதன்மூலம் கிழக்கில் சிறுபான்மையின் பாரம்பரிய உரிமையும், தனித்துவமும் சிதறடிக்கப்பட்டு, அது பௌத்த - சிங்கள ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறித்தும்-சம்பந்தன் எம்.பியும் நாடாளுமன்றத்தில் விலாவாரியாக எடுத்துரைத்திருக்கின்றார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை அரசுத் தரப்பு உதட்டளவில் மறுத்தாலும்-மறைத்தாலும்-கூட களயதார்த்தம் அப்படி அட்டூழியம் அரங்கேறுவதை உறுதிப்படுத்துகின்றது என்பது சர்வதேச சமூகத்துக்கே நன்கு தெரிந்த விடயம்தான்.

நீதியான தீர்வு, நியாயமான உரிமைகளுடன் கூடிய கௌரவ வாழ்வு ஆகிய நேர்மையான அபிலாஷைகளை முன்வைத்துப் போராடிவரும் தமிழ் பேசும் சமூகத்தின் போராட்டத்துக்கான அடிப்படையான விழுமியமாக இருப்பது அவர்களின் தனித்துவ இன அடையாளம்தான் என்பது வெளிப்படை.

அந்தத் தனித்துவ இன அடையாளத்தின் அடிப்படைகளை இலக்குவைத்துத் தாக்கியழித்துச் சிதைப்பதன் மூலம், அந்த இனத்துவ அடையாளத்தின் மீது கட்டியெழுப்பப்படும் உரிமைப் போராட்டத்தை - உரிமைக் கோரிக்கையை- நீர்த்துப்போக வைத்து தகர்த்து அழிக்கலாம் என்பது பேரினவாத ஆட்சிப்பீடத்தின் திட்டம்; நோக்கு; இலக்கு எல்லாமே.

அவ்வாறு தமிழ் பேசும் மக்களின் இனத்துவ அடையாளத்தைப் பறைசாற்றி நிற்கும் பிரதான காரணிகளுள் ஒன்று அவர்களின் பாரம்பரிய தாயகம்; தொடர்ச்சியான நிலப் பிரதேசங்களையும் கொண்ட புவியியல் கட்டமைப்பு. அந்தத் தாயகத் தனித்துவ எண்ணக்கருவை சிதைக்கும் திட்டத்துடனேயே - தந்திரோபாயத்துடனேயே - இத்தகைய பெரும்பான்மை இனக்குடியேற்றங்கள், ஆட்சிப் பீடத்தின் ஆசீர்வாதத்துடன் திட்டமிடப்பட்ட முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

1987இல் இந்திய அரசின் அழுத்தத்தின் பேரில், இலங்கை - இந்திய ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு அமைய அரசமைப்புக்கும் 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. நாட்டின் உயர் சட்டமான அரசமைப்பில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, உள்வாங்கப்பட்டு, சட்ட அந்தஸ்தும் அதற்கு வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தில் உள்ள அந்த ஏற்பாடுகளின்படி - அதுவும் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அமைய - மாகாணங்களில் உள்ள காணிகள் மீதான அதிகாரமும், மாகாணப் பொலிஸ் மீதான அதிகாரமும் மாகாண சபைக்கே பொறுப்பானதாகும்.

எனவே, திட்டமிடப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன என்று தமிழர் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் மட்டத்திலிருந்து பலத்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை, அதன் காணிகள் மீதான உரிமையும் அதிகாரமும் கிழக்கு மாகாண சபைக்கே உரியதாகும்.

அரசமைப்புக்குச் செய்யப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரகாரம், கிழக்கு மாகாண சபைக்கென உரித்தான காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் போன்றவற்றை அதற்கு வழங்காமல் மறுத்துக்கொண்டு, தனது பேரினவாதக் குடியேற்ற ஆட்சிச் சிந்தனையைக் கிழக்கில் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது அரசுத் தலைமை.

இந்த ஜனநாயக அநாகரிகத்தனம் - அட்டூழியம்- பற்றிய தகவல் சர்வ தேச சமூகத்துக்குச் சமர்ப்பணம்.

# வேலணையில் மீளக்குடியமர்ந்தோர் போதிய குடி தண்ணீர் இன்றி அவதி

## நீர்வழங்கல் அதிகார சபைக்கு சுட்டிக்காட்டுகிறார் பிரதேச செயலர்

நல்லூர், ஒக்.25

வேலணைப் பிரதேச செயலக பிரிவின் பல்வேறு கிராம அலுவலர் பகுதிகளிலும் வவுனியா நலன்புரிநிலையங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட பெருந்தொகை யான மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் போதிய குடிதண்ணீரைப் பெறமுடியாதுள்ளனர். மக்கள் தமக்குரிய குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக அதன் விநியோகம் இடம்பெற ஏற்பாடு செய்யவேண்டும்.

யாழ்ப்பாணம் தேசிய நீர்வழங்கல் அதிகார சபையின் முகாமையாளருக்கு எழுதிய கடிதத்தில் வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து மீள் குடியமர்ந்த மக்களின் குடிதண்ணீர் விநியோகம் தொடர்பாக அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

தற்போது எமது பிரிவில் 1,450 குடும்பங்களைச் சேர்ந்த 4,700 பேர் வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து மீள் குடியேறியுள்ளனர். இதனால் குடிதண்ணீர் தொடர்பாக எமது பிரதேசம் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பொதுவாக எமது பிரதேசத்தில் அல்லைப்பிட்டி, மண்கும்பான் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் குடி தண்ணீர்ப் பிரச்சினை உண்டு. வேலணையில் குறிப்பிட்ட சிலபகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் வரட்சிக் காலங்களில் நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவுப் பகுதிகளிலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

வேலணையில் குறிப்பிட்ட சில பகுதிகளில் குழாய்நீர் விநியோகம் இடம்பெறுகிறது. எனினும் திடீரென ஏற்பட்ட பாவனை அதிகரிப்பினால் மக்கள் தமக்குத் தேவையான அளவு குடிதண்ணீரைப் பெறமுடியாதிருப்பதை அவதானிக்க முடிகிறது. வேலணை, சரவணைப் பகுதிகளில் குழாய் நீர் விநியோகமற்ற பகுதிகளில் உள்ள மக்களும் நயினாதீவில் முறையான குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறாத நிலையில் அங்குள்ள மக்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மண்டைதீவு, புங்குடுதீவு பகுதியில் கட்டணஅடிப்படையில்பிரதேசசபையும் ஏனைய அமைப்புக்களும் வழங்கும் நீரையே மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது-என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (1-111)

# நகரின் குப்பைகளை அகற்றுவதற்கு பொதுமக்கள் பங்களிப்பு வழங்கவில்லை

## மாநகர முதல்வர் கவலை தெரிவிக்கின்றார்

யாழ்ப்பாணம், ஒக்.25

மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு பொதுமக்கள தமது முழுமையான பங்களிப்பினை வழங்கவில்லை என்று யாழ்.மாநகர முதல்வர் திருமதி பற்குணராசா யோகேஸ்வரி கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்குப் பொதுமக்களது நன்மை கருதி இரவு நேரங்களில் ஊழியர்கள் கடமைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடமைக்கமர்த்தப்பட்டுள்ள ஊழியர்கள் குப்பைகளை அகற்றுவதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பினை வழங்கவில்லை. அதாவது தமது வீட்டுக் கழிவுகளை பொதிசெய்து வைக்காமல் வீதிகளில் கண்டபடி வீசிவிடுகின்றார்கள்.

இதனால் எமது ஊழியர்கள் தமது கடமையினை செவ்வனவே செய்வதற்கு முடியாமல் உள்ளது.

குறிப்பாக யாழ்.-பருத்தித்துறை வீதியில் உள்ள பொதுமக்களே இவ்வாறு நடந்து கொள்வதாக மாநகரசபை ஊழியர்கள் என்னிடம் முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

இது விடயத்தில் பொது மக்கள் அக்கறையுடன் செயற்பட்டால் மட்டுமே எமது நகரினை சுத்தமான நகரமாக மாற்றியமைக்க முடியும் - என்றார் அவர். (1-9)

# வன்னியிலிருந்து அழைத்து வரப்பட்ட அச்சுவேலிவாசி ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 25

வவுனியாவிலிருந்து நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்டவர்களில் ஒருவர் நேற்று அதிகாலை சாவச்சேரி ஆதார வைத்தியசாலையில் மரணமானார்.

நோயினால் பீடிக்கப்பட்டிருந்த இவர் தொடர்ச்சியாக பயணம் செய்து களைப்படைந்ததாலும் உரிய வேளைகளில் உணவு அருந்தாமையினாலும் மரணம் சம்பவித்திருக்கலாமென வைத்தியசாலை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டு சிறிது நேரத்தில் மயங்கி வீழ்ந்ததாக வும் உடனடியாக சாவச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. அச்சுவேலியை சேர்ந்த தாமோ தரம் பிள்ளை ஆறுமுக சாமி (வயது - 52) என்பவரே மரணமானவர் ஆவார். இவரது சடலம் சாவகச்சேரி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.(1-207)

# யாழ்.நகரில் இன்று பல்சுவை இசைநடன நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக்.25

'தாருண்யட ஹெடக்' வழங்கும் பல்சுவை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சன்ன விஜேவர்த்தனவின் குழுவினர் வழங்கும் நடனம், அன்ரனி சுரேந்திராவின் சக்தி இசைக்குழு என்பன இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்விற்கு தென்னிந்திய முன்னணி இசையமைப்பாளர் விஜய் அன்ரனியும் அவரது குழுவினரும் அத்தோடு நடிகர் விஜயின் தாயாரும் பாடகியுமான ஷோபா சந்திரசேகர் மற்றும் சங்கீதா, வினயா, பிரசன்னா, பாலாஜி, மாயா, தினேஸ்கனகரட்ணம், பாத்திய, சந்துஷ், இராஜ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (1-78)

# 'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பினர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினர்

வலி.வடக்கு, ஒக்.25

நாமல் ராஜபக்ஷவின் இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் அபிவிருத்திச் செயல்திட்டத்தின் கீழ் ஒரு பாடசாலை மற்றும் பத்து விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் நடைபெற்ற கரப்பந்தாட்ட மைதான கையளிப்பு நிகழ்வில் வைத்து ரோகித ராஜபக்ஷ இந்த உபகரணங்களை கையளித்தார்.

இந்த உபகரணங்கள் காங்கேசன்துறை ஐக்கிய வி.க., யாழ்ப்பாணம் இளங்கதிர் வி.க., சங்கானை யுத் வி.க, இளவாலை வெண்புறா வி.க., மட்டுவில் மோகனதாஸ் வி.க., ஆவரங்கால் மத்தி வி.க., பன்னாலை கணேசா வி.க., ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க., அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. மற்றும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன. (1-23-86)

# பெண் சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.25

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தின் பெண்சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது

பாடசாலை அதிபர் தி.சத்தியபாலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைச் சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் சீ.பட்டுவான்கல கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக இலங்கைச் சாரணர் சங்கத்தின் தேசிய பயிற்சி ஆணையாளர் எம் .ஈ .எஸ். ஜெயசிங்கே, சர்வதேச சாரணர் ஆலோசகர், உதவிப்பிரதம ஆணையாளர்சிரச சார்ளி, இலங்கை சாரணர் சங்க பதில் தேசிய பயிற்சி ஆணையாளர் ஜெராட் கூரி ஆகியோரும் கௌரவ விருந்தினராக இலங்கைச் சாரணர் சங்க வட மாகாண ஆணையாளர் ரி. என் .போஜனும் கலந்து கொள்வர்.

# 'வீணை' சஞ்சிகையின் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.25

வீணை சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கௌரவ விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான எஸ். சிவதாசனும், எஸ். சந்திரகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (04)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 09 | 26.10.2009 திங்கட்கிழமை |
| திதி: | அட்டமி மு.இ. 07.07 வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் மு.ப. 09.12 வரை |
| சுபநேரம்: | 12.03 - 01.33 வரை |
| ராகுகாலம்: | 07.33 - 09.03 வரை |

இரத்ததான வாரம் 24 தொடக்கம் 30 வரை

குருதிக்கொடையாளர்கள்
★ஆரோக்கியமானவர்களாகவும் உடல் நிறை 50 கி.கி.இற்கு மேற்பட்டவராகவும் வயது 18 தொடக்கம் 60 வரையிலும் இரத்ததானம் வழங்குவதற்கு சிலமணி நேரங்களுக்குள் உணவு உட்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
★ஆண், பெண் இருபாலரும் எவ்வித பாதிப்பும் இல்லாது நான்கு மாதத்திற்கு ஒரு தடவை இரத்ததானம் செய்யலாம்.



இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். 021 2223063

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் நடந்த யுத்த விசாரணை போன்று இலங்கையிலும் நடத்தப்பட வேண்டும் என்கிறது ஐ.நா.

கொழும்பு, ஒக்.25

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தில் இறுதிக் கட்டத்தில் யுத்தக் குற்றச் செயல்கள் புரியப்பட்டனவா என்பதனை கண்டறிவதற்கு காஸாவில் இடம்பெற்ற விசாரணை போன்றதொரு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கோரியுள்ளது.

யுத்தத்தின் இறுதி மாதங்களில் என்ன நடந்தது அல்லது என்ன நடக்கவில்லை என்பது குறித்து பூரண விசாரணை ஒன்று நடத்தப்படவில்லை என்று மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் பேச்சாளர் றுபேர்ட் கொல்வில் தெரிவித்தார்.

இலங்கை படையினரும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையினால் ஜுரர் றிச்சட் கோலட்ஸ்ரோன் தலைமையில் நடத்தப்பட்ட காஸா யுத்த விசாரணை போன்றதொரு விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (1)

# வவுனியாவில் இருந்து நேற்று 1,260 பேர் வந்தனர்

யாழ்ப்பாணம், ஒக்.25

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து தீவகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த 410 குடும்பங்களைச் சேர்ந்த 1,260 பேர் நேற்று அழைத்து வரப்பட்டனர்.

சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் தங்கவைக்கப்பட்ட அவர்கள், பதிவுகள், படப்பிடிப்பு,காசோலை வழங்கல் ஆகியன பூர்த்தியடைந்ததை அடுத்து போக்கு வரத்து சபை பஸ்கள் மூலம் அவர்களது பிர தேசங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

நேற்று வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வடமராட்சியைச் சேர்ந்தவர்களாவர். தென்மராட்சியைச் சேர்ந்த 125 குடும்பங்களைச் சேர்ந்த 371 பேரும் வந்து சேர்ந்துள்ளனர்.

அங்கு நடந்த நிகழ்வில் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒவ் வொரு குடும்பத்துக்கும் 5 ஆயிரம் ரூபா உதவித் தொகையை வழங்கினார்.

யாழ் .செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன், தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் ஆகியோர் வந்து சேர்ந்தவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பும் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

**இன்றும் 3,000 பேர் இங்கு வருவர்**

அதேவேளை-

வவுனியா முகாமில்இருந்து இன்று 3 ஆயிரம் பேர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருக்கின்றனர் என்று அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும் பணிகளை செட்டிக்குளத்தில் மேற்கொள்ளும் யாழ். செயலக பிரதித் திட்ட பணிப்பாளர் எஸ். சுதர்சன் நேற்றிரவு தெரிவித்தார். (அ-1-207)

## இனப்பிரச்சினைக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்தமை, பொருளாதார அபிவிருத்திக்கான பாரிய எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

எனினும் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப் படாமல், அவர்களின் அரசியல் அபிலாசைகள் வழங்கப்படாமல் இருக்கும் நிலை, தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை மீண்டும் தோற்றுவிக்கலாம். இந்த நிலையில், வெளிநாட்டு முதலீட்டு சாத்தியங்கள் குறைவடையும் அபாயம் உண்டு என்று - உலகவங்கி அறிக்கையில் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு அடிப்படையிலேயே இலங்கைக்கான வெளிநாட்டினது முதலீட்டு நடவடிக்கைகள் அமையும் என உலக வங்கி தெரிவித்துள்ளது. (அ)

## ஜனாதிபதித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்து லிப்ரன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் ஹேரத் கூறினார்.

தனது ஆறுவருட ஆட்சிக் காலத்துக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக மஹிந்த ராஜபக்ஷ அளித்த உறுதிமொழியை மீறி தேர்தல் நடத்த அனுமதிக்கப் போவதில்லை. என்றும் எதிராகதொடர் போராட்டம் நடத்து வோம் என்றும் விஜித ஹேரத் சொன்னார். (அ-1)

## வேம்படி மகளிர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத் தகவலைத் தெரிவித்தார்.

பிரஸ்தாப காவலரண்களை அகற்றுமாறு பத்திரிகைகளின் மூலம் பொதுமக்கள் விடுத்து வந்த கோரிக்கை தொடர்பாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

அதனையடுத்து அமைச்சர் பாதுகாப்புத் தரப்புக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து அந்தக் காவலரண்களை அகற்ற நகரப் பாதுகாப்பு அதிகாரி உறுதியளித்துள்ளார் - என்று முதல்வர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## புல்மோட்டையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா ஆண்டியாபுளியங்குள முஸ்லிம் பாடசாலையில் இயங்கும் இடைத்தங்கல் முகா மில் தங்கவைக்கப்பட்டு, அங்கிருந்து ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்படுவர்.

முதலில் தீவகத்தைச் சேர்ந்த ஒரு தொகுதியினர் புல்மோட்டையில் இருந்து இன்று வவுனியாவுக்கு அழைத்துவரப்பட்டு நாளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட உள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ந்து புல்மோட்டையில் தங்கியுள்ள யாழ்.மாவட்டத்தின் ஏனைய பிரதேச மக்களும் வவுனியாவுக்கு அழைத்துவரப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படவிருக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1,500 பேர் அங்கு தங்கியிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## சரத்பொன்சேகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்த பின் அவர் வெளிநாடு ஒன்றுக்கு இப்போது தான் முதல் தடவையாக விஜயம் செய்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## பெற்றோலியக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளானார்கள்.

கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் எரிபொருள் பெறுவதற்காக வாகனங்கள் 2,3 கிலோ மீற்றர் தூரத்துக்கு கியூ வரி சையில் நின்றன. கொழும்பு நகரில் உள்ள பல எரிபொருள் நிலையங்கள் நேற்று நண் பகலுடன் மூடப்பட்டன.

வவுனியா நகரிலும் நேற்று எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. வாகனங்கள் நீண்ட கியூ வரிசையில் காத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உடனடியாக எரி பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்றும் போதியளவு கையிருப்பு இருப்பதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். அலுவலகம் தெரிவித்தது.

அதேவேளை -

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் நாளை ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த இருக்கின்றனர்.

இப்பேச்சுவார்த்தையில், சம்பள உயர்வு தொடர்பாக சாதகமான முடிவு கிடைக்கா விட்டால், துறைமுகம், நீர் விநியோகம், மின்சாரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தொழிலாளர்களும் போராட்டத்தில் குதிப்பர் என்று தொழிற் சங்கங்களின் பிரதிநிதி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

சம்பள உயர்வை வழங்க வேண்டும் இல்லையேல் இடைக் கால கொடுப்பன வாக 5ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் என்று பெற்றோலியக் கூட்டுத் தாபன தொழிற்சங்கங்கள் கோரியே போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் தொடர்பாக எரி பொருள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி நேற்றிரவு கருத்துத் தெரிவிக்கையில் -சம்பள உயர்வு வழங்க நிதி இல்லை. இதன் காரணமாக சம்பள உயர்வை வழங்க முடியாதுள்ளது - என்றார்.

## தமிழக அரசின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். தமது நிலைப்பாடு தொடர்பாக மாநாட்டு ஒருங்கிணைப் பாளரான இராஜேந்திரன் அவர்களுக்கு தான் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் அவர் கூறினார்.

உலகத் தமிழர் தலைவராக தன்னைக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிற கருணாநிதி, இந்த விவகாரத்தில் ஒரு சாதகமான நிலைப்பாட்டினை எடுத்திருக்க வேண்டும். செம்மொழி மாநாடு நடத்துவது மிகவும் பயனுள்ளது என்பதில் எந்தவித மான கருத்து வேறுபாடும் இல்லாத போதிலும், அதில் அனைவரும் கலந்துகொள்வதற்கான சூழ்நிலையும் அவசியம்- என்றும் பேராசிரியர் சிவத்தம்பி தெரிவித்தார். (அ)

## கிளிநொச்சி.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்லப்பட்டவர்கள் மல்லாவி மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள னர். அங்கிருந்து அவர்கள் தமது வீடுகளுக்குச் சென்று துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட அனுமதிக்கப்படுகின்றனர்.

முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்தவர் களில் மற்றும் ஒருசாரார் இன்று அழைத்துச் செல்லப் பட்டு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் பகல் நேரத்தில் தமது வீடுக ளுக்கு சென்று துப்புரவு செய்யும் பணிகளை மேற்கொள்ள அனுமதிக் கப்பட்டுள்ளனர். இரவில் பாடசாலைகளிலே தங்கவேண்டும் என்று அறிவுறுத் தப்பட்டுள்ளனர்.

அவர்கள் தமது வீடுகளை புனரமைக்கவும், தேவையான பொருள்களை கொள்வனவு செய்யவும் வசதியாக 25,000 ரூபா ஒவ்வொரு குடும்பத் துக்கும் வழங்கப் படுகின்றது.

அந்தப் பிரதேச அரச அதிகாரிகள் அந்த மக்களின் தேவைகளை மதிப்பீடு செய்து உதவிகளை வழங்கி வருவதாக அறிவிக் கப்படுகின்றது. (அ-1)

## புலமைப்பரிசில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ளது.

இப்பெரு விழா யாழ். மத்திய கல்லூரி யில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தால் அருகில் உள்ள வேம்படி மகளிர் கல்லூரிக்கு மாற்ற நேர்ந்துள்ளது என்பதனை ஏற்பாட்டாளர்களான வெற்றித் தேர்வுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

வருடாந்தம் நடைபெறும் வெற்றித் தேர்வு புலமைப் பரிசில் மாணவர்கள் கௌரவிப்புடன் இம்முறை மாவட்டத்தில் சகல பகுதிகளையும் சேர்ந்த வசதி குறைந்த பாடசாலைகளில் பரீட் சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக் கப்படுவர்.

இன்றைய கௌரவிப்பு விழா காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் கோப் பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தின ராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அன்ன லிங்கம் பிரேம்சங்கரும், பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமை யாளர் கணபதிப்பிள்ளை ஆனந்தராஜாவும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர் களாகத் தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் வி.அருளானந்தம், மக்கள் வங்கியின் யாழ்.கிளை உதவிப் பிராந்திய முகாமையாளர் சு.ஹென்றி, 'உதயன்' பொது மக்கள் உறவு முகாமையாளர் திருமதி நாகேந்திரராணி தங்கராஜா, ஈ.எஸ்.பேரம்பலம் அன்சன்ஸ் உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல். ஓங்காரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர்.

ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், சயன்ஸ் ஹோல் இயக்குநர் இரா. அருட்செல்வன், காவேரி ரெக் ரைல்ஸ் உரிமையாளர் ப.சண்முகதாசன், மலர் ரெக்ரைல்ஸ் உரிமையாளர் ம.தேவ லிங்கம், ராஜா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் விசேட விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

வெற்றித்தேர்வு வளவாளர்களும் இன் றைய விழாவில் கௌரவிக்கப்படுவர். (அ-204)





S&M Consultant Service Branch Office

148, Temple Road, Jaffna - (புனிசேவ் முன்பாக)

யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் !!!

நவம்பர் மாதப் பிரவேசத்துக்கான நடவடிக்கைகள்அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.இவ்வருடத்திற்கான இறுதிப் பிரவேசத்தில் இணைந்து இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் !!!

வார நாள்களில் கைத்தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு நேரம் ஒதுக்கி உடனடியாக நேரடியாக சந்தித்துக் கொள்ளலாம்.

STUDY IN EUROPE - MBBS/MD

LAGANSK STATE MEDICAL UNIVERSITY

(UKRAINE EAST EUROPE) இல் இணைந்து சிறிலங்கா MEDICAL COUNCIL லினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வர விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உடன் தொடர்பு - 0774528818
TEL.: 021 222 3818
E.MAIL: MG 1404_2009@YAHOO.COM (561830)

148, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்
(புனிசேவ் முன்பாக)




HP PRINTERS பாவனையாளர்களுக்கு

TONER'S களை வாங்கி HP யின் பரிசுப்பொருட்களை பெற்றுக்கொள்ளுங்கள்

சந்தையில் HP போலி TONER விற்பனையில் உள்ளது மேலும் அது மிகக்குறைந்த விலையில் கிடைப்பதனாலும் அந்த TONER பாவிப்பதால் உங்கள் PRINTER ன் செயற்திறன் மிக விரைவில் குறைந்து, இறுதியில் PRINTER ரைப் பாவிக்க முடியாத நிலை ஏற்படும். இதைத்தவிர்க்க ORIGINAL HP TONER களைப் பாவிக்கவும். போலிகளை விற்பனை செய்வதை தவிர்க்கவும்.

HP TONER களை NALIN னில் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

NALIN நிறுவனம் HP ன் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனம்.

அனைத்து HP , CANON TONER களை உத்தரவாத்துடன் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நளினின் STORE ல் ........

- PRO 2.6 (Dual core) , Pro 2.9 (Core 2 duo) மிக மிகக்குறைந்த விலையில்.
- ADSL / BROAD BAND (1 Port ,4 Port , 8 Port , Wired / Wireless.
- LAPTOP , HP BRANDED PC.
- 16" DELL/16" View Sonic / 17" HP / 19" HP.
- 320 GB SAMSUNG/ 500GB HDD ( மிக மிகக்குறைந்த விலையில் )
- Scaner , Printer.
- Mother Board Asus /Foxconn / Asrock.
- Webcam (10 மேற்பட்ட வகையில்)
- ORIGINAL SOFTWARE.
- Woofer , புத்தம் புதிய Models.
- Casing (Power Logic ,Micro)

கணனி கணனி உதிரிப்பாகங்கள் மேலும் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது

NET WORK சார்ந்த அனைத்து விடயங்களுக்கும் நளினுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

NALIN Information Technologies Pvt Ltd

TP : 0212221166 , 0777667974 email : nalinpvt@nalininfotech.com 44/3A, [illegible] லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.10.2009இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# முதல் சம்பியன்ஸ் லீக் தொடரில் கிண்ணம் வென்றது 'நியூ சவுத் வேல்ஸ்'



முதல் சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' தொடரில் கிண்ணம் வென்று அசத்தியது நியூ சவுத் வேல்ஸ் அணி. ஐதராபாத்தில் 23 ஆம் திகதி நடந்த இறுதிப் போட்டியில், 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டிரினிடாட் டுபாகோ அணியை வீழ்த்தியது. சகல துறை வீரராக அசத்திய நியூ சவுத் வேல்ஸ் வீரர் பிரட் லீ ஆட்ட நாயகனாக ஜொலித்தார்.

சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடந்தது. மேற்கிந்தியத் தீவுகளில் ஐதராபாத்தில் நடந்த இத்தொடரின் இறுதிப் போட்டியில், அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அணியும், மேற்கிந்தியத் தீவுகளின் டிரினிடாட் டுபாகோ அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் ஜெயித்த டிரினிடாட் அணி தலைவர் டேரன் கங்கா களத்தடுப்பை தேர்வு செய்தார். நியூ சவுத் வேல்ஸ் அணிக்கு வார்னர், ஹியூஸ் தொடக்கம் தந்தனர். ராம்பால் வேகத்தில் வெறும் 3 ஓட்டங்களுக்கு அவுட்டானார் ஹியூஸ். அடுத்து பந்து வீச வந்த பிராவோ, வார்னர் [19], காடிச்சை [16] விரைவில் ஆட்டமிழக்கச் செய்து நம்பிக்கை அளித்தார்.

நடுவரிசை வீரர்களான ஹென்ரிக்ஸ் [4], ரோஹ்ரர் [16], டேனியல் [3] கைகொடுக்கவில்லை. 83 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது நியூ சவுத் வேல்ஸ் அணி. பின்னர் ஸ்டீவன் ஸ்மித், பிரட் லீ ஜோடி சேர்ந்து அணியை மீட்டனர். பொறுப்புடன் ஆடிய இந்த ஜோடி 7 விக்கெட்டுக்கு 49 ஓட்டங்கள் சேர்த்து ஆறுதல் அளித்தது. ஸ்டீவன் 33 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். மறு முனையில் அதிரடியில் மிரட்டிய பிரட் லீ, ஓட்டம் குவிப்புக்கு உதவினார். 5 சிக்சர்கள் உட்பட இவர் 48 ஓட்டங்கள் விளாச, 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்த நியூ சவுத் வேல்ஸ் அணி 159 ஓட்டங்கள் எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய டிரினிடாட் அணி தொடக்க வீரர்களை விரைவில் இழந்தது. பெர்கின்ஸ் [0], பரத் [14], சிம்மன்ஸ் [4] சொற்ப ஓட்டங்களுக்கு பெவிலியன் திரும்பினர்.

பின்னர் களமிறங்கிய பிராவோ, வந்த வேகத்தில் அதிரடி காட்டினார். ஆனால் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட இவர், 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தலைவர் கங்கா [19], ராம்தின் [16] சாதிக்க தவறினர். அடுத்து வந்த போலார்ட் 3 சிக்சர்களை விளாசி நம்பிக்கை தந்தார். ஹாரிட்ஸ் சுழலில் இவரும் [26] வெளியேற, டிரினிடாட் அணியின் வெற்றி கேள்விக்குறியானது. பின்வரிசை வீரர்களான ஸ்டூவர்ட் [4], மொகமத் [1] ஆகியோர் ஏமாற்ற, 15.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்த டிரினிடாட் டுபாகோ அணி, 118 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது.

இத்தொடர் முழுவதும் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் அசத்திய நியூ சவுத் வேல்ஸ் வீரர் பிரட் லீ, தொடர் நாயகன் விருதை கைப்பற்றி அசத்தினார். இத்தொடரில் அதிக சிக்சர் அடித்த வீரர் என்ற விருதை டிரினிடாட் அணி வீரர் போலார்ட் [16 சிக்சர்] தட்டிச் சென்றார்.

சம்பியன்ஸ் 'ருவென்ரி-20' தொடரில் கிண்ணம் கைப்பற்றி அசத்திய நியூ சவுத் வேல்ஸ் அணி, 34 கோடி ரூபா பரிசு வென்றது. இரண்டாவது இடம் பிடித்த டிரினிடாட் டுபாகோ அணி 19 கோடி ரூபா பரிசுத் தொகை கைப்பற்றி அசத்தியது.

★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★

# உசைன் போல்ட்டுக்கு அதி உயர் விருது




சர்வதேச தடகள போட்டிகளில் சாதித்த உசைன் போல்ட்டுக்கு, ஜமெய்க்கா அரசின், ஆர்டர் ஆப் ஜமெய்க்கா, என்ற உயர்ந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

பீஜிங் ஒலிம்பிக்கில் 100மீற்றர் மற்றும் 200மீற்றர், ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்று சாதித்த ஜமெய்க்காவின் உசைன் போல்ட் சமீபத்தில் நடந்த பேர்லின் தடகள போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் 9.58 வினாடி கடந்து புதிய சாதனை படைத்தார். இந்த விருது ஜமெய்க்கா அரசின் உயர்ந்த விருதுகளில் நான்காவது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஜமெய்க்காவின் கவர்னர் ஜெனரல் டாக்டர் கென்னத் ஆலன், மிகுந்த ஆரவாரத்துக்கு இடையே, போல்ட் டுக்கு விருதினை வழங்கினர்.

★★★★★★★★

# மிஸ்பா உல்ஹக் இல்லை



நியூசிலாந்து அணியுடன் டெஸ்ட், ஒருநாள் மற்றும் 'ருவென்ரி - 20' தொடர்களில் விளையாட உள்ள பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கு யூனுஸ்கான் தலைவராகவும், 'ருவென்ரி - 20' போட்டிகளுக்கு ஷாகித் அப்ரிடி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்று வகை போட்டிகளுக்கான அணிகளில் இருந்தும் நட்சத்திர வீரர் மிஸ்பா உல் ஹக் நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணியில் இடம் பிடித்த மிஸ்பா [35], அதன் பிறகு முதல் முறையாக நீக்கப்பட்டுள்ளது குறிப் பிடத்தக்கது. தொடக்க வீரர் இம்ரான் பர்கத் 3 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அணியில் சேர்க்கப் பட்டுள்ளார். வேகப்பந்து வீச்சாளர் முகமது ஆசிப், சகலதுறை வீரர் அப்துல் ரசாக், சல்மான் பட், காலித் லத்திப் ஆகியோரும் மீண்டும் இடம் பிடித்துள்ளனர்.

★★★★★★★★

# ஆண்டுதோறும் இந்திய அணியுடன் கிரிக்கெட்



இனி ஆண்டுதோறும் இந்தியாவுடன் டெஸ்ட் அல்லது சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் விளையாட அவுஸ்திரேலியா முடிவு செய்துள்ளது.

ஒக்ரோபர் 25 ஆம் திகதி முதல் இந்தியாவுடன் 7 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாட அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியா வந்துள்ளது,

இந்நிலையில் அடுத்த 6 ஆண்டுகளில் ஆண்டுதோறும் டெஸ்ட் அல்லது ஒரு நாள் போட்டிகளில் இந்தியாவுடன் அவுஸ்திரேலியா விளையாடவுள்ளது. இதற்காக இந்தியா, அவுஸ்திரேலிய அணிகளுடன் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஆலோசித்து வருகிறது.

ஆண்டுதோறும் டெஸ்ட் அல்லது ஒரு நாள் போட்டிகளில் இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் விளையாடும். போட்டி இந்தியாவிலோ அல்லது அவுஸ்திரேலியாவிலோ நடத்தப்படும்.

இத்தகவலை கிரிக்கெட் அவுஸ்திரேலியா வெளியிட்டுள்ளதாக மெல்போர்னிலிருந்து 'சிட்னி ஹெரால்ட் மோர்னிங்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த 6 ஆண்டுகளில் ஆண்டுதோறும் கோடை காலத்தில் அவுஸ்திரேலியாவுக்கு இந்தியா டெஸ்ட் விளையாட வரும்.

அடுத்த கோடையிலும் இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு ஒரு நாள் போட்டிகளில் விளையாடச் செல்லும்.

மாறாக இந்தியாவுக்கு அவுஸ்திரேலிய அணி ஆண்டுதோறும் டெஸ்ட் அல்லது ஒரு நாள் போட்டியில் விளையாடுவதற்கு வரும். ★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணைத் தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:

2360488, 2360694, 4873929.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1975 ஆம் ஆண்டு பிறந்த, உத்தரம் 2 ஆம் பாதம், கிரகபாவம் 42 ½ உள்ள பட்டதாரி ஆசிரியைக்கு, அரச தொழில் அல்லது வியாபாரம் செய்யும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனை எதிர் பார்க்கிறார்கள். விளம்பர இல: 3950 மே/பா உதயன்.

## Book keeping, Audit சேவை

யாழ்.நகரில் Book keeping, Audit மற்றும் VAT உட்பட சகல வரிச்சேவைகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0773746884, 0714603362

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 34 வயது, மிதுனம், பாவம் குறைந்த பொறியியல் பட்டதாரி மொறட்டுவை, அவுஸ்திரேலிய நிரந்தர வதிவிடம், ஆணுக்கு சமகல்வியறிவுடைய அழகான முப்பது வயதிற்குக் குறைந்த மணமகள் தேவை. பிரதேச வேறுபாடு முக்கியமல்ல.

தொடர்புகளுக்கு: 0777 550863

(சி/561296)

## விற்பனைக்கு

ரார் பூச்சாடி வகைகள், ரார் கோஸ்மைப் வகைகள், தாச்சி (மேசன்), பூச்சாடி அடித்தட்டு என்பன விற்பனைக்குண்டு.

இல.13, நவீனசந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

(90075)


## தென்மராட்சி முகாம்களில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.25

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கிவரும் இராமாவில், மிருசுவில் ஆகிய நலன்புரி நிலைய மக்களுக்கான மருத்துவ முகாம் நேற்றுமுதல் இடம்பெற்று வருகின்றது. இந்தமுகாம் இன்றும் நடைபெறும்.

நாமல் ராஜபக்ஷவின் 'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மருத்துவ முகாமில் பங்குபற்ற தென்னிலங்கையிலிருந்து மருத்துவர்கள் குழு யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளது.

மருத்துவ முகாமுக்குத் தேவையான பொருள்களும் மருந்து வகைகளும் உத்தியோகத்தர்களும் யாழ். பிராந்திய பிரதி மாகாணப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(1-207)


## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை கற்கோவளம் Ice Factory முன்பாக 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பு ரூபா 150,000.00 தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஆ.சிவமலர், சட்டத்தரணி, 144, உள்துறைமுக வீதி, திருகோணமலை. (சி/558498)

## வீடு வளவு விற்பனைக்கு

சுண்டிக்குளி, குருசோ வீதியில் ஒருவீடும் வளவும், ஈச்சமோட்டை விதானையார் வீதியில் ஒரு வீடும் வளவும், யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் மாடிவீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

0776146434, 0213008577

(90142)

## குருக்கள் தேவை

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம் (இலண்டன்)

Enfield Nagapoosani Ambaal Temple

இலண்டனில் பிரபல்யம் மிக்க என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்திற்கு திறமையும், சிறந்த முறையில் ஆலயக் கிரிகைகளில் தேர்ச்சியும் பெற்ற சிவாச்சாரியார்கள் தேவைப்படுகின்றார்கள்.

இப்பணிக்கு விண்ணப்பங்களை அனுப்ப விரும்புபவர்கள் பின்வரும் விபரங்கள் அடங்கிய சுய விபரக்கோவையை எமக்கு தபால் / தொலைநகல் / மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கவும்.

- குருத்துவ தகைமைகள்
- குருத்துவ அனுபவங்களும், சேவையாற்றிய இடங்களும்
- மேலதிக தகைமைகள் (ஆங்கிலம், கணனி, கணக்கியல்)
- முழுமையான நிழற்பட பிரதி
- இரு துறைசார் சிபாரிசுகள் (Referees)

**விண்ணப்ப முடிவுத்திகதி 22.11.2009**

இப்பணிக்கான சேவைக்காலம் : 2 வருடங்கள். இந்து தர்ம, சமூக நோக்கு மற்றும் மனிதநேயமனப்பாங்கும் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

மின்னஞ்சல் : jobs@ambaal.org
தொலைநகல்: 0044 208 150 5667
முகவரி : Secretary
Enfield Nagapoosani Ambaal Temple
61-65 Church Lane,
Edmonton, London
N9 9PZ,
UK.


## வேலைவாய்ப்புக் குறித்த பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஒக்.25

நவீன உலகின் தொழில் வாய்ப்புச் சந்தையால் மாணவர்கள் சிறந்த வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தினர் பாடத்திட்ட மீளாய்வு சம்பந்தமான பயிற்சிப்பட்டறையை நடத்தவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

இந்தப் பாடத்திட்ட மீளாய்வுப் பயிற்சிப்பட்டறையில் அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த துறைசார் வல்லுநர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விவசாயபீடப் பீடாதிபதி அறிவித்துள்ளார். (1-10)

## சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்களை ஏற்பது தற்காலிக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக் 25

புதிதாகச் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்கும் செயற்பாடு நாளை மறுதினத்திலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய தினங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கான விண்ணப்பம் ஏற்பதே இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளது.

மீண்டும் இந்தச் செயற்பாடுகள் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து வழமைபோல் நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (1-10)




வசீகரத் தோற்றத்திற்கு!

## சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், நுங்குமப்பூ, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தோல், முகப்பரு, கரும்புள்ளி, பாலுண்ணி, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், வீங்குதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் ஏற்படும் எரிவை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

'சிவா நறுமணப் பூங்கா'

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/I 250.

## தங்குமிட வசதி

கொழும்பில் உங்கள் தேவைகளை தமிழ் மொழியில் துரிதமாக மேற்கொண்டு வீடு திரும்புவதற்கு நகரத்திற்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ளதும் குறைந்த கட்டணத்துடனும் கூடிய தங்குமிட வசதி நாள், மாத அடிப்படையில் இங்கு கிடைக்கும்.

உங்களுக்கு அளிக்கும் எங்களின் வசதிகளில் சில:

* 24மணி நேர பாதுகாப்பு
* தனியான குளியலறை
* அறைகளுக்கு இன்ரனெற் மற்றும் உள்ளூர் அழைப்பு வசதிகள்
* வான் வசதி
* குளிரூட்டிய/குளிரூட்டப்படாத அறைகள்
* சுடுநீர் வசதி
* கேபிள் TV வசதி

KALKI HOUSE
79, MESSENGER STREET,
COLOMBO - 12.
TEL: 011-2342251, 2338562

(சி/561903)


## சாரணர் தினமும் சின்னம் சூட்டும் நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக்.25

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை மாவட்ட சாரணர் தினமும், பெண்சாரணர்களுக்குச் சின்னம் சூட்டும் வைபவமும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (204-236)

## மிருசுவில் அ.த.க.வின் பரிசில்நாள் நிகழ்வு

மிருசுவில் அ.த.க.பாடசாலை பரிசில் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தமும், சிறப்பு விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், வலயக் கணக்காளர் செ. செந்தூரன் ஆகியோரும் கௌரவவிருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் செ. சுப்பிரமணியமும் கலந்து கொண்டனர். (203-207)


ஜப்பான் வீட்டு மின் உபகரணம்

கடை விலையிலும் காட்டிலும் அரைவாசிக்கும் குறைவாக

இப்போது யாழ்ப்பாணத்தில்

ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்து இருக்கும்

## கிரவுன் மஹா சேல்

தற்பொழுது நடைபெறுகிறது

புதிய சந்தைத் தொகுதி மேல்மாடி (பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்னால்)



ஜப்பான் செட் 5pce separate ... எங்களிடம் 29,990/- லிருந்து
4pce separate கடையில் 100,000/- எங்களிடம் 24,990/- லிருந்து

உடன் அழையுங்கள் 077 13 99 566

21"Flat TV ரூ. 22,990/- அத்துடன் ரூ 8490/- பெறுமதியான DVD Player ஒன்று இலவசம்

29"Flat TV கடையில் ரூ. 60,000/- எங்களிடம் ரூ. 27,990/- அத்துடன் ரூ 8490/- பெறுமதியான DVD Player ஒன்று இலவசம்

Brand New Buffel 15" 350W

Computers PIII Rs. 2900/- PIV Rs. 6900/-

ஜப்பான் CD / VCD Compo ரூ. 9,990/- லிருந்து

ஜப்பான் தையல் இயந்திரம் ரூ. 5750/- லிருந்து Singer, Juki, Brother, Janome

Washing Machine வாங்கினால் Steam Iron ஒன்று இலவசம் upwards

Portabale Radio ரூ. 1,750/- லிருந்து Tuner/cassetta/CD

உறுதிப்பத்திரத்துடன்

projection TV கடையில் 1 லட்சம் எங்களிடம் 80,000 அத்துடன் ரூ 19,000/- பெறுமதியான Home Theatre System இலவசம்

குளிரூட்டி ரூ. 18,500/- லிருந்து upwards

| | கடையில் | எங்களிடம் |
|---|---|---|
| Prologic Amp | ரூ. 60,000/- | ரூ. 14,990/- |

Musical Key Board Home Theater System

Center Speaker ரூ. 1,500/- அதிலும் 25% ம் கழிவு

14" Normal TV 9,990/-

21" Normal TV 13,990/-

100w Amp Rs. 6000/- Upwards

DVD/MPFG-4 with 60 Preset Digital AM/FM Tuner

கிரவுன் இன்வெஸ்ட்மென் (தனி) கம்பனி

இலங்கை முழுவதும் கிளைகள் ...

மஹரகம : 011 - 27 46458 ஜா எல : 011 - 22 29914 இரத்தினபுரி : 045 - 22 26605 கண்டி : 081 - 22 22151
கடவத்த : 011 - 29 20281 நிட்டம்புவ : 033 - 22 96840 பாணந்துறை : 038 - 22 414.. மருதானை : 011 - 26 90920
நுகேகொடை : 011 - 27 68401 குருநாகல் : 037 - 22 29647 கம்பஹா : 033 - 22 34625 ... : 011 - 22 80643
கேகாலை : 035 - 22 22602 பொல்கஸ்ஓவிட : 011 - 27 04823 நீர்கொழும்பு : 031 - 22 2... ஹொரண 034 - 22 60101 வவுனியா : 077 - 35 66895

## யாழ்ப்பாணத்தில் காணி தேவை

இலங்கையில் பிரபல சினிமாத் தியேட்டர் நிறுவனத்திற்கு

**யாழ்ப்பாணத்தில்**

நல்ல சூழலில்
90 பர்ச் காணி அல்லது
ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டு
கைவிடப்பட்ட பழைய தியேட்டரானாலும்
வாங்குவதற்கு அல்லது
நீண்ட கால குத்தகைக்கு
பெற விரும்புகிறார்கள்.

FLEX Graphic

உங்கள் விண்ணப்பங்களை 7 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்

தொடர்புகொள்ள: K.V. Raj
No: 7, Elibank Road, Colombo 05.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நெஞ்சம் மறவாத நினைவுகளுடன்..

2ஆம் ஆண்டு



அமரர்
**சோமசுந்தரம் கந்தையா**
மண்மகிழ: 04.02.1932
கண்நெகிழ: 18.10.2007
(பூர்வபக்க ஸப்தமி)

10ஆம் ஆண்டு



அமரர்
**கந்தையா சிவகுமார்**
மண்மகிழ :11.01.1963
கண்நெகிழ:13.10.1999
(பூர்வபக்க சதுர்த்தி)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து
எம் வாழ்வுக்கு வழிகாட்டிய தெய்வங்கள்
எமைவிட்டு நீண்ட தூரம் சென்றாலும்
என்றென்றும் உங்கள் நினைவு எம்மோடு நின்றிருக்கும்

268/5, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
### வதிரி, கரவெட்டி
### வருடாந்த பரிசில் தினவிழா-2009

இன்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ள கல்லூரியின் வருடாந்த பரிசில் வழங்கும் நிகழ்வில் பரிசில்கள் பெறும் சாதனையாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**க.பொ.த. (சா/த) 2008 சிறப்புப் பெறுபேறு**

6A இற்கு மேற்பட்ட பெறுபேற்றினைப் பெற்றோர்:
செல்வி அனுதர்சா செல்வராசா
செல்வி மயூரி பத்மநாதன்
செல்வி திவ்யா ஜெயக்குமார்
செல்வி நிரோசா நந்தகுமார்
செல்வி தேனுவதனி பாலச்சந்திரன்
செல்வி தரணிகா சுந்தரம்
செல்வி ஆராதனா சிவபாலன்

**பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்:**

க.பொ.த.(உ/த) 2007
கலைப்பிரிவு
செல்வி சூர்யா நமசிவாயக் குருக்கள்
செல்வி றெஜிக்கா நிரஞ்சலா டேவிட் றெஜினோல்ட்
செல்வி பஞ்சலாவி விவேகானந்தன்

க.பொ.த.(உ/த) 2009
வர்த்தகப்பிரிவு
செல்வி கௌசிகா கணேசன்
செல்வி கோபியா கதிர்காமராஜா

க.பொ.த.(உ/த) 2009 கலைப்பிரிவு
செல்வி இராஜநந்தினி தருமராஜா
செல்வி பிரவீனா இராஜரட்ணம்
செல்வி கலைச்செல்வி சுப்பிரமணியம்
செல்வி துவாரகா சிவகுருநாதன்
செல்வி பிரேமினா சிவக்குமார்
செல்வி வனஜா கதிரவேல்
செல்வி அர்ஜுனா கிருஸ்ணானந்தசெல்வம்
செல்வி கார்த்திகா அருமைநாயகம்
செல்வி கஸ்தூரி பாலசுப்பிரமணியம்
செல்வி விஜிதா ரகுநாதன்
செல்வி மிதுலா செல்வராஜா
செல்வி வானதி கிருஸ்ணபிள்ளை
செல்வி காயத்திரி நாகேந்திரன்
செல்வி மிதுலா யோகராஜா
செல்வி விதுசா சிவசரணம்
செல்வி நித்யா கருணாநிதி

**தேசிய மட்டத்தின் சாதனையாளர்கள்**

செல்வி சங்கீர்த்தனா மோகன் (தரம் 6)-
தேசிய மட்ட கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் கணிதத்தில் அதியுயர் விருதுபெற்று இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெறவுள்ள சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

செல்வி ஞானகீர்த்தனா சாயிபவான்-
15 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதல் நிகழ்வில் கலந்து மாவட்ட, மாகாண மட்டத்தில் சாதனைகளை நிலைநாட்டி தேசிய மட்டப் போட்டியிலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இத்துடன் இன்றைய நிகழ்வில் பாடசாலைமட்டம், வலய, மாவட்ட மற்றும் மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டி பரிசில் பெறும் ஏனைய சாதனையாளர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/வடமராட்சி ம.ம.கல்லூரி.

(சி/561824)


## சியட் ஸ்ரீலங்கா கிரிகெட் விருது 2009.
## போட்டி ஆரம்பமாகிவிட்டது, விளையாடுவதற்கு நீங்கள் ஆயத்தமா?

வரலாற்றில் முதற்தடவையாக சியட்டும், ஸ்ரீலங்கா கிரிகெட்டும் ஒன்றிணைந்து இலங்கையின் தலைசிறந்த தேசிய கிரிகெட் வீரர்களை* பரிசளித்து கௌரவிக்கவிருக்கிறது.

CEAT
Sri Lanka Cricket
AWARDS 2009



- △ உங்களுக்கு விருப்பமான தேசிய வீரரை தெரிவுசெய்வதற்கு, SMS மூலம் CEAT என்று டைப் செய்து (இடைவெளி) கிரிகெட் வீரரின் பெயரை* குறிப்பிட்டு, எயார்டெல், டயலொக், மொபிடெல், டீகோ போன்ற கையடக்க தொலைபேசியிலிருந்து 6646க்கு அனுப்பி (உங்கள் SMS ஆதரவினை 27ம் திகதி ஒக்டோபர் நள்ளிரவு மட்டும் அளிக்கலாம்.) (SMS கட்டணம் - ரூபா. 5/- வரிகள் நீங்கலாக)
- □ இவ்வருடத்திற்கான சியட் மக்கள் விருதினை பெற அவர்களுக்கு ஆதரவளியுங்கள்.
- ○ விருது வைபத்தின் போது, விசேட அழைப்பினையும் வெற்றி பரிசாக பெற்றிடுங்கள். (அதிஷ்டசாலிகளாக பத்து பேர் தெரிவுசெய்யப்படுவார்கள்)
- ▷ உங்களுக்கு விருப்பமான வீரருடன் குதுகளிக்கலாம்.

*கிரிகெட் வீரர்களின் குறும் பெயர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Matthews | Mahela | Sanga | Udawatte | Sanath | Avishkha | Dilruwan |
| Mendis | Prasanna | Kulasekera | Paranavitana | Thushara | Vandort | Ruchira |
| Warnapura | Herath | Prasad | GihanR | Dilshan | Ishara | Gayan |
| Kapugedera | Udana | ChamaraS | Kandamby | Thilan | Welegedera | Lokuhettige |
| MBandara | Mubarak | Murali | Saram | Vaas | Sujeewa | |
| Dilhara | Kaushalya | Mahroof | Malinga | Upul | Lokuarachchi | |

CEAT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளக்குடியமர்ந்தோருக்கு வீடுகள் அமைக்க ஏற்பாடு

நல்லூர்,ஒக்.25

யாழ்ப்பாணத்தில் இருந்து மீளக்குடியமர்ந்த அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கென ஒரு தொகுதி வீடுகளை அமைத்துக் கொடுக்க ஐ.ஓ.எம். நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து ஏற்கனவே வேலணை பிரதேச செயலகப் பிரிவுகளில் மீள் குடியமர்ந்தவர்களுக்கென ஐ.ஒ.எம் நிறுவனம் 61 வீடுகளை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(203- 111)

## மாருதி கார் விற்பனைக்கு

14000 கி.மீற்றர் ஓடிய தனி உரிமையாளருடைய, நகரப்பகுதியில் மட்டும் வரையறுத்த பாவனையிலிருந்த NPKA தொடரிலக்கமுடைய மாருதி (சில்வர்) 800 CC (புதிய வகை) விற்பனைக் குண்டு. மாறாத விலை ரூபா 1150 000 (பதினொரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) கடன் வசதிகள் செய்து தரப்படும். ஞாயிறு மட்டும் பார்வையிடலாம்.

396, நாவலர் வீதி,
கைலாயபிள்ளையார் கோயிலடி (உதயன் ஒழுங்கை),
யாழ்ப்பாணம். (சி/558482)

## பாலர் பாடசாலை ஆசிரியர் தேவை

சாவகச்சேரி நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் "BRITISH BUSINESS SCHOOL" ஆங்கில பாலர் பாடசாலைக்கு ஆங்கிலத்தில் கல்வி கற்பிப்பதற்கும் சேவை மனப்பான்மையுடன் பணி புரியக்கூடிய இளம் பெண் ஆசிரியைகள் தேவை. முன் அனுபவம் கட்டாயமில்லை.

எதிர்வரும் 24.10.2009 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

தொடர்பு:
021 222 5796 (சி/558477)
140, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

## முதியோர் இல்லம்

யாழ்.நகரில் மிகப் பாதுகாப்பான, அமைதியான, இயற்கை வனப்பு மிக்க சூழலில் சகல வசதிகளும் அமைந்த இல்லத்தில், தேவைக்கேற்ப நிறைவான சேவையுடனும், பாசம்மிக்க பராமரிப்புடனும், தகுந்த கட்டணத்துடனும், வெளிநாட்டில் உள்ள உறவுகள், யாழ்.குடா நாட்டில் உள்ள தங்கள் முதியோர்களைப் பராமரிப்பதற்கு வசதியாகவும், முதியோருக்கான வதிவிடங்கள் தயார் நிலையில் உள்ளன.

பதிவுகளுக்கு:
140 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 077 3627055 (சி/561819)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சிவபாலசுந்தரம் [சுந்தரம்]



சரசாலையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை, ஆசிரியர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவபாலசுந்தரம் நேற்று (24.10.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மனோகரியின் அன்புக் கணவரும் கவாஸ்கர் (கனடா), விமாகி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி 2009 A/L), தனஜிசன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி தரம் - 05) ஆகியோரின் அன்புத் தந்தையும் வைத்தி லிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.10.2009) ஞாயிற்றுக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆசிரியர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (90253)
தகவல்:
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Canon Digital Photocopy (IR 2016J),Sharp Digital Photo copy (AR 5316E) Printer உடன்,Samsan (A4 Photocopy, Printer, Scanner, Faxஎன்பவற்றை உள்ளடக்கியது) விற்பனைக்குண்டு.

**அபிஷேக் மல்ரி ஸ்போட்**

இராமநாதன் கல்லூரி முன்பாக,
கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம்.
0718565540, 0779005856
0217200882. (90247)

## COURSE COUNSELLORS

கொழும்பில் உள்ள CLARET உயர் கல்வி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையில் பகுதி/முழுநேரமாகப் பணிபுரிய O/L, AL படித்த 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் COURSE COUNSELLORS தேவை. நீங்கள் வதியும் பகுதியிலேயே தொழில் புரிந்து மாதம் 30.000 மேல் உழைக்க அரிய வாய்ப்பு. நேர்முகத் தேர்வு 31.10.2009 முற்பகல் 10 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் நடைபெறும்.

தொடர்பு:

**CLARET INSTITUTE OF HIGHER STUDIES**
NO. 772 POINT PEDRO ROAD,
NALLUR JAFFNA. T.P: 0771869708
Head Office:
No. 806, ALUTHMAWATHA ROAD.
COLOMBO-15 T.P: 0113090301 (ஜி/561905)

## மணவாளக் கோலவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.25

சண்டிலிப்பாய், கல்வளை வீதியில் உள்ள காளி அம்பாள் ஆலயத்தின் மணவாளக்கோலவிழா எதிர்வரும் 30ஆம்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணியளவில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட எழுந்தருளி மண்டபத்தில் அம்பிகையின் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு இடம்பெற்று அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

(9)

## வேலணைப் பிரதேச செயலகம் சான்றுகளைப் பாதுகாக்க நடவடிக்கை

வேலணை பிரதேச செயலகம் தனது பகுதிக்கு உட்பட்ட புராதன பெருமைகள் கொண்ட சான்றுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி புங்குடுதீவு பகுதியில் உள்ள பெருக்குமரம், கண்ணகி அம்மன் கோவில் பகுதியில் உள்ள வெளிச்ச வீடு, சோல்பரி பிரபுவினால் திறந்து வைக்கப்பட்ட கட்டடம், அல்லைப்பிட்டி பெல்ரவர் போன்றவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வேலணை பிரதேச செயலர் மு. நந்தகோபாலன் தெரிவித்தார்.

(203- 111)

## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் யாழ்.இந்து கௌரவ குடும்பம் UK Citizen 31, 35, 37 வயது, கனடா Citizen 33, 35 வயது, அமெரிக்கா கிறீன் காட் விசா 36 வயது, அவுஸ்ரேலியா Citizen 37 வயது கொலண்ட் Citizen 36 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக்கட்டணம் இல்லை.

லண்டன் தொடர்பு:-
00447508295863, 00447535384166
Fax No: 00442086810707,00442086720673 (சி/561811)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், மெமோறியல் வீதியில் 4½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0717353527 (90249)

## அறை/வீடு வாடகைக்கு

கொழும்பு, வெள்ளவத்தையில் AC/NON AC அறைகள், 2 அல்லது 3 அறைகளுடன் கூடிய வீடுகள் நாள் அல்லது மாத வாடகைக்குண்டு. தொலைபேசி மூலம் பதிவுகள் மேற்கொள்ளலாம்.

**Suriyan Rest,**
18/3, Station Road, Wellawatta.
T.P.: 112581441, 112556175. (சி/561815)

## காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் பலாலி வீதியில் (இலுப்பையடிச் சந்திக்கு அண்மையில்) 2½ பரப்புக்காணி, கடைகள், வீடு, நல்ல தண்ணீர்க் கிணறு, 3பக்க சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு. காணியை இரண்டு துண்டுகளாக பிரிக்கவும் / விற்கவும் முடியும்.

தொடர்பு: திரு. க. துரைரட்ணம்
புதிய இல- 33, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (90248)

## வீடு வளவு விற்பனைக்கு

காரைநகர், புதுறோட் சந்தியில் 10 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 9688339 (90250)

## மரண அறிவித்தல்கள்

### சூசையேசுதாசன் மகராசன்பிள்ளை

[முன்னாள் கடல் அட்டை வியாபாரி]



குருநகரைப் பிறப்பிடமாகவும் 39,5ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சூசையேசுதாசன் மகராசன் பிள்ளை நேற்று (24.10.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோனிஸ் சூசை - மரியஆனந்தம் தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான பிரகாசம் கித்தோரி தம்பதியரின் மருமகனும் யூஸ்தீனம்மாவின் அன்புக் கணவரும் சூசைமாக்கு (லாசர்), சூசை அல்பேட் (சின்ராசா) ஆகியோரின் சகோதரரும் பத்மா, றாஜன், புனிதன், கிறிஸ்ரெலா, காலஞ்சென்ற ஜெய சூரியா மற்றும் குமார், பிரியா, தர்ஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிறிஸ்ரி, சிராணி, றஜனா, ஆனந்தன், நிதி, தயா, பிரியா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற தங்கம் மற்றும் எற்விணம்மா, லில்லி, துரைசிங்கம், சின்னராசா, ராணி, சகாயன், ஜசிந்தா ஆகியோரின் மைத்துனரும் ஸ்ராலின், ஜனனி, சூரியா, செகானி, சேந்தன், எலின், எலிசா, ஜெயந்தன், ஜெனிபன், றொசானி, செலின், சிந்தி, தர்சிகா, யுஸ்தீனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39, 5ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (90246)
தகவல்:
பத்மா (மகள்).

### அமரர் செல்லையா சிவசாமி

[திக்கம் சுருட்டுக் கம்பனி முதலாளி]



திக்கம் சந்தி, அல்வாய் மேற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது திருச்சியில் வசிப்பவருமாகிய செல்லையா சிவசாமி அவர்கள் 21.10.2009 புதன்கிழமை திருச்சியில் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி பவளகொடியின் அன்புக் கணவரும் அருந்தவராசா, ஜெயலட்சுமி, ஜெயகொடி, திலகேஸ்வரி, கெங்காதேவி, இராசகுமார், கெங்காதரன், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு தந்தையும் சுசீலா, சிவ்ஞானம், பத்மாதேவி, செல்வராசா, சந்திரகுமார் சிவலக்ஷ்மி, தயா, நதியா ஆகியோரின் அன்பு மாமனும் மற்றும் காலஞ்சென்ற லட்சுமிப்பிள்ளை, ஐயாத்துரை, சின்னத்துரை மற்றும் செல்வரத்தினம் தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஈஸ்வரபாதம், ராஜேந்திரம், சத்தியசீலன், காலஞ்சென்ற சக்தி சிவபாலசந்திரன் மற்றும் குலமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் வசந்தன், வசந்தரூபா, ஜெயக்குமார், வசந்தமேனன், ராகவன், ரேவதி, சிவதர்சனா, சிவதர்சிகா, அனேஸ்குமார், சிந்துஜன், சிவரஜனி, சிவகாந்தன், கீர்த்தனா, ரஜனா சிவபாலன், லங்கேஸ், மனேஸ், தீபதர்சினி, கேதீஸ்வரன், செல்வரூபி, செல்வமதி, சோழன், சோதியா, சிவதர்சன், அர்ஜுன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆசிகா, அட்ஷயா ஆகியோரின் ஆசைப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திருச்சியில் இன்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவஞானம் கொழும்பு: 0112679150
சி.இராசகுமார் திருச்சி:
00919894062492 (90255)
தகவல்:
திரு.திருமதி ஜெயலட்சுமி

A LIFE - TIME CHANCE

# STUDY MEDICINE

4th & 5th Batch arrived @ Belarus on 07th September & 12th October



MBBS / MD Degree's - recognised by Medical Council's in Sri Lanka, Maldives, USA, UK, Australia WHO & worldwide.

**LITHUANIA** (Schengen & E.U.)
MD
Doctor of Medicine
KAUNAS UNIVERSITY OF MEDICINE
6 வருடங்கள் (ஆங்கில மொழி)
பாடநெறிக்கான கட்டணம்
5500 யூரோ ஒரு வருடத்துக்கு
Engineering/Management Degrees also Available From KAUNAS TECHNOLOGICAL UNIVERSITY

**BELARUS** (Eastern Europe)
MD
Doctor of Medicine
VITEBSK STATE MEDICAL UNIVERSITY
6 வருடங்கள் (ஆங்கில மொழி)
பாடநெறிக்கான கட்டணம்
U.S..டொலர் 3800 ஒரு வருடத்துக்கு

**NEPAL**
MBBS
Bachelor of Medicine / Bachelor of Surgery
KATHMANDU UNIVERSITY
4 1/2 + 1 வரு உள்ளகப் பயிற்சி
(ஆங்கில மொழி)
ஏறத்தாழ 780,000 ரூபா
அரையாண்டுக்கு(8 அரையாண்டுகள்)

**INDIA**
ENGINEERING DEGREES
B.E.
REVA COLLEGE -Bangalore
(4 வருடங்கள்)
கணனி விஞ்ஞானம்,தகவல் விஞ்ஞானம், மின்னியலும் தகவல் தொடர்பாடலும், மின்னியலும் இலத்திரனியலும், இயந்திரப் பொறியியல்.(ஆங்கில மொழி)
பாடநெறிக்கான கட்டணம்
U.S.டொலர் 5000 ஒரு வருடத்துக்கு

Student with O/L, A/L & Pending Result can Apply

PATHE ACADEMY
The People's Academy...
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06. Tel : 2586418

For Admissions contact
0773017883 (Tamil)
www.patheacademy.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org